297

# MLA Debates

Official Report

Vol. 2 No. 8

1967

D
V211, 31 'N67
N67. 2.8
65007

வெளியீடு—22—2—1968]
Issued—22—2—1968]

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூன் 27
Tuesday, 27th June 1967

தொகுதி II—எண் 8
Volume II—No. 8

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

V211, 31 N67
N67.208

## உள்ளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| 1 வினாக்கள், விடைகள் .. .. .. .. .. | 843-871 |
| 2 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவு திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. .. .. | 871-944 |
| 3 அறிவிப்பு— | |
| பேரவை அலுவல் ஆய்வுக்குழு தீர்மானம் .. .. | 945 |
| 4 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 945 |

D
V2:11, 31 N67
N67. 2. 8
65007

# தமிழகச் சட்டப் பேரவை

**செவ்வாய்க்கிழமை, 1967 ஜூன் 27.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்-விடைகள்", மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

## 1. வினாக்கள், விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### விலைவாசி புள்ளி விவரம்.

***80 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-வது ஆண்டு முதல் 1967 இன்று வரை விலைவாசி புள்ளி விவரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது? விவரமென்ன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தமிழகத்தில் உணவுப் பொருள்களின் மொத்த விலைவாசிப் புள்ளிவிவரம் 1960-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து 11-3-1967 அன்று வரை 549-லிருந்து 731-ஆக உயர்ந்துள்ளது. அதே சமயத்தில் வணிகப் பொருள்களின் மொத்த விலைவாசிப் புள்ளிவிவரம் 606-லிருந்து 1153 ஆக உயர்ந்துள்ளது.

**Dr. H. V. HANDE :** What is the base year when 100 was taken as the index and what are the measures that the Government have taken to prevent this fast increasing price factor?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1939-வது ஆண்டு ஆகஸ்ட் 21-ஆவது நாளில் இருந்து 100 புள்ளியைக் கணக்கு வைத்து இந்தப் புள்ளிவிவரம் கணக்கு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** விவசாய விளைபொருள்களின் விலைகளுக்கும், ஏனைய பொருள்களின் விலைகளுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** விலைவாசியைக் குறைக்கின்ற அளவிலே சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகிறது. பொருளாதார நிபுணர்களுடன் கலந்து பேசி, எந்தெந்த முறையைக் கையாளலாம் என்று யோசிக்கப்படுவதோடு உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிக்கிறது.

[1967 ஜூன் 27

**திரு. கே. விநாயகம்:** உணவுப்பொருள் மக்களுக்கு அத்தியாவசியம். அதனுடைய விலையை 1960-லே இன்டெக்ஸ் 100-ஆக வைத்துக்கொண்டு பார்த்தால் இப்பொழுது குறைந்தது மூன்று மடங்கு, நான்கு மடங்கு ஏழு மடங்கு கூட வந்திருக்கிறது. அப்படி நாள்தோறும் ஏறிக்கொண்டே போகிறதே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு உங்களிடம் கொள்கை இருக்கிறதா? அதைச் செய்ய முடியுமா? அதைச் செய்வதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா? இல்லையென்றால் அதை ஆண்டவனுக்கே விட்டுவிட்டு அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் இருந்துவிடுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** விலைவாசியின் புள்ளி விவரம் கனம் அங்கத்தினர் சொல்லுவதுபோல் 1960-லேயிருந்து கணக்கிடப்படவில்லை. 1939-ல் இருந்து இதுவரை கணக்கிடப்பட்டிருக்கிறது உணவுப் பொருள் விலையை கட்டுப்படுத்துகின்ற வகையிலே முன்பு இருந்த அரசாங்கம் ஆண்டவனை நம்பிவிட்டிருக்கலாம். ஆனால், இந்த அரசாங்கம் மக்களுடைய சக்தியை நம்பி அதிகாரிகளையும் நிபுணர்களையும் கலந்து எந்த அளவிலே கட்டுப்பாடு செய்யமுடியுமோ அந்த அளவிலே கட்டுப்பாடு செய்ய முடியும்.

**திரு. எஸ். முருகையன்:** 1960-ல் இருந்து 1966 வரையிலே உணவுப்பொருள்களின் விலை ஏறியிருப்பதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இன்றைக்கு மூன்று நான்கு மடங்கு விலை ஏறி இருக்கிறதென்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சென்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** 1962-லே சீன ஆக்கிரமிப்பு செய்ததாலும் 1964-லே பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்ததின் காரணமாகவும் விலைவாசி உயர்ந்துவிட்டிருக்கிறது. சென்ற அரசு விலைவாசிகளைக் கட்டுப் படுத்த முயற்சி எடுத்ததா என்று தெரியவில்லை. அவர்கள் எடுக்கவில்லை என்பது விலை உயர்ந்திருப்பதில் இருந்தே தெரிகிறது.

**திரு. நா. காசிராமன்:** கோயம்பத்தூர், சென்னை நகரங்களில் வாழ்க்கைப் புள்ளியைக் கணக்கிடும்போது, அதாவது காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ் தயாரிக்கும்போது, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று கணக்கெடுத்துக்கொள்ளப்படுமா? அல்லது வேறு என்ன விகிதத்தில் கணக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தயார் செய்யப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ் தயாரிக்கும்போது அரிசியைப் பொருத்த வரையில் சப்சிடைஸ்ட் பிரைஸ் எடுத்துக் கொள்ளப்படுமா என்பது பிரச்சினை. அதை அரசாங்கம் கவனித்துப் பரிசீலனை செய்யும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு அரசாங்கம் ஒரு விலையும், வெளி மார்க்கெட்டிலே ஒரு விலையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?



1967 ஜூன் 27]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இது பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** விலைவாசி படிப்படியாக தொடர்ச்சியாக ஏறிக்கொண்டே இருப்பதற்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம் என்பது தெரியுமா? அப்படி இருந்தால் அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மத்திய அரசினுடைய கொள்கைதான் காரணம். அதைக்கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே மான்யம் கொடுத்துதவவேண்டுமென்று மாநில சர்க்கார் கேட்கிறது. இன்னும் மத்திய சர்க்காரின் உதவி கிடைக்கவில்லை.

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் ஏற்கனவே இருந்த சர்க்கார் கடைப்பிடித்துவந்த கொள்கைகளும், மத்திய சர்க்கார் பணவீக்கத்தை ஏற்படுத்தியதும்தான். நோட்டு அச்சடிப்பதற்கு மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களைக் கலந்து ஆலோசிப்பதற்கு மத்திய சர்க்கார் ஏதேனும் மாநில சர்க்காருக்கு தகவல் அனுப்பியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தனிக்கேள்வி போடவும்.

**திரு. சோ. அழகர்சாமி:** சபாநாயகர் அவர்களே, விவசாயிகளினுடைய விளைபொருளான பருத்தி சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 25 சத விகிதம் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அந்த பாதிப்பதான நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இதற்குத் தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

**திரு. தி. பொன்னுமலை:** நெல்விலை இறங்கியும் உரத்தின் விலை அதிகமாகியும் இருப்பதைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** உரத்தின் விலை ஏற்றத்திற்குக் காரணம் டீவால்யுவேஷன்—ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதாகும். அதற்காக மத்திய சர்க்காரின் உதவியை இந்த அரசு கேட்டிருக்கிறது. உரத்தினுடைய விலையைக் கட்டுப்படுத்தவேண்டும்; கட்டுப்படுத்தாவிட்டால் சப்சிடியை யாவது தரவேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறது.

**திரு. எம். பூபதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாய அமைச்சர் முதலிலே பதில் சொல்லும்போது சீன ஆக்கிரமிப்பினாலேயும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பினாலேயும் விலை உயர்ந்தது என்று சொன்னார்கள். அது மட்டும்தான் காரணமா? விலைவாசி உயர்வதன் வேறு காரணங்களும் இருக்கின்றனவா?

காரணமாக ஜில்லா ரீதியாக அங்கங்கேயுள்ள தொழிலாளர்களி னுடைய பஞ்சப்படியை உயர்த்துவார்களா என்று தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இரண்டு அமைச்சர் களையும் ஏக காலத்தில் கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கிறார்கள். பாகிஸ்தான், சீன ஆக்கிரமிப்புகள் மட்டும் அல்லாமல் பருவநிலை தவறியதாலும் விலைவாசி உயர்ந்துவிட்டது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** ஐயா, பருப்பு வகைகளான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, கடலைமாவு முதலியவற்றின் விலை உயர்ந்ததின் காரணம் மத்திய அரசினுடைய கொள்கையும், வடக்கு மாநிலங்களில் இருக்கக்கூடிய கொள்கையும் தான் என்பது இந்த சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் உறுப்பினர் கூறியது கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எஸ். ராமலிங்கம்:** மத்திய சர்க்காருக்கு அப்பாற்பட்டு. அதைத் துணைக்கு இழுக்காமல், இந்த சர்க்கார் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித் திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மத்திய சர்க்கார் கட்டுப் படுத்துகின்றதன் காரணமாகத்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்து வதற்கு இயலவில்லை. நாமாகத் தனித்து இயங்கவேண்டுமென்றால் ஏற்கனவே சொல்லிவந்த பிரிவினை மூலமாகத்தான் இயங்கமுடியும். (ஆரவாரம்) இப்போது மத்திய சர்க்காரோடு இணைந்து ஒருமைப் பாடு உணர்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதால் அது இந்தச் சர்க்காரைக் கட்டுப்படுத்துகின்ற நிலை இருக்கிறது. இதனால்தான் மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுகிறது இந்த ஆட்சி.

*Supply of mechanised boats*

*81. Q.—THIRU M. VEDACHALAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) the number of boats (30 H.P.) built in the Madras Boat Yard so far, i.e., from 1965 to 1967;

(*b*) the procedure adopted for distributing boats to the fishermen;

(*c*) the procedure adopted for distributing the boats during the last three allotments;

(*d*) the cost of each boat; and

(*e*) the make of the engine fitted to the boats so far and the makes of engines proposed to be fitted in future?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:**

(அ).—

| ஆண்டு. | மெரினா படகுகட்டும் துறை. | | ராயபுரம் படகுகட்டும் துறை. | |
|---|---|---|---|---|
| | 30' படகு. | 32' படகு. | 30' படகு. | 32' படகு. |
| 1965–66 .. .. | 34 | 1 | 22 | .. |
| 1966–67 .. .. | 46 | .. | 5 | 8 |

(இ) விசைப்படகுகளை வழங்குவதற்காக கடற்கரையோர மாவட்டம் ஒவ்வொன்றும் ஒரு தனிப்பிரிவாக எடுத்துக்கொள்ளப் படுகின்றது. படகுகள் வேண்டி வந்த விண்ணப்பங்கள் மாவட்ட வாரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு விசைப் படகைச் செலுத்த மூவர் தேவைப்படுகின்றனர். எனவே, படகுகள் குழு வாக உள்ளவர்களுக்கென்று ஒதுக்கப்படுகின்றனவே தவிர, தனிப் பட்டவர்களுக்கு ஒதுக்கப்படுவதில்லை. சம்பந்தப்பட்ட கரை யோர மாவட்டங்களில் உள்ள மீனவர்களில் பின்வரும் ஜனத் தொகை விதாசாரப்படி படகுகள் அனைத்தும் ஒதுக்கப்பட்டன.

| மாவட்டத்தின் பெயர் | சதவீதம். |
|---|---|
| | 12 |
| சென்னைமாநகர் | 9 |
| செங்கற்பட்டு | 9 |
| தென் ஆர்க்காடு | 25 |
| தஞ்சாவூர் | 14 |
| திருநெல்வேலி | 31 |
| கன்னியாகுமரி | |
| மொத்தம் | 100 |

(உ) 1964-ம் ஆண்டிலிருந்து, பின்வரும் நடைமுறைக் கிணங்க படகுகள் ஒதுக்கப்பட்டன.—

(1) பயிற்சி பெற்றவர்களையே கொண்ட குழுக்கள் அனைத் திற்கும் படகுகள் முழுஅளவில் ஒதுக்கப்படுகின்றன.

(2) எஞ்சியுள்ள படகுகளில் 50 சதவிகிதம், பயிற்சி பெற்றவர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் உள்ள தொகுதிக்கு ஒதுக்கப்படுகின்றன.

(3) எஞ்சிய 50 சதவிகித படகுகளை இத்தொகுதிகளில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையைக் கருதாது அவர்கள் பதிவு செய்துகொண்டுள்ள வரிசை முறைக்கேற்ப ஒதுக்கப்படு கின்றன.

(எ) முப்பது அடி அளவுள்ள படகுக்கும் 32 அடி அளவுள்ள படகுக்கும் தற்காலிகமாக நிச்சயிக்கப்பட்டுள்ள விலை பின் வருமாறு:—

| | முழு விலை. ரூபாய். | சலுகை விலை. ரூபாய். |
|---|---|---|
| 30' படகு உடற்பகுதி .. .. | 19,000 | 14,250 |
| இயந்திரம் .. .. | 16,900 | 8,450 |
| | 35,900 | 22,700 |
| 32' படகு உடற்பகுதி .. .. | 34,000 | 25,500 |
| இயந்திரம் .. .. | 25,700 | 12,350 |
| | 59,700 | 37,850 |

படகுகள் ஒதுக்கப்படும்போது, தற்காலிகமாக நிச்சயிக்கப் பட்ட விலை மட்டுமே கணக்கிடப்படுகிறது. சென்னையிலுள்ள மாநிலக்கணக்காயர் படகுகளின் அடக்கவிலை சிட்டாவுக்கு ஒப்புதல் வழங்கிய பிறகு முடிவான விலை நிச்சயிக்கப்படும்.

(ஒ) இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ள படகுகளில் பின் வரும் இயந்திரவகைகள் பொருத்தப்பட்டுள்ளன:—

1. பெட்டர் (Petter) .. இறக்குமதி செய்யப்பட்டது.
2. கியூபோடா (Kubota) .. ,,
3. டையா (Daiya) .. ,,
4. கவென்ட்ரி விக்டர் (Coventry Victor) ,,
5. அயில்சா கிரேய்க் (Ailsa Craig) .. ,,
6. யான்மார் (Yanmar) .. ,,
7. டார்பிடோ (Torpedo) .. ,,
8. புக் (Bukh) .. ,,
9. கிர்லாஸ்கர் (Kirloskar) .. உள்நாட்டு தயாரிப்பு.
10. ரஸ்டன் (Ruston) .. ,,

அடுத்த முறை ஒதுக்கும்போது ஒப்படைக்கப்படும் படகுகளில் பின்வரும் இயந்திர வகைகள் பொருத்தப்படலாம்.

1. டார்பிடோ (Torpedo) .. இறக்குமதி செய்யப்பட்டவை.
2. புக் (Bukh) .. ,,
3. யான்மார் (Yanmar) .. ,,
4. ரஸ்டன் (Ruston) .. உள்நாட்டுத் தயாரிப்பு.

**திரு. மு. வேதாசலம் :** தலைவர் அவர்களே, 1965, 1966, 1967 ஆகிய மூன்று வருஷங்களில் இவ்வளவு குறைவாக விசைப்படகு கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அந்தத் [illegible] முடியுமா? இதுபற்றி சர்க்காரிடம் ஏதாவது யோசனை இருக்[illegible]





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சர்க்காருடைய நிதி நிலைக்கு ஏற்பவும், மத்திய சர்க்காருடைய உதவியைப் பெற்றும், மற்றும் வெளி நாட்டினரிடமிருந்து கிடைக்கின்ற நிதியை வைத்துக்கொண்டும் இதுவரையில் 456 படகுகள் கட்டப்பட்டிருக் கின்றன.

**திரு. நா. காசிராமன்:** இந்த விசைப்படகுகளுக்கு சென்னை யிலே தயாரிக்கும் ஃபெர்குஸன் என்ஜின்களைப் பொருத்துவதற் கான சாத்தியக் கூறுகளைப் பற்றி சர்க்கார் ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சென்னையிலே உற்பத்தி யாகக்கூடிய இரண்டு என்ஜின்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். மற்றவைகள் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ:** இந்த விசைப் படகுகள், கடலில் சென்று மீன்பிடிக்கும் மீனவத் தொழிலாளர் களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றனவா அல்லது மற்றவர்களுக் கும் வழங்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மீனவர்களுக்கு வழங்கப் படுகின்றன. அதே நேரத்தில் நான் முன்பு சொன்னதுபோல், பயிற்சி பெற்றவர்களையே கொண்ட குழுக்கள் அனைத்திற்கும் படகுகள் முழு அளவில் ஒதுக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள படகுகளில் 50 சதவிகிதம் பயிற்சி பெற்றவர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் உள்ள தொகுதிக்கு ஒதுக்கப்படு கின்றன. இதரர்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்படுகிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்த விசைப்படகுகள் விநியோகம் சம்பந்தமாக, சென்னையிலே இருப்பவர்களுக்கு ஒரு சிலருக்குக் கொடுத்து, அவர்களுக்கு உத்தரவும் போய்விட்டு, அவர்களும் அதற்கு வேண்டிய டெபாசிட் தொகையையும் அரசாங்கத்திற்கு கட்டிவிட்ட பிறகும், பல பேர்களுக்கு இன்னும் போட்கள் வழங் கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அது உண்மையா? புகார்கள் வந்ததன் விளைவு என்ன? ஏன் உரிய மக்களுக்கு போட் கள் தரப்படவில்லை என்று அரசாங்கம் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி உண்மை தான். திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த நாங்கள் மார்ச்சு மாதம் 6-ம் தேதி கோரினோம். (திரு. கே. விநாயகம்: அரசியலை இதில் கலக்கவேண்டியதில்லை) இது அரசியல் சம்பந்தம் தான். மார்ச்சு மாதம் 4-ம் தேதி படகு கள் வழங்குவதுபற்றி உத்தரவு போட்டிருக்கிறார்கள். மார்ச்சு 5-ம் தேதி விடுமுறை. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மார்ச்சு மாதம் 4-ம் தேதி இம்மாதிரி அவசரம் அவசரமாக உத்தரவு போட்டதிலே சில தவறுகள் இருப்பதாக புகார்கள் வந்துள்ளன. அவை பரிசீலனையில் இருக்கின்றன.

**DR. H. V. HANDE :** Sir, are the Government aware of the report made by Mr. S. K. Chettur when he was the Chief Secretary of this Government, with regard to malpractices noticed in the manufacture of these boats? One particular point raised was that

a number of boats were fitted with Indian-made engines and those engines had not even worked for more than a fortnight. Also, are the Government aware of the fact that on account of this deficiency in the engine, fishermen were not able to use these boats properly. Also, is it a fact that these Indian engines are fitted into these boats because the Fisheries Department is having a particular interest in a particular company and if so, what steps the Government have taken to prevent these malpractices and see that these boats fitted with such Indian engines are not supplied to the fishermen?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சர்க்கார் தனிப்பட்ட கம்பெனிகளோடு தொடர்பு வைத்திருக்கிறது, அதனால் தான் அவர்களிடம் வாங்குகிறார்கள் என்பதற்குப் போதுமான தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்களிடம் ஏதாவது தகவல்கள் இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இவ்வித குறைபாடுகள் எதுவும் நேராமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இப்பொழுது கொடுக்கப்பட்ட படகுகள் சரியான முறையில் கடலில் இயங்கவில்லை என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் போக்குவது எப்படி என்பதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கிறோம். சர்க்காருக்குத் தனிப்பட்ட எந்தக் கம்பெனியுடனும் தொடர்பு இருக்கிறது என்ற தகவல் கனம் அங்கத்தினர் அவர்களிடத்தில் இருக்குமானால், அதைத் தயவு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஐஸ்லண்டு அரசாங்கத்தின் ஆதரவுடன், மத்திய சர்க்காருடைய உதவியுடன், நம்முடைய சென்னையில் ஒரு புதிய விஞ்ஞான முறைப்படி பெரிய மீன் பிடிக்கும் தொழில் ஆரம்பிக்க அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. மு. வேதாசலம்:** தலைவர் அவர்களே, விசைப்படகுகள் பொதுவாகவே டைரக்டர் ஆஃப் ஃபிஷரீஸ் அவர்கள் மூலமாகவே தான் வழங்கப்படுகின்றன. டைரக்டர், அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்களே அல்லாமல் மற்றவர்களுக்கு எவ்வளவு நாளானாலும் கொடுப்பதில்லை. ஆகவே, அந்த முறையை மாற்றி அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** டைரக்டர் அவர்களால் வருகின்ற விண்ணப்பங்களை சீனியாரிடி பிரகாரம் தான் வைத்து படகுகள் வழங்கப்படுகின்றன. எஞ்ஜின்கள் வழங்கப்படுவது என்பதில் 'லாட்' எடுக்கப்படுகிறது. 'லாட்' எடுப்பதில் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்பதுதான் அங்கத்தினருடைய புகாருக்கு இடம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். யார் யாரை வைத்துக்கொண்டு 'லாட்' எடுக்கிறார்கள் என்பதிலும் சந்தேகம் அங்கத்தினருக்கு இருக்கலாம். எதிர்காலத்தில் யார்



யாருக்குப் படகுகள் கொடுக்கவேண்டும் என்று வரிசைப்படுத்தப் பட்டிருக்கிறதோ அவர்கள் அத்தனை பேர்களையும் வைத்துக் கொண்டு 'லாட்' எடுக்கும் முறையை அமைத்தால் சந்தேகம் வராமல் இருக்கலாம் என்று அந்த வகையில் சர்க்கார் யோசனை செய்து வருகிறது.

**திரு. ப. மகாதேவன்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில் படகுகள் கொடுக்க வேண்டாம் என்று உத்தரவு போட்டிருப்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நண்பர் திரு. விநாயகம் அவர்களுக்குச் சொன்ன பதிலே இவர்களுக்கும் பதிலாக அமைகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், வழங்கப்படுகிற படகுகள் 'வாட்டர்-கூலிங்' சிஸ்டத்தில் உள்ளதா அல்லது 'ஏர்-கூலிங்' சிஸ்டத்தில் உள்ளதா என்று தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, இந்தப் படகுகள் செய்வதில் பல பாகங்கள் இறக்குமதி செய்யப் படுகின்றன என்று அமைச்சர் தெரிவித்தார்கள். அப்படி இறக்குமதி செய்யப் படும் காஸ்டும், நாம் நேரிடையாக படகே இறக்குமதி செய்வதன் காஸ்டும், ஒப்பிட்டுப் பார்த்தால் எப்படியிருக்கிறது? படகையே இறக்குமதி செய்வது லாபமாக இருக்கிறதா என்று சர்க்கார் ஆராய்ந்து பார்த்ததா? ஆராய்ந்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தனிப்படகாக இறக்குமதி செய்வது பற்றிய அங்கத்தினருடைய கேள்விக்கு முழு விவரம் தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கிறேன். படகுகள் பாகங்கள் வரவழைக்கப்பட்டு மண்டபத்திலும், சென்னையில் ராயபுரம், மெரீனாவிலும், நாகப்பட்டணத்திலும் கட்டப்படுகின்றன.

**திரு. சி. கோவிந்தராசன் :** கலப்புத் திருமணத்தை ஆதரித்து பதக்கம் அளிக்க முன்வந்துள்ள சர்க்கார், இம்மாதிரி படகுகளை முன்னமே கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்கு அவர்கள் விண்ணப்பித்திருந்தால் வினியோகித்து அவர்களுக்கு உதவி செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினருடைய கேள்வியின் உட்பொருள் எனக்குத் தரிகிறது. அதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. அரசாங்கம் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு பதக்கம் தான் வழங்க இருக்கிறார்கள். (திரு. கே. விநாயகம் : ஹனிமூனுக்காகக் கொடுக்கலாம்.) படகுகள் கொடுப்பதாக இல்லை.

**திரு. அ. பொ. அரசு :** கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே விசைப்படகுகள் கொடுக்கப் பட்டவர்களும், மீண்டும் மீண்டும் ஒன்றிரண்டு தடவைகள் பெற்றவர்களும்,

அதிகாரிகளுக்கு மனுத்தாக்கல் செய்து கேட்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத்தான் கொடுக்கப்படுமா அல்லது முதலிலேயே விண்ணப்பத் தாள்களைக் கொடுத்தவர்களுக்கும் இதுவரையில் பெறாதவர்களுக்கும் சலுகைகாட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதுவரையிலும் வந்துள்ள விண்ணப்பங்கள் முறையாக, மாவட்டவாரியாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவை சீரியல் நம்பர் பிரகாரம் என்ஜினுக்கு லாட் எடுக்கப்படுகிறது. லாட் எடுக்கும்போது என்ன முறையைக் கையாள வேண்டும் என்பதில், ஏற்கனவே வந்துள்ள விண்ணப்பங்கள் சம்பந்தமாக குறைபாடுகள், தகராறுகள் இருக்கின்றன என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அவற்றைப் பரிசீலனை செய்கிறோம்.

**திரு. இல. பலராமன் :** தமிழ் நாட்டில். கடலோர நகரங்களில் உல்லாசப் பயணங்களுக்கு படகுகள் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த அரசாங்கத்திற்கு உல்லாசத்தைப் பற்றிக் கவலையில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் மீனவர்களுக்குப் படகுகள் வழங்கப் படுவதிலும், வேறு சலுகைகள் கொடுப்பதிலும் மீன் பிடி தொழிலே தெரியாத தனிப்பட்டவர்கள் தங்களுடைய செல்வாக்கை உபயோகித்து, இவற்றைப் பெற்றுக்கொள்வதாக, அப்படி முத்துப் பேட்டையில் நடந்ததாக மகஜர் கூட அமைச்சருக்குக் கொடுக்கப்பட்டதே, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது, என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தக் கேள்வி போட்டுகள் வழங்குவது பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் கேள்வி பற்றி தனியாகச் சொன்னாலும், அல்லது தனிக்கேள்வி போட்டாலும், பதில் அளிக்கப்படும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு அளிக்கப்படும் நைலான் நூல்கள் நேரடியாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, கூடுதலான விலைக்கு அவர்கள் வாங்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, நேரடியாக நூல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** விலையில் 75 சதவீதம் தான் அவர்கள் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பாக்கி 25 சதவீதம் மானியம் கொடுக்கப்படுகிறது. நூல் மீனவர்களுக்கு நேரடியாகத்தான் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 83 தள்ளிவைக்கப் படுகிறது. அடுத்த வினா 84.



### பள்ளி இறுதித் தேர்வில் தவறிய மாணவர்கள்

***84 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறி விட்ட மாணவர்கள் மீண்டும் அவர்கள் படித்த அதே பாடசாலையில் இரண்டாவது ஆண்டும் படிக்க அனுமதிக்கப்படுகிறார்களா?

(இ) இல்லையென்றால், இனிமேலாவது அது போல் அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) எஸ்.எஸ்.எல்.சி-யில் தவறிவிட்ட மாணவர்கள் மீண்டும் அவர்கள் படித்த அதே பாடசாலையில் இரண்டாவது ஆண்டும் படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். சங்கரய்யா:** கல்லூரி வகுப்பில் பகுதி பகுதியாகத் தங்களுடைய பாடங்களை மாணவர்கள் பாஸ் செய்ய வாய்ப்பு இருப்பது போல, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பிலும் தனித்தனியாகப் பாடங்களை பாஸ் செய்துவிட்டு கல்லூரிகளில் சேர்வதற்கு ஏற்ற வகையில் இந்த முறையை மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எஸ்.எஸ்.எல்.சி. என்பது உயர்நிலைப் படிப்பில் ஒரு முடிந்த நிலை. ஆகவேதான் அந்தப் பாடங்கள் முழுவதையும் ஒரே சமயத்திலே பரீட்சை எழுதி தேர்வு பெறவேண்டும் என்கிற விதி இருக்கிறது. பி.ஏ. வகுப்பில் சிலபல வருஷங்களில் பாடங்களை ஒவ்வொன்றாகப் பாஸ் செய்வதுபோல இதிலே செய்வதற்கில்லை.

**திரு. கே. ஆர். கோவிந்தன்:** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் தேர்வுப் பரீட்சை எழுதி இரண்டு ஆண்டுகள் ஆகியும், தேர்வு முடிவுகள் இன்னும் அறிவிக்கப் படவில்லை. அதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தக் கேள்வி எஸ்.எஸ்.எல்.சி-யில் தவறிய மாணவர்களைப் பற்றியது. நண்பர் கேட்கும் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மாணவர்கள் எழுதுகிறார்கள். சர்டிபிகேட் புத்தகங்கள் சென்னையிலிருந்து அனுப்பப் படுவதால் வீண் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்குப் பதிலாக, மதுரைப் பல்கழகத்தைச் சுற்றியிருக்கும் மாவட்டங்களைப்பொறுத்தவரையில், அவற்றைத் தனியாகப் பிரித்து மதுரைப்பல்கலைக் கழகத்திலிருந்து அனுப்பும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

[1967 ஜூலை 27

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அந்த
உத்தேசம் இல்லை. ஆனால், அங்கத்தினருடைய கருத்து கவனிக்கப்
படும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில்
தவறிய மாணவர்களுக்கு அரசாங்கமே ட்யூடோரியல் காலேஜ்
வைத்து நடத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி
வேண்டும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பள்ளிகளில் ஸப்ளி
மெண்டரி ஸ்டூடென்டுகளைச் சேர்ப்பதே இல்லை. ஒரு உதாரண
மாகச் சொல்லுகிறேன், கடையநல்லூரில் என்ன காரணமோ,
தவறிய மாணவர்களுக்கு அரசாங்கமே ட்யூடோரியல் காலேஜ்
போவார்கள்? ஆக, ஸப்ளிமெண்டரி பிள்ளைகளை எடுப்பதில்லை
என்கிற விதி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். சர்க்கார் விதி
முறை அப்படியிருந்தால், அதை மாற்றியமைக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். எற்கனவே
எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் வெற்றி பெறாத மாணவர்கள் தனியாகப்
படித்தும் வெற்றி பெறலாம் அல்லது பள்ளிக் கூடத்தில் சேர்ந்தும்
பயிற்சி பெறலாம் ஆனால், 1948 க்குப் பிறகு ஒரு விதி போட்
டார்கள். அதன்படி, தலைமை ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஒரு
உரிமை கொடுக்கப்பட்டது. அதன்படி மாணவர்கள் மார்க்கே
வாங்கமாட்டார்கள் என்றோ, அவர்கள் சரியாகப் படிக்க
மாட்டார்கள் என்றோ, கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்க
மாட்டார்கள் என்றோ, மாணவர்கள் சோம்பேறிகள் என்றோ
தலைமை ஆசிரியர் கருதினால், அப்படிப்பட்ட மாணவர்களைச்
சேர்த்துக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், தவறிய மாணவர்கள்
யாரையுமே சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்பது இல்லை.
ஆகவே, அவர்கள் விதிப்படியும் சொல்லலாம். யாருக்காவது
வேண்டுமென்றே இடமில்லை என்று தடுக்கப்படுமானால், அதை
அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வகுட்
புக்கு மாணவர்கள் அதிகமாக வருவதன் காரணமாக, ஷிப்ட்
முறைப்படி மாலையிலும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகள் நடத்த
அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மு மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அந்த நிலைமை வர
வில்லை. ஏனென்றால், கூடுமானவரை இப்பொழுது உயர்நிலைப்
பள்ளிகள் நமக்கு ஏற்பட்டு வருகின்றன. சில குறிப்பிட்ட பள்ளி
களிலேதான் அதிகமான மாணவர்கள் இருக்கிறார்கள் என்ற குறை
பாடு இருக்கிற. சில உயர்நிலைப்பள்ளிகளில் இப்பொழுது
அதிகமான மாணவர்கள் தேவைப்படுகிறார்கள். அத்தகைய
பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறையும்போது, சில



1967 ஜூலை 27]

வகுப்புகளை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே, ஷிப்ட் ஸிஸ்டம் இப்பொழுது தேவையில்லை என்று கருதப படுகிறது.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. பரீசையில் தவறிய மாணவர்களை மறுபடியும் எடுக்கலாம், எடுக்காமலும் இருக்கலாம் என்று இந்த இரண்டு விதமான உத்தரவு இருந்தால், பெரும்பாலானவர்களை நிச்சய மாகச் சேர்ப்பதற்கு இடமே இல்லாமல் போய்விடுகிறது. ஒன்று— சேர்க்கவே கூடாது இட நெருக்கடி அப்பொழுதுதான் தீரும் என்ற அளவில் சேர்க்க வேண்டாம், அவாகள் வேறு வகையிலே பாஸ் பண்ணட்டும் என்ற முடிவிற்கு அரசாங்கம் வரவேண்டும்; அல்லது கட்டாயம் சேர்க்கவேண்டும் என்ற அளவிற்காவது உத்தரவு போட வேண்டும். இரண்டில் ஒன்றைத் திட்டவட்டமாக இந்த அரசாங்கம் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சேர்க்கவே கூடாது என்றாலும் பல சங்கடங்கள் இருக்கின்றன. அத்தனை பேரையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றாலும் பல சங்கடங்கள் இருக்கின்றன சேர்க்கவும் செய்யலாம், சேர்க்காமலும் இருக்கலாம் என்கிறபோது சங்கடங்களின் அளவு குறைகிற காரணத்தால் அந்த முறை மேற் கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். முத்துலிங்கம் : தலைவர் அவர்களே, வந்தவாசி ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் சென்ற தேர்விற்கு ஆஜரான மாணவர்கள் 288 பேர்கள். அவர்களில் 76 மாணவர்கள்தான் தேர்ச்சி அடைந்துள்ளனர். தேர்வு அடையாத மாணவர்களை மறு படியும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டால், சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். இம்மா திரியான ஒரு நிலையில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் போய் விட்டால், அவர்களுடைய கதி என்ன ஆகும் என்பதை உணர்ந்து அரசாங்கம் மறுபடியும் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வழிவகை செய்யுமா ? தனிப்பட்ட முறையில், ஆதித் திராவிட மாணவர்களை பொறுத்தாவது சலுகை கொடுத்து சேர்த்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.ஸி. யில் தேராமல் போனவர்கள் மறுபடியும் பள்ளியில் சேர்ந்தேதான் மறு ஆண்டு தேர்வு எழுத வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆகவே, அவர்கள் தனிப் பட்ட முறையில் கல்விப் பயிற்சி பெற்று, மறு ஆண்டு தேர்வு எழுதலாம். நூற்றுக்கணக்கான மாணவர்கள் மறுபடியும் அந்தப் பள்ளியில் இடம்பெற விரும்புவார்களானால், பத்தாவது வகுப்பி லிருந்து தேறி வருகிறவர்களுக்கு இடம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிற காரணத்தால்தான் அவர்கள் அத்தனை பேர்களையும் மீண்டும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுவதற்கு முடியாத சந்தர்ப் பங்கள் பல பள்ளிகளில் ஏற்படுகின்றன.

திரு. கே. விநாயகம் : ஐயா, அரசாங்கத்தினுடைய விதிமுறைகள் யாதொரு விதத்திலும் திட்டவட்டமாக இல்லாததினாலே, ஒரு முறை எஸ்.எஸ்.எல்.சி.—யில் தேர்வு பெறாத மாணவர்களை மறுபடியும் பள்ளித் தலைமையாசிரியர் பெரும்பாலும் சேர்த்துக் கொள்ளுவதில்லை. அப்படிப் பட்டவர்களைச் சேர்க்கலாம் என்று விதி இருந்தது, அதன்படி எந்த ஒரு பள்ளியிலாவது, எந்த மாணவரையாவது சேர்த்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் அரசாங்கத்திடம் இருந்தால், அதை இந்தச் சபையில் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. ஆனால், சிலபல இடங்களில் சேர்த்து வருகிறார்கள். ஆனால், மறுக்கப்படுகிற மாணவர்கள், காரணங்களைச் சொல்லி மறுக்கப்படுகிறார்களா என்ற விவரம் இல்லை. அதுபற்றி வேண்டுமானால் ஆலோசித்துப் பார்க்கலாம்.

திரு. ஆலடி அருணா : எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வே வேண்டாம் என்று பாராளுமன்றக் கல்விக் குழு பரிந்துரை செய்திருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதே, அதுபற்றித் தமிழக அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். கோபால் அவர்கள் தம்முடைய வினாவைக் கேட்பார்கள். . . . . . . மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள், தம்முடைய இருக்கையில் இல்லாமல், திரு. எம். கோபால் அவர்களுடைய இருக்கையில் இருந்து வினா கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் வினாவைக் கேட்கலாம்.

திரு. எம். பன்னீர்செல்வம் : மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும், அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether the students who have failed in the P.U.C. course are also allowed to join the same college and study in the next year?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : அப்படி மறுபடியும் சேரவேண்டிய அவசியமில்லை. மார்ச்சில் தேர்வு பெறவில்லை என்றால் மறுபடியும் செப்டம்பரில் எழுதவும், அதிலும் தேர்வு பெறவில்லை என்றால், மீண்டும் மார்ச்சில் எழுதவும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அப்படிப் பட்டவர்களை சேர்த்துக் கொள்ளவதற்கென்றேதான் ட்யூடோரியல் கல்லூரிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்களைக் கேட்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடத்திலிருந்து கேட்டால் எனக்குப் பெயர் சொல்லுவதற்கு வாய்ப்பாக





இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோபால் அவர்களும், திரு. பன்னீர்செல்வம் அவர்களும் இடம் மாறி உட்கார்ந்திருந்த காரணத்தால், பெயரை மாற்றிச் சொல்ல வேண்டியதாயிற்று. ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடத்திலிருந்து வினாக்களை கேட்டால் எனக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. பெ. சீனிவாசன் : கல்வி அமைச்சர் அவர்கள், பெண்களுக்காவது கட்டாயமாகப் பள்ளியிலே மறு தடவை இடம் தர வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி சங்கடங்கள் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அதுபற்றி என்ன முடிவு எடுக்கலாம் என்பதற்கான யோசனையைச் செய்துகொண்டிருக்கிறேன். அதுபற்றி தக்க முடிவு எடுக்க முயற்சிக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, in view of the complicated situation in which the students are not being given a chance to study again in the high schools, will the Government give clear instructions to the Headmasters to admit the failed students when they seek admission to their high schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒரு உத்தரவு போடுவோமானால், அதற்கு இடங்கள் தேடித்தர வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. ஆகையால், அவர்கள் பரீட்சை எழுதுவது எக்காரணத்தைக் கொண்டும் பாதிக்கப்பட மாட்டாது என்று குறிப்பிட்டுவிட்டாலே, ஏற்கனவே படித்தவர்கள் மறு ஆண்டு பரீட்சை எழுதி முடித்துவிடலாம். அந்த வாய்ப்பைப் பயன்படுத்த மாணவர்களை விட்டுவிட்டு, இருக்கும் இடங்களை, பத்தாவதிலிருந்து வருகிறவர்களுக்கும், வேறு பல பள்ளிகளிலிருந்து வருகிறவர்களுக்கு இடம் ஒதுக்கித் தர வேண்டிய நெருக்கடி ஏற்படுவதையொட்டி இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவதற்கில்லை.

### வெளி நாடுகளிலிருந்து திரும்பும் தமிழ் மாணவர்கள்

*85 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மதிப்பிற்குரிய கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

வெளி நாடுகளிலிருந்து தமிழகம் திரும்பும் தமிழக மாணவர்கள் நம் மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கு தேவைப்படும் equivalent certificate பெறுவதில் உள்ள சிரமங்களைத் தவிர்ப்பதற்கு கல்வி விதி முறைகளில் திருத்தம் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மலேசியா, பர்மா, இலங்கை, சிங்கப்பூர் முதலிய இடங்களில் இருந்த தமிழர்கள், அங்கிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில், அங்கே அறைகுறையாகப் படிப்பை முடித்துக்கொண்டு தமிழகத்தில் குடி

யேறும்போது, அவர்களை எந்தத் தகுதியைக் கொண்டு எந்த
க்ளாசில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பது தெரியாமல், ஈக்வி
வலன்ட் சர்ட்டிபிகேட் டிவிஷனல் இன்ஸ்பெக்டரிடமிருந்து
வாங்கி வரச்சொல்லி பல தொந்தரவுகள் கொடுப்பதால்
பெற்றோர்கள் தவியாய்த் தவிக்கிறார்கள். அந்த நிலையை
வைத்துத் தான் கேள்வி கேட்டேன். அமைச்சர் அவர்கள்
இல்லை என்று பதில் அளித்துவிட்டார்கள். இனிமேலாவது
பரிசீலனை செய்து வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர்
அவர்களே, மற்றைய நாடுகளிலெல்லாம் எந்த எந்த முறைகளிலே
அவர்கள் படிப்பு முறைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்
என்பதைக் கண்டறிந்து, அவற்றுக்கு ஈடாக இங்கே என்ன
இருக்கிறது என்பதை உடனடியாக வரையறுத்துச் சொல்ல
முடியாது. அங்கிருந்து வருகின்ற மாணவர்கள், தாங்கள் படித்த
படிப்புக்குரிய சான்றிதழ்களைக் கொண்டுவந்தால், அவர்களை எந்த
வகுப்பில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதைக் கண்டறிந்து
அனுமதியளிக்கும் உரிமை இப்பொழுது இடைநிலைக் கல்வி இயக்கு
நருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே அவர்கள்
அனுமதிக்கிறார்கள். அது மட்டும் அல்ல. ஏழாவது வகுப்பு
வரையிலும் அவர்கள் கொண்டுவருகிற சான்றிதழ்களை வைத்து,
இப்பொழுது நாட்டிலிருக்கிற கல்விக்கு ஏற்றதாக இருக்குமானால்,
அந்தந்தப் பள்ளியின் தலைமையாசிரியரே அனுமதியளித்துச்
சேர்க்க வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எட்டாவது வகுப்
பிலிருந்தவர்கள் இங்கே வந்து சேர விரும்புகிறவர்கள் அதற்கான
ட்ரான்ஸ்பர் சர்ட்டிபிகேட், ரிகார்டு ஷீட் இவற்றில் காணப்படுகிற
விவரத்தைக் கொண்டு, தகுதியை அறிந்து, அவர்களை அனுமதிக்
கும் அதிகாரம் இடைநிலைக் கல்வி இயக்குநருக்கு அளிக்கப்பட்
டிருக்கிறது. அது மட்டுமல்ல. குறிப்பாக, பர்மா, இலங்கை ஆகிய
நாடுகளிலிருந்து வருகிறவர்களை எண்ணிக்கை அதிகமாக
இருக்கும் காரணத்தாலும், அவர்கள் இங்கே சேர விரும்புகிற
காரணத்தாலும், அவர்கள் சான்றிதழ்களைப் பெறுவதிலே பல
நெருக்கடிகள் இருக்கிற காரணத்தாலும், இப்பொழுது இடைநிலை
கல்வி இயக்குநருக்கு அளிக்கப்பட்டிருந்த நிலைமையை மாற்றி,
அந்தந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்களே கண்டறிந்து, அதற்கு
ஈடாக இருக்கும் என்று கருதினால், அத்தகைய சான்றிதழ் அடிப்
படையில், அதிகமான தொல்லை இல்லாமல் சேர்த்துக்கொள்ளலாம்
என்ற உத்தரவு 27—10—1966-இல் இடப்பட்டிருக்கிறது. அதன்
படி இப்போது சேருவதற்கு அதிக சங்கடங்கள் இருக்காது.

*High schools managed by local authorities*

* 86 *Q.*—THIRU A. M. RAJA and THIRUMATHI K. P. JANAKI-AMMAL: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government have proposed to take over all the high schools managed by local authorities in the State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.





**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, உள்ளாட்சி மன்றங்கள் நிர்வகித்து வரும் உயர்நிலைப்பள்ளிகளில் பெரும்பாலும் மாணவர்கள் குறைந்த சத வீதமே தேர்வு பெறுகிறார்கள் என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய கருத்து எதுவும் வரவில்லை. அதுபற்றி வருமானால் அது ஆராயப்படும்.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கான அரசாங்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. ஆனால், நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் அத்தகைய பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப்பள்ளி இல்லை. ஆகவே, அந்த மாவட்டத்திலும் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கு ஒரு பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப்பள்ளி தேவைப்படும் என்ற நிலைமை இருக்குமானால், அது ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, மானேஜ்மென்ட் ஹைஸ்கூல் என்றும், டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹைஸ்கூல் என்றும் பல இடங்களில் பள்ளிகள் தனித்தனியாக நிர்வாகத்தில் இருக்கின்றன. இவை தனியார் பள்ளிகளாகவும் இல்லை; கவர்ன்மென்ட் ஹைஸ்கூல ஆகவும் இல்லை. நிர்வாகத்திலே பலவித சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சர்க்கார் ஏதாவது திட்டம் வகுத்து இவற்றையெல்லாம் ஓரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1—4—1966-லே மாவட்டக் கழகங்களிலே உள்ள உயர்நிலைப்பள்ளிகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அந்தப் பள்ளிகளையெல்லாம் கண்காணிக்க தனியாக ஸ்பெஷல் டி.இ.ஓ. ஒருவரை நியமித்தோம். மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகளுக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிகளுக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. இவை இரண்டையும் ஒன்று சேர்ப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதில் பல சங்கடங்கள் எழுந்தன. மாவட்டக் கழகங்களில் வேலை செய்த ஆசிரியர்கள் தங்களுடைய சீனியாரிட்டி கீழே போய் விடுமோ என்று பயந்தார்கள். அப்படி இணைக்கப்படுகின்றபொழுது யாரும் பாதிக்கப்படாமல் செய்வதற்காகத்தான் ஒரு குழுவை நியமித்தோம். அந்தக் குழு ஒரு அறிக்கையைத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை ஆராயப்பட்டு வருகிறது. என்றேனும் ஒரு நாளைக்கு தனித்தனியாக போகாமல் ஒன்றாக அமைப்பதற்கான முயற்சிகள் அரசாங்கம் எடுத்து வருகிறது. அறிக்கை ஆராயப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் ஆரம்பப் பள்ளிக்கூடம், துவக்கப் பள்ளிக்கூடம் தான் நடத்தி வருகிறது. உயர்நிலைப்பள்ளிகளை நடத்தவில்லை என்பதைச் சர்க்கார் அறியுமா ?

[1967 ஜூன் 27

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அறியும்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, சில பள்ளிகளுக்கு ஜாதியப் பெயர்கள் இருப்பதால் குழந்தைகளுடைய மனதில் ஜாதிய உணர்ச்சி வளரும் என்பதை அரசாங்கம் அறியுமா ? அப்படியுள்ள ஜாதிப் பெயர்களை வைக்க, அரசாங்கம் மறுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஜாதிப் பெயரிலே சில பேர் தனிப்பட்டவரின் பெயரிலே கல்லூரிகள் அமைத்து நடத்துகின்றார்கள். அந்தப் பள்ளிகளுக்குரிய நன்கொடைகளை அவர்கள் தருகிறபோது, அந்தப் பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப் பெயர் ஒட்டிக் கொள்கிறது. ஜாதிப் பெயர்களை யார் வைத்திருக்கிறார்கள் என்பதைவிட எப்படிப்பட்டவர்கள் சேர்க்கப் படுகிறார்கள் என்பதிலேதான் கவனம் செலுத்த வேண்டும். அப்படி குறிப்பிட்ட சில ஜாதிகளுக்குத் தவிர, மற்ற ஜாதிகளுக்கு உரிமை மறுக்கப்பட்ட நேரத்தில்தான் அரசாங்கம் தலையிட்டு, எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைக்கும்படியாக நடைமுறைப்படுத்துவதில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. நா. கிருட்டிணன்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் பள்ளிகளில் மாணவர்கள் சேர வரும்போது பள்ளி வளர்ச்சிக் கென்று ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தந்தால் தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கட்டாயப்படுத்தப் படுகிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாணவர்கள் குறிப்பிட்ட அளவு பணம் கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்கு விதிமுறைகள் இடம் தரவில்லை. அவர் களாகவே நிதி கொடுத்தால் வாங்கிக் கொள்வதற்குத் தடை இல்லை. மாணவர்கள் கட்டாயப்படுத்துப்படுகிறார்களென்று கூறினால், அதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

Dr. H. V. HANDE : Sir, there is vast discrepancy between the scales of pay of teachers working in the Local Authorities high schools and the teachers working in the Government high schools. This is causing a sense of great inferiority among the teachers working in the Local Authorities high schools. Will the Government examine the question and bring the scale of pay of the teachers in the Local Authorities schools on a par with the scale of pay of the teachers working in the Government high schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சம்பளம், பஞ்சப் படி மற்ற உரிமைகள் ஆகியவைகளில் மாவட்டங்களிலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரே சீராக அமைக்க வேண்டுமென்ற முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஆனால் பள்ளிகளைப் பொருத்தவரையில் பல்வேறு நிலைகளாகப் பிரிந்திருக்கிற காரணத்தால் அவற்றை ஒன்றுபோல் சீராக்க



வேண்டுமென்ற முயற்சியில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. நகராட்சி நடத்தும் பள்ளிகளைக்கூட அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கூறி வந்திருக்கிறது. வருமானம் இல்லாத காரணத்தால் நகராட்சிகளே செலவழிக்க வேண்டியிருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளுக்கு இப்போது 50 சதவிகிதம் மானியம் கொடுத்து வருகிறோம். அரசாங்கமே மானேஜ்மென்ட் பள்ளிகளை எடுத்துக்கொள்வதா? அன்றி அவர்களுக்கு மானியம் கொடுத்து உதவுவதா? என்று ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, மானேஜ்மென்ட் உயர் நிலைப் பள்ளிகளுக்கு அரசாங்கம் டீச்சிங் கிராண்ட், பில்டிங்ஸ் கிராண்ட் என்றெல்லாம் தந்திருக்கிறார்கள். அதைக் கண்காணிக்கும் கொள்கை அரசாங்கத்திற்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அதைக் கண்காணிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி பல கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் ஒன்றாக வைத்து ஆராய்ந்து பார்த்தபிறகுதான் அரசாங்கம் முடிவு செய்யும்.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister for Education to state whether a time limit has been prescribed by the Government for the abolition of the distinction between the pay and allowances paid to the teachers in Government schools and the teachers working in schools conducted by the Local Authorities?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி கால வரையறை விதிக்கவில்லை. எல்லாவற்றையும் அரசாங்கத்தின்கீழ் உட்படுத்த வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, சில பள்ளிகளில் ஸ்பெஷல் ஃபீஸ் என்று அதிகமான தொகை வசூலிக்கிறார்கள். அப்படி அவர்கள் வசூலித்த தொகைக்கு ரசீதும் கொடுப்பது இல்லை. நானே ஒரு பள்ளியில் 3-வது வகுப்புப் பிள்ளைக்கு 9 ரூபாய் கட்டியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குற்றச்சாட்டை எழுதியனுப்பினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. காசிராமன் :** உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப் பட்டு வரும் உயர்நிலைப் பள்ளிகளை சர்க்காரே எடுத்துக் கொள்வதாக உத்தேசம் இல்லையென்று கூறினார்கள். அப்படி இருக்கும்

போது அதிகச் செலவு ஏற்படுகிறதென்றால், தனியார் துறையில் உள்ள பள்ளிகளுக்குக் கொடுப்பதைப் போல் முழு அளவு கிராண்டு தொகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றி நான் முன்னமே குறிப்பிட்டுள்ளேன். இவற்றை அரசாங்கமே எடுத்துக் கொள்வதா, அல்லது அரசாங்க மானியத்தை உயர்த்துவதா என்று யோசித்து வருகிறது.

திரு. கே. ஆர். கோவிந்தன் : தலைவர் அவர்களே, பல அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் போதுமான இடமில்லாத காரணத்தால், மர நிழலிலும், தனியார் வீடுகளிலும் வகுப்புகள் நடத்தப் படுகிறதே, இதுபற்றி உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமான மாணவர்கள் சேர்ந்துவிட்டதால், இட வசதிக்காக பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, கீற்றுக் கொட்டகை போட்டு, மழை, வெயில் இவைகளிலிருந்து பாதுகாப்பு கொடுத்து அத்தகைய கொட்டகைகள் போட்டு நடத்தலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதனையொட்டி சில இடங்களில் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

### குடியாத்தம் தாலுக்கா ஏரிகள்

*87 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன். மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுக்காவில் உள்ள ஏரிகளில் தூறு எடுக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஏரிகளில் தூறு எடுத்து அவற்றைத் திரும்பவும் பயனுக்குக் கொண்டுவரும் திட்டத்தின்கீழ் ரூ. 13,000 மதிப்பீட்டு செலவில் அம்முண்டி கன்டத் தாங்கல் ஏரியை மராமத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய வேலைப் பருவத்தின் போது ஏரிப்படுகை உலர்ந்தவுடன், மேற்படி வேலை நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது ஏரிப் படுகையில் தூறு எடுத்தல் பண்படுத்தும் வேலையை மேற்கொள்வது இயலும். இதைத்தவிர (1) ரூ. 50,000 செலவில் உதயேந்திரம் ஏரியையும் (2) ரூ. 30,000 செலவில் பெரிய வாரிக்கம் ஏரியையும் ஏரிகளைத் தூறு வாரித் திரும்பபயன்படுத்தும் திட்டத்தின் கீழ்ச் சீரமைப்பதற்கான வேறு இரண்டு செயற்குறிப்புகளும் ஆலோசனையில் உள்ளன.



### Reorganisation of Food Department.

*88 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there is any proposal to reorganise the Food Department; and

(b) if so, the reasons therefor?

The Hon. Thiru K. A. MATHIALAGAN: (a) Yes, action has been initiated.

(b) To energise and activise the entire Civil Supplies Department to give a new look to and infuse fresh life into the Food Administration to inculcate among officers a sense of urgency and efficiency in dealing with food problems.

Thiru K. VINAYAKAM: Sir, what are the defects that were noticed by this Government in the working of the Food Department before they took up Office? What are the reasons which actuated this Government to reorganise it and what are the benefits which the Government are expected to get out of this reorganisation? Will the Hon. Minister be pleased to give concrete instances where defects have been noticed and where they have been rectified?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உணவுத்துறையில் இருந்த தாறுமாறுகள் முழுவதும் இந்தக் கேள்வி நேரத்திலே சொல்லி முடிக்கக்கூடியது அல்ல. எவ்வளவு தாறுமாறுகள் இருந்தன என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இந்த நாடும் அதை உணர்ந்து அதற்கு வேண்டிய தண்டனையையும் முந்திய அரசாங்கத்துக்குக் கொடுத்து இருக்கிறது.

Thiru T. MARTIN: Sir, may I request the Hon. Minister for Food to state whether there is any proposal to send procurement officials to the villages for procurement without Police and Armed Reserve Police?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலில் கனம் உறுப்பினர் அவர்கள் ஆர்ம்டு போலீசாரைக் களத்து மேட்டுக்கு அனுப்புவதாகக் கூறி கேட்கும் கேள்வியே தவறு.

திரு. எஸ். ராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சர்க்கார் பதவியேற்றபொழுது சென்னை மாநகருக்கு 500 டன் அரிசியே இருந்தது. போதுமான ஸ்டாக் இல்லாத காரணத்தினால், உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பொருட்டு, அந்த இலாக்காவையே மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படவில்லையா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக புரொக்யூர்மெண்ட் செய்வதிலும், விநியோகத்திலும் பல, தவறுகளை கெடுதல்களை இதற்கு முன்னாலேயே உணவு நிர்வாகம் செய்துள்ளது. அதனை, பல நீண்ட கியூக்களாக மக்கள் நின்று கொண்டதிலிருந்தும், ரேஷன் கடைகளிலே தரமான அரிசி கிடைக்கா

திருந்த தன்மையிலிருந்தும், போலிக் கார்டுகள் நடமாடியதிலிருந்தும் அறியலாம். இதற்காகத்தான் இப்பொழுது வட சென்னை, தென் சென்னை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து இரண்டு டெபுடி கமிஷனர்களைப் போட்டிருக்கிறோம். அதேபோல் பிளாக் மார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் இவர்களையெல்லாம் பார்த்துக்கொள்ள போலீசார் இருப்பதோடு, தனி இலாக்காவாக அவர்களைக் கண்காணிப்பதற்கு என்போர்ஸ்மெண்ட் செல் ஏற்படுத்தி டெபுடி கமிஷனரையும் நியமித்திருக்கிறோம். இதுவல்லாமல் ஆங்காங்கு இருக்கிற குறைபாடுகளை ஆராய்ந்து களைவதற்காக பல உயர்தர அதிகாரிகளை நியமிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. மு. ராசகோபால்:** தலைவரவர்களே, கொள்முதல் செய்யப்படுகின்றபொழுது கள்ளத்தனமாக எடுத்துக்கொண்டு வருகின்ற வியாபாரிகளினுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுகிறதா? அல்லது நடுவழியிலேயே பணத்தைக் கொடுத்துவிடுகிறதா இந்த அரசாங்கம்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பறிமுதல் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில நேரங்களில் பெருந்தன்மையான காரணத்தால், கம்பல்ஸரி பர்சேஸ் என்ற முறையில் வாங்கிக்கொண்ட சம்பவமும் உண்டு. வழக்குகள் தொடரப்பட்ட சம்பவங்களும் உண்டு.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** சபாநாயகரவர்களே, உணவுப்பங்கீட்டு முறையில் மக்களுக்கு உணவு கிடைப்பதற்கு முடியாமல் பல குறைகள் இருக்கின்றன. எனவே, உணவுப் பங்கீட்டைச் சரியானபடி செயல் படுத்த, அதைத் தீவிரப்படுத்த நல்ல பொறுப்பு வாய்ந்த உணவுப் பங்கீட்டு வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களை அரசாங்கம் நியமித்து, அதை நல்ல நிலையில் கொண்டு வருவதற்கு முன் வருமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினரின் உன்னதமான யோசனையை வரவேற்கிறேன். இன்றைக்குப் புதிய திருப்பத்தை உணவு அமைச்சகம் செய்து வருகிறது.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவரவர்களே, இப்போதுள்ள கொள்முதல் முறையிலே போலீசார் தலையிடுவதனாலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதனாலே கொள்முதலை அடியோடு மாற்றியமைத்து, அதாவது அறவைக்கு வரும்பொழுது, ரைஸ் மில்களிலேயே கொள்முதலை சர்க்கார் ஆரம்பித்தால், சிரமத்தைத் தவிர்க்கவும், செலவைக்குறைக்கவும் வழியேற்படும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஏற்கனவே இம்மாதிரி ரைஸ் மில்களிலேயே கொள்முதல் செய்வது பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்கப்பட்டது. அதிலே ஏற்பட்ட சில நிலைமைகள்



காரணமாக அது கைவிடப்பட்டது. கனம் உறுப்பினரவர்களின் யோசனையை மீண்டும் பரிசீலனை செய்யலாமே தவிர, அது அவர்கள் கூறியுள்ள விளைவுகளைக் கொடுக்குமென்று என்னால் நம்ப முடியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், மாவட்ட ரீதியாக, ஏதாவது சீரமைப்பு செய்ய இந்த இலாக்காவிலே உத்தேசம் இருக்கின்றதா? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாவட்ட ரீதியிலும் பல மாறுதல்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. கலெக்டர் இந்தத்துறைக்குத் தலைமையதிகாரியாகச் செயல்பட்டு வருகிறார்கள். கீழ் இருக்கும் அதிகாரிகள் செம்மையாகவும், திறமையாகவும் செயல்படுமாறு அவர் பார்த்துக்கொள்வார். இத்திட்டத்திற்கு இடைஞ்சல்களாயிருப்பவைகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஏ. சி. நாசிம்மன்:** தலைவரவர்களே, செக்போஸ்டில் 10 படிக்குமேல் கொண்டு வரப்படுகின்ற அரிசி பறிமுதல் செய்யப்படுகிறது. அந்த அரிசி பறிமுதல் செய்யப்பட்டதற்கு எந்த விதமான ரசீதும் வழங்கப்படுவது இல்லை. இவ்வாறு ரசீது வழங்காததால், அந்த அரிசி சர்க்கார் கணக்கில் சேர்க்கப்படுகிறதா? அல்லது அதை அந்த அதிகாரிகள் எடுத்துக்கொள்கிறார்களா? என்ற சந்தேகம் உண்டாகிறது. இதைச் சர்க்கார் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினரவர்கள் இவ்வாறு பொதுப்படையாகக் குற்றம் சாட்டுவது அதிகாரவர்க்கத்திற்குப் பெரிய அபவாதமாகும். இந்த ஊரில் இன்ன காரியம் நடந்தது என்று ஆதாரத்தோடு சட்டசபை உறுப்பினரவர்கள் கூறினால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே கட்சியிலுள்ள இரண்டு பேர்கள் வினாக் கேட்க விழைகிறபோது, முதல் வரிசையிலுள்ளவர்களுக்கு உடனடியாக அந்த வாய்ப்பு கொடுக்கப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அம்மாதிரி ஒரே கட்சியிலிருந்து கை தூக்கும் உறுப்பினர்களில் முதலிலிருப்பவர்களுக்கு முதல் அனுமதி கொடுப்பது உறுப்பினர்களுக்குள் பிரிவினை காட்டுவது ஆகாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நடைமுறையில் இருந்து வருவது. ஆகையினாலே ஒழுங்குத் தவறு ஏற்படவில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. எஸ். மணி:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சபாநாயகரவர்கள் ஆரம்பகாலத்திலே நடந்த கூட்டத்தின் பொழுது சிறு கட்சிகளாகயிருந்தாலும், அவர்களுக்குப் பூரண சலுகையும், சகல உரிமைகளும் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். அதன்படி . .

[1967 ஜூன் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் 40-வது விதியினை நீங்கள் பார்த்தீர்களேயானால், கேள்வி நேரத்தில் விவாதங்களை எழுப்பக் கூடாதென்பது தெரியும்.

THIRU K. VINAYAKAM : Sir, while being grateful to you, arising out of the answer given by the Food Minister in connection with the work done by the Enforcement Cell, without meaning any offence to our Chief Minister for whom I have got the greatest respect the Chief Minister announced that he has him- got bogus cards, and has the Department rectified that matter?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Yes, action has been initiated. We are scrutinTising it and we will supply a new card.

**திரு. கே. பி. எஸ். மணி:** சார் 'ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் . . .

முற்பகல் 10-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எழுந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்துவிட வேண்டும். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்பதே கிடையாது. விளக்கம் தேவைப் பட்டால், என் அறைக்கு வந்து தெரிந்துகொள்ளலாம். தகவல் தேவைப்பட்டால், வினாவாக எழுதி அனுப்பலாம். ஆகவே அருள் கூர்ந்து குறுக்கிடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : From the report of the proceedings of the Upper House published in this morning's papers, we find that there were only 500 tonnes of rice in Madras City whereas there were 60,000 tonnes or more in Thanjavur District. Will the Ministry take us into confidence and tell us why some quantity from the stock of 60,000 tonnes in Thanjavur District where there is no statutory rationing was not moved to Madras City, where there is statutory rationing and where there is scarcity? Is is due to want of godown space in Madras.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் சொல்வது போல் திரும்பச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. கடந்த வருடம் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் 15 ஆயிரம் டன்கள் இருந்தன. ஆனால், அதேகாலத்தில் இந்த வருடம் ஐநூறு டன்கள் தான் இருந்தன. இதற்கான காரணத்தை முன்பு இருந்தவர்களிடம் கேட்பதற்கு—இன்றைக்கு நாம் கேட்கிற இடத்திலும் இல்லை. அவர்கள் பதில் சொல்லுகிற இடத்திலும் இல்லை.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஏற்கனவே உணவுத்துறைக்குத் தலைமை அதிகாரியாக இருந்தவரின் ஊழல் நிர்வாகம் காரணமாகத்தான் அவர் மாற்றப்பட்டார் என்பது உண்மையா? அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஊழல் என்பது பொருந்தாது. அங்கிருந்த நிலைமையை மாற்றி அமைக்கும்போது அவரும் மாற்றப்பட்டார்.



1967, ஜூன் 27]

**திரு. க. இராமமூர்த்தி:** கடந்த கால சர்க்கார் 500 டன்தான் கொள்முதல் செய்திருந்தது என்கிற தவறான எண்ணம் பரவலாக இருந்து வருகிறதே, அது உண்மையா? அது தவறாக இருந்தால், அந்த எண்ணத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நியாயமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியவர்கள் முந்தின அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள். அதுபற்றி திருப்பித் திருப்பிச் சொல்ல வருத்தப் படுகிறேன். ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் மட்டும் 3 லட்சம் டன் முன்னால் இருந்த அரசாங்கம் கொள்முதல் செய்திருக்கவேண்டும். தேர்தல் காரணத்தினாலோ என்னவோ கொள்முதல் செய்யத் தவறி விட்டார்கள். அவர்கள் தங்கள் கடமையை முறையாக ஆற்றியிருந்தால், இன்றைக்கு நான் இந்த மாமன்றத்தில் 7 லட்சம் டன் கொள்முதல் நடந்திருப்பதாகப் பெருமையுடன் சொல்லிக்கொண்டிருக்க முடியும். ஆனால் நாங்கள் பதவி ஏற்கிறபோது 500 டன்கள் தான்—ஒருநாள் ஸ்டாக்—சென்னை நகரில் கையிருப்பில் இருந்தது. முந்தின வருஷத்திலும, அதற்கு முந்தின வருஷத்திலும் இதே காலத்தில் கையிருப்பில் 15 ஆயிரம் டன்கள் இருந்திருக்கின்றன. ஆகவே, இருந்த நிலைமையை எடுத்துச் சொன்னதில் தவறு எதுவும் இல்லை.

**திரு. மா. இராசாங்கம் :** தமிழ்நாட்டில் எல்லையோரப்பகுதிகளில் கள்ளக்கடத்தலாக ஏராளமான அரிசி போகின்றது. அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் செக்போஸ்டுகளை விட்டு வெளியே வருவதற்கு வாகன வசதிகள் கிடையாது என்று குறையாகச் சொல்கிறார்கள். ஆகவே, வாகன வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, கள்ளக் கடத்தலைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கேரள எல்லையில் கோயம்பத்தூர், மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களைப் பொறுத்தவரை கள்ளக் கடத்தலைத் தடுக்க தக்க ஏற்பாடுகள்—24 மணி நேரம் ஆயுதம் தாங்கிய போலீஸ் பாதுகாப்பு, வான் வசதிகள் எல்லாம்— செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா விடைக்கான நேரத்தை இன்னும் பத்து நிமிடம் நீடித்திருக்கிறேன். அடுத்த வினா 89.

*Sub-Taluk office at Pallipet*

* 89 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Government have any proposal to retain permanently the Sub-Taluk Office at Pallipet (Chingleput District) which is now located there only as a temporary one?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பள்ளிப்பட்டு உள் வட்டம் நிலையாக இருக்கக்கூடியது. அதை ஒழிக்கும் செயற்குறிப்பு இல்லை.

## பர்மா அரிசி

*90 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் டெல்லியில் மத்திய அரசாங்கம் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் பர்மாவிடம், நஷ்ட ஈடுக்கு பதில் அரிசி பெறும் யோசனையை மாநில முதலமைச்சர் சமர்ப்பித்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அதன் முழு விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) & (இ) புது டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது முதல் அமைச்சர் அவர்கள், இந்திய அகதிகள் பர்மாவில் விட்டு வந்த சொத்துக்களுக்கு ஈடாக பர்மாவிலிருந்து அரிசி தருவிப்பதற்கான நீண்ட கால ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வதற்கான செயற் குறிப்பை எடுத்துரைத்தார். அத்திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்கு மத்திய உணவு அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதா? ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தக் கோரிக்கை இரண்டு நாடுகளுடைய சர்வதேசத் தொடர்பு சம்பந்தமான பிரச்சினை. அங்கிருந்து வந்தவர்கள், அவர்களுடைய நிலை இன்றைக்கு அங்குள்ள ஆட்சியின் போக்கு ஆகிய எல்லாப் பிரச்சினைகளும் அடங்கியிருக்கின்றன. இதுபற்றி எந்தவகையில் பரிசீலனை செய்கிறோம் என்கிற கருத்தை மத்திய சர்க்கார் தெரிவிக்கவில்லை. அங்கிருந்து வந்தவர்களுடைய நலனைக் கருதி இந் நீண்டநாள் திட்டமாக அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து அளிக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: We were getting rice from Burma some years ago. Will the Government tell us till what year we were getting rice from Burma and in what year the supply was stopped?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The hon. Member can put a separate question.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவர் அவர்களே, மத்திய மந்திரி திரு. சாக்ளா அவர்கள் பேசும்போது பர்மாவில் இருந்து ஏற்கனவே அரசாங்கம் இறக்குமதி செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். எவ்வளவு இறக்குமதி பண்ணுகிறார்கள், எங்கே பயன்படுத்துகிறார்கள் என்கிற விவரம் இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த அரசாங்கத்திற்கு அது சம்பந்தமாக எந்தவிதமான தகவலும் இல்லை.



THIRU K. VINAYAKAM: Is the Minister aware of the fact that whatever compensation the Indian Nationals in Burma will get will be very small, as the party in power in Burma is not prepared to give the market value of the property as compensation, and that whatever quantity of rice we get against it will not be commensurate with the value of the property left behind, and what steps do this Government propose to take in consultation with the Central Government to get the market value as compensation which we deserve?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் சொல்வதுபோல குறைவானது அல்ல, கோடிக்கணக்கான ரூபாய்களை நஷ்ட ஈடாகப் பெற வேண்டியிருக்கிறது. அரிசி பெறுவதோடு அகதிகளாக பர்மாவில் இருந்து வந்த நம் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கிற திட்டம் ஒன்றையும் இணைத்து நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பது மட்டும் அல்ல, எந்த அளவு அந்தத் திட்டத்தை ஒத்துக்கொள்கிறார்கள் என்பதும் நிர்ணயம் ஆகாத விஷயமாக இருக்கிறது. இரண்டு நாடுகளுக்கும் உள்ள பரஸ்பர தொடர்பையும் ஒட்டிய விஷயம் இது.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு:** பர்மா அகதிகளிலே அதிகமாக இருப்பவர்கள் சென்னை வாசிகள்தான் என்ற காரணத்தினாலே, அவர்களுடைய சொத்து விவரங்களைப்பற்றித் தெரிந்து அவற்றிற்குப் பதிலாக வேண்டிய உதவிகள் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க தனியாக ஒரு விசேஷ அதிகாரியைப் போடுவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது சம்பந்தமாக ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் சிரத்தையற்ற உணர்வும், பரிவுணர்ச்சிக் குறைவும் தான் இந்தப் பிரச்சினை காலதாமதமாகிக் கொண்டிருப்பதற்குக் காரணம்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தில் சாதாரணமாக அரிசிப் பிரச்சினை மட்டும் இல்லை, தமிழர்களுடைய மானப் பிரச்சினை இருக்கிறது. பர்மாவிலிருந்து வருகின்றவர்களுக்கு நிவாரணமளிக்கின்ற முறையிலே, நஷ்ட ஈடாக அரிசி கொடுப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு கவனிக்கவில்லை. வெளி நாடுகளிலிருந்து இப்படி தமிழர்களையெல்லாம் விரட்டியடிப்பதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது பொதுவான கேள்வி. தமிழ் நாட்டு மக்கள் 3½ கோடி மக்களுடைய கட்டளையும் நம்பிக்கையும் பெற்றுவந்திருக்கின்ற இந்த அரசாங்கம் அவர்களுடைய பாதுகாப்புக்கு, நலனுக்கு, மேம்பாட்டுக்கு எந்தவித

[1967 ஜூன் 27

மான ஊறு ஏற்படக்கூடிய காரியத்தை யார் செய்தாலும், அனுமதிக்காது. எல்லாவிதமான செல்வாக்கையும் சக்தியையும் இதற்காகப் பயன்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : பர்மாவிலும், தாய்லாந்திலும் விளைச்சல் இந்த ஆண்டு சரியாக இல்லை. ஆகவே, அங்கேயிருந்து அரிசி கிடைக்காது என்று மத்திய உணவு அமைச்சர் சொன்னது சரியானதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முற்றிலும் உண்மையானது மட்டுமல்ல. பர்மா அரிசியின் விலை நம்முடைய அரிசியைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்ற தகவலும் வந்திருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : பர்மா தமிழர்களின் நஷ்ட ஈடாக 50 கோடி ரூபாய் வரை வரவேண்டுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. மத்திய அரசு இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறதா? அதைப்பற்றி நம்முடைய அரசுக்கு என்ன தகவல் வந்திருக்கிறது ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Let the hon. Member put a separate question with regard to the Burma repatriates.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது பர்மாவிலே விற்கப்படுகிற அரிசியின் விலை அதிகமாக இருப்பதாகத் தகவல் வந்திருக்கின்ற காரணத்தாலே, நமக்கு அதனால் ஏதொரு லாபமும் இல்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : முதலிலே கனம் உறுப்பினர் தமிழிலே கேள்வி கேட்டதில் எனக்குள்ள மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பர்மா அரிசியைப் பெறுவது என்பது பர்மாவில் அரிசியின் விலை மலிவாக விற்கிறது என்பதைப் பொறுத்தது அல்ல, அப்படி மலிவான விலையில் அரிசியைத் தருவிப்பது இந்த நாட்டு விவசாயிகளைக் கெடுப்பதில்கூட முடியும். பர்மா இந்த நாட்டுக்குத் தரவேண்டிய நீண்டகாலக் கடனுக்குப் பணமாகத்தாக்கூடிய வசதிகள் இல்லாத காரணத்தால், பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாமென்ற முறையிலேதான் அது கொடுக்கப்பட்டது. ஆகையினால், இதிலே பர்மா அரிசியினுடைய விலை என்ன என்பதல்ல முக்கியம். மேலும் சொல்லப்போனால், அங்கே விளைச்சல் அதிகமாக இல்லாததால், விலை அதிகமாக இருக்கிறதே தவிர, உலகத்திலேயே பர்மா அரிசியின் விலைதான் மலிவாக இருந்தது—ரூபாய்க்கு 6 படி, 8 படி என்ற அளவில் விற்ற காலமும் உண்டு. அங்கே இருக்கின்ற புதிய அரசுமுறை காரணமாகவும், உழவுத் தொழிலில் இப்பொழுது அவர்கள் போதுமான அளவுக்கு ஈடுபட இயலாமை காரணமாகவும்தான் விலை ஏறியிருக்கிறது.



1967 ஜூன் 27]

### மருத்துவக் கல்லூரி விடுதிகளிலுள்ள ஏவலர்கள்

*91 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி ஹாஸ்டல்களில் பணியாற்றும் கண்டிஞ்சென்சி (மீனியல்ஸ்) சர்வீசை ரத்து செய்து, நிரந்தர சிப்பந்திகளாக்க அரசாங்க உத்திரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த தேதியிலிருந்து அந்த உத்திரவு அமலாகும் ?

(உ) எந்தெந்த கல்லூரி ஹாஸ்டலில் எத்தனை சிப்பந்திகள் நிரந்தரமாக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வல்லம் படுகையில் மருத்துவ மனை

*92 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, வல்லம் படுகையில் ஒரு மருத்துவ நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுகுறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த நிகழ்ச்சி இன்றைக்கு வரவு-செலவுத் திட்டத்தின் மீது இறுதிநாள் விவாதம். இதுவரை உரையாற்றிய காலத்தைக்குறித்தும், பெயர்களைக் குறித்தும் எழுதி வைத்த முழு விவரங்கள் இருக்கின்றன. எத்தனை உறுப்பினர்கள் ஒரு கட்சியிலே பேசினார்கள் என்பதைவிட, எவ்வளவு காலம் பேசினார்கள் என்பதே முக்கியமாகையால் எவ்வளவு காலம் ஒவ்வொரு கட்சியும் எடுத்துக்கொண்டது என்ற குறிப்பு

என்னிடம் இருக்கிறது. முன்னேற்றக் கழகம் 8 மணி 56 நிமிடங்கள் (நியமன உறுப்பினர் உள்பட), காங்கிரஸ் கட்சி 6 மணி 5 நிமிடம்; சுதந்திராக் கட்சி 2 மணி 42 நிமிடங்கள்; இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி 1 மணி 58 நிமிடங்கள். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி 21 நிமிடங்கள்; இன்னும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். எனவே, இன்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே திரு. கே. வினாயகம் அவர்கள் ½ மணி நேரத்திற்கு மேற்படாத அளவிலேயும், முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. தா. ப. அழகமுத்து அவர்கள் அந்த அளவுக்கு மேற்படாமலும் பேசியதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 1 மணி நேரமும், அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதியாகவும் உரையாற்றுவார்கள்.

**திரு. கே. வினாயகம்:** கௌரவமிக்க அவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு அழைப்புத் தந்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு ஆண்டின் பொது நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் இரண்டு வகையாக வரவேற்கிறேன். ஒன்று ஓரளவுக்கு திருப்தியாகவும், இன்னொன்று அதே அளவுக்கு அதிருப்தியாகவும் இதை வரவேற்கின்ற நிலைமையிலேதான் நான் இருக்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய திறமையைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. பொது நிதி அதாவது பப்ளிக் பைனான்ஸ் என்கின்ற துறையிலே நன்கு படித்தவர், விஷயம் தெரிந்தவர் கூட, புரொஃபஸர் சிக்காவினிடமே பாடம் கற்றவர். ஆகையினால் அந்த விதிகளைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும். . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** துவக்கத்திலேயே தலையிட வேண்டியதிருப்பதைப் பற்றி வருந்துகிறேன். இரண்டு பேருமே புரொஃபஸர் சிக்காவிடம் படித்தவர்கள்தான். ஆனால் புரொஃபஸர் சிக்கா அவர்கள் பொருளாதார ஆசிரியர் அல்ல.

**திரு. கே. வினாயகம்:** அண்ணா அவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ. அப்பொழுது தகுந்த பொருளாதார ஆசிரியர் (குவாலிபைட்) இல்லை. ஆகவே, திரு. அனந்தநாராயணன் இருந்தார். அவரிடம் இரண்டு பேருமே கற்றுக்கொண்டோம் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்கள் நான் கூறுவதை எரிச்சலோடு எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். புரொஃபஸர் சிக்கா அவர்கள் பொருளாதாரப் பேராசிரியர் அல்ல, சரித்திரப் பேராசிரியர். அப்பொழுது திரு. அனந்தநாராயணன் அவர்களும் இருந்தார், இப்பொழுது நாடாளுமன்றத்திலே இருக்கின்ற புரொஃபஸர் ரங்கா அவர்களும் இருந்தார்.

**திரு. கே. வினாயகம்:** தலைவர் அவர்களே, ஆகவே, விஷயம் தெரிந்திருக்கிறது. நன்கு படித்தவர் முதலமைச்சராக இருப்பதாலே, இந்த நேரத்திற்குத் தகுந்தாற்போல் சரிவர ஒரு நிதிநிலை





அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. பொதுவாக, இந்த பப்ளிக் பினான்ஸ் விஷயத்திலே, யார் மீது வரி போடுவது, யார் தருவார்கள், எப்பேர்ப்பட்ட வரி போடுவது என்றெல்லாம் விதிகள் இருக்கின்றன. அதைக் கடைப்பிடித்தார்களா நமது முதலமைச்சர் அவர்கள் என்ற சந்தேகம் இருக்கிறது. நமது நாட்டில் இருக்கும் சிக்கல்களைப் போக்க வேண்டும்; அபிவிருத்தி வேலைகள் தடைப்படாமல் தொடர்ந்து நடத்தவேண்டும். தமக்கென்று இருக்கும் கொள்கைகளை நடைமுறையில் கொண்டு வரும்போது அதற்கு கொஞ்சம் நஷ்டம் ஏற்படும். அதையும் ஈடுகட்ட வேண்டும். இவைகளை எல்லாம் மனக் கண்ணில் வைத்துக் கொண்டு இந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்களா என்பதிலே சந்தேகம் இருக்கிறது. பப்ளிக் பினான்ஸ் விதிகளின்படி ஒரு வரி போடுவது என்று சொன்னால் அந்த வரியை வாங்கும்போது செலுத்துபவனுக்குக் குறைந்த அளவுக்குத்தான் துன்பம் ஏற்படவேண்டும். To pluck the feather from the duck without causing much inconvenience—Pegu's 'Public Finance' and Dalton's 'Public Finance'. ஐயா அவர்கள் படித்திருப்பார்கள். இவைகள் எல்லாம் படித்த அவர்கள் இப்போது வரி போடுகிறேன் என்று முன்வந்திருப்பதற்காக அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். ஆட்சியில் இருக்கும்போது பொறுப்பு ஏற்படுகிறது. முன்பெல்லாம் கிளர்ச்சிக்காரர்களாக இருந்தார்கள். ஆங்கிலத்தில் சொல்வது போல் "பொலிடிகல் அஜிடேட்டர்ஸ்' ஆக இருந்தார்கள். ஆட்சியில் இருப்பவர்களைப் பார்த்துக் குறை சொல்வது சுலபம். முன்பு அவர்கள் வரி போடும்போது அநியாயமான வரி போட்டு விட்டார்கள்; மக்கள் வரிச்சுமையைத் தாங்க முடியவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். கேலியாகக் கூட 'ஜனவரி, பிப்ரவரி'யைத் தவிர மற்ற வரிகளையெல்லாம் போட்டுவிட்டார்கள் என்று அடுக்கு மொழியிலே சொல்லி மக்களை நம்ப வைத்தார்கள்

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நண்பர் அவர்கள் தெரிந்து கொள்வதற்காகச் சொல்லுகிறேன். இதுவரை போடப்படாத வரிகள் ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்கள்தான் என்று சொன்னது காலம்சென்ற சத்தியமூர்த்தி அவர்களாவார்.

**திரு. கே. வினாயகம்:** அதற்கும் நன்றி, எங்களுடைய ஆசிரியருடைய பாடத்தைத்தான் நீங்கள் திருப்பிச் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சத்தியமூர்த்தி அந்தப் பாடத்தைச் சொன்னபோது நானோ நண்பர் திரு. வினாயகம் அவர்களோ அவரிடத்தில் சீடர்களாக இல்லை.

**திரு. கே. வினாயகம்:** 'ஜோக் அபார்ட்'—இந்த நிதிநிலை அறிக்கையில் வரி போட்டிருக்கிறார்கள். 'வரி போடாமலே ஆட்சியை நடத்துவோம்; வரி போட்டவர்கள் 'அரக்கர்கள்' என்ற

கொள்கையைக் காற்றில் பறக்க விட்டு விட்டு வரி போட்டிருக்கிறார்கள். அவ்வாறு வரி போடுவதில் கூட ஒருவிதமாக மாற்றிச் சொன்னார்கள். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 60 சதவிகிதம் வரியைக் குறைத்து விடுவோம்; 40 சதவிகிதம் வசதியைப் பெருக்குவோம்' என்று சொன்னார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு வரி போடாமல் சர்க்காரை நடத்தமுடியாது என்று அண்ணா அவர்கள் சொல்லுவதிலே மெத்த சந்தோஷம். எந்த ஆட்சியாக இருப்பினும் சரி, நல்ல ஆட்சியாக இருக்க வேண்டுமென்றால், வளர்ச்சியடைகின்ற நாட்டுக்கு அபிவிருத்தி வேலைகளைப் பெருக்க வேண்டுமென்று நினைத்தால், ஏழைகளுக்கு நன்மை செய்யப் போகிறோம் என்ற கொள்கையை எவர் வைத்திருந்தாலும் கூட, வரி போட்டுத்தான் தீரவேண்டும். அவ்வாறு வரி போடும்போது எவர் மீது வரி போடுவது, எப்படிப்பட்ட வரி போடுவது, கொடுக்கிற சக்தி இருக்கிறதா என்பதையெல்லாம் மனத்தில் வைத்துப் போடவேண்டும். அந்த அளவுக்கு அவர்களுக்கு மனத்தில் எண்ணம் இருந்தால் கூட நடைமுறையில் அப்படிச் செய்திருக்கிறார்களா என்பதைப் பற்றி யோசிப்போம்.

தலைவர் அவர்களே, வரிகளைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். இவர்கள் பெரும்பாலும் மக்களிடம் பிரசாரம் செய்ததில் ஒருபடி அரிசி ஒரு ரூபாய்க்குத் தருகிறோம் என்று சொன்னது முக்கியமானது. ஒரு படி என்று சொல்லுவதே விதிகளுக்கு மாறானது. 'படி' எல்லாம் இப்போது மலையேறிவிட்டது இப்போது கிலோ என்று சொல்ல வேண்டும். ஒரு படி என்று சொல்வது is not proper polities, இப்போது கிலோ ரீதியில் அரிசி கொடுக்கும்போது ஒரு படி அரிசி கிட்டத்தட்ட ரூ. 1.06 ஆகிறது. ஆகவே ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்று சொல்லுவதிலும் தவறு இருக்கிறது. ஏழைகளுக்கு உதவி செய்யப் போகிறோம் என்று முன்பு சொன்னார். ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்குப் போடுவோம் என்று சொன்னவர்கள் இப்போது 'மத்திய அரசாங்கம் எங்களுக்கு உதவி செய்தால் போடுவோம்' என்று பிரசாரம் செய்கிறார்கள். இந்த அரசாங்கமே போட வேண்டுமே தவிர. . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது மற்ற உறுப்பினர் குறுக்கிடக்கூடாது.

THIRU K. VINAYAKAM : I am not allergic to interruptions. But they must be cogent. இந்த ஒரு படி அரிசி போடுகின்ற நியதி இருக்கிறதே, அதை பொதுமக்கள் வரவேற்கிறார்கள். 'மத்திய சர்க்காரிடம் உதவி கேட்டிருக்கிறோம், கொடுக்கவில்லை என்றால் கிளர்ச்சி செய்வோம், மூச்சந்திக்கு இழுப்போம், மற்றும் பதவிகளைக் கூடத் துறந்துவிடுவோம்' என்றெல்லாம் சொல்வதிலே பொருளில்லை. எக்கஷ்டமாயினும், என்ன தொல்லை வந்தாலும், எப்படியேனும் நாங்களே சமாளிக்கிறோம் என்று சொல்வதுதான் திறமையுள்ள சர்க்காருக்கு அடையாளமாகும். இவர்களுக்குத்



திறமை இருக்கிறது. அந்த நிலையிலேயே நிற்க வேண்டுமே தவிர எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் தரவில்லை என்று கூறி அவர்கள் மீது பழி போட்டு விட்டு . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது ஒன்றுதான் உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம். மத்திய சர்க்காருடைய போக்கினாலே மாநில சர்க்காருடைய நடவடிக்கைகள் சரியான முறையில் நடப்பதற்கு இடம் அளிக்கவில்லை என்பதை வெளிப்படையாகக் கூறுவது எங்கள் கட்சி; அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையிலே சிக்கிக் கொண்டிருப்பது உங்கள் கட்சி.

**திரு. கே. விநாயகம் :** கூடிய அளவுக்கு நமது சர்க்காரே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விநியோகம் செய்வதைத் தொடர்ந்து நடத்த வேண்டும். உங்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் சென்னையில் இருப்பவர்கள் மாத்திரமோ அல்லது கோவையில் இருப்பவர்கள் மாத்திரமோ அல்ல. நாடு முழுவதும் ஆதரவு கொடுத்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட நல்ல ஓட்டுக்களை வாங்கியிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலும் மக்கள் எப்போது ஒரு படி அரிசி என்று கேட்கிறார்கள். ஆரம்ப நிலையில் இப்படி வைத்துக் கொண்டிருந்தாலும் கூட பெரும் நோக்கம் எப்படி இருக்க வேண்டும்? மாநில மக்கள் எல்லோருக்கும் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு வர வேண்டும். குறிப்பாக, அரசியல்வாதிகளிடம் ஒரு எண்ணம் இருக்கிறது, 'சென்னையில் இருப்பவர்களுக்கு அரிசி தரவேண்டும்; ஏனென்றால் அரிசியை உற்பத்தி செய்ய முடியாதவர்கள் சென்னையிலே இருக்கிறார்கள்' என்ற எண்ணம் இருக்கிறது. அந்த முறையில் சென்னை, கோவை நகரங்களில் ஒரு படி அரிசி போட்டு விட்டு கிராமங்களில் இருப்பவர்களை விட்டு விட்டார்கள். கிராமங்களில் இருப்பவர்களுக்குத் தாராளமாக அரிசி கிடைக்கிறது; அவர்கள் கவலைப்பட வேண்டாம் என்ற மெத்த நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், ஒரு கிராமத்தில் 100 பேர் இருப்பதாக வைத்துக் கொண்டால், அதிலே 20 பேர்தான் நிலம் வைத்திருப்பார்கள், மற்ற 80 பேர் குத்தகைதாரர்களாகவோ, கூலி வேலை செய்பவர்களாகவோதான் இருப்பார்கள். அவர்கள் உழைத்துவிட்டு மாலையில் வீட்டுக்கு வரும்போது அரிசி வாங்கித்தான் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏதாவது நன்மை செய்வதாக இருந்தால் இந்தத் திட்டத்தை முதலிலே கிராமங்களில் செய்திருக்க வேண்டும். நகரங்களில் இருப்பவர்களுக்குச் செய்வதைத் தவறு என்று சொல்லவில்லை. கிராமங்களைப்பற்றி நல்ல வார்த்தைகளாக அப்போதைக்கப்போது பேசுகிறார்களே தவிர, அடிப்படையில் நல்ல உதவி இதுவரை ஒன்றும் செய்யவில்லை. வியாபாரிகளுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற முறையில் எக்ஸைஸ் வரியின் விகிதத்தை உயர்த்தியிருப்பதோடு

காம்பவுண்டிங் செய்து கொள்வதையும் 50,000-த்திலிருந்து 75,000 என்று உயர்த்தியிருப்பது நல்லதுதான். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். புஞ்சை நிலத்திற்கு வரி எடுத்து விட்டதாகச் சொல்லுகின்ற அதே நேரத்திலே அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் கட்டுவதற்கான கணக்கை வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் ஒரு லிமிட்டுக்கு மேல் போனால் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம். கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதிலே இருக்கக்கூடிய கஷ்டங்கள்பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் இன்கம்டாக்ஸ் கட்டுகிறோம். நம்முடைய கணக்குகளையே நாம் வேறு ஒருவரை வைத்து எழுத வேண்டியிருக்கிறது. அவர் தவறாக எழுதினால் கூட அதற்கு நாம் இலக்காகிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் இன்கம்டாக்ஸ் கட்டுகிறார்கள் என்றே கருதுகிறேன். விவசாயிகள் எவ்வளவுதான்
மு.ப. 10-30 பணக்காரர்களாக இருந்தாலும் சீலிங் லிமிட் இருக்கிறது. (குறுக்கீடு) ஏதோ மனைவியின் பேரில், பிள்ளைகளின் பேரில் என்று இருக்கலாம்.

அப்படியிருக்கும்போது அவர்கள் எப்படி கணக்குகள் வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்? ஒரு கண்ணில் சுண்ணாம்பும் ஒரு கண்ணில் வெண்ணெய்யும் என்று சொல்வார்களே அதே போல் வியாபாரிகளுக்குச் சலுகை காட்டிவிட்டு விவசாயிகளுக்கு சலுகை காட்டப்படவில்லை. இதை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் "Rob Peter and pay paid" என்று ராபின்ஹூட் காலத்தில் சொல்லப்பட்டது. ஒரு சிலருக்கு நன்மை செய்து விட்டு மற்றவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்பது என்பது நல்ல ஆட்சிக்கு அறிகுறியாக இருக்குமா என்று சந்தேகப்படுகிறேன். கிராமங்களுக்குச் சென்று கொள்முதல் செய்கிறார்கள். அதை வரவேற்கிறேன். நான் கொள்முதலுக்கு விரோதி அல்ல. ஆனால் கையாளுகிற முறைதான் சரியானதல்ல. ஆரம்பத்தில் உங்கள் கழகத் தோழர்கள் போலீசில் முன்னதாக தகவல் தெரிவித்து அவர்களுடன் ஜீப்பில் ஏறிச் சென்று இங்கிருப்பதை எடுங்கள் அங்கிருப்பதை எடுங்கள் என்று கூறி நடந்த நிகழ்ச்சிகளை எனக்குத் தெரியும். இதை அண்ணா அவர்கள் மறுத்தால் ஒத்துக்கொள்ள நான் தயாராயில்லை. எவ்வளவோ இடங்களில் கழகத் தோழர்களை வைத்துக் கொண்டு ஜபர்தஸ்து என்று சொல்லமாட்டேன், எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது, எங்கள் அண்ணா ஆட்சி செலுத்துகிறார்கள், எங்களை யாரும் தடுப்பதற்கில்லை என்று கூறிய நிகழ்ச்சிகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது குறைந்துள்ளது என்று கேள்விப்படுகிறேன். இப்போது உள்ள முறையில், நாங்கள் வைத்ததுதான் சட்டம் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யமுடியும் என்று பரவலாக அபிப்பிராயங்களைத் தெரிவித்து வருகிறார்கள். உறுப்பினர்களுக்கோ அல்லது சட்டமன்றத்திலுள்ள பொறுப்புள்ள



உறுப்பினர்களுக்கோ அந்த எண்ணம் இல்லை. ஆனால், பரவலாக பாமர மக்களிடம் இப்படிப்பட்டதொரு 'The cadets of the warty' எண்ணம் ஏற்படுத்தப்படுகிறது. இதை நீங்களும் போக்க வேண்டும், எங்கள் கட்சியிடம் அந்த அபிப்பிராயத்தைப் போக்கத் தயாராயிருக்கிறார்கள். நாம் எல்லாம் இங்கு சீரான சர்க்கார் நடத்த வந்திருக்கிறோமே தவிர, கட்சிப் பலத்தைக் காட்டி நாங்கள் அவர்களை அழித்துவிட்டோம், நீங்கள் எங்களை அழிக்கப் பார்க்கிறீர்கள் என்றெல்லாம் சொல்வது சரியல்ல. அண்ணா அவர்களே டெல்லியில் நாசூக்காகச் சொல்லியிருக்கிறார்கள்:

We have come to transact business in the committee, you have come to govern us, we have come to be governed by you
நல்லதொரு சர்க்கார் ஏற்படவேண்டுமே தவிர கட்சி சர்க்கார் என்று வைத்து கட்சித் தோழர்களுக்கு நன்மை அளித்து கட்சித் தோழர்கள் அல்லாதவர்களுக்குத் தீமை விளைவித்துக்கொண்டு போகக் கூடாது.

பஸ்களை தேசியமயமாக்கப் போகிறோம் என்று போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் தீவிரமாக திட்டம் தீட்டியிருப்பதை ஆதரிக்கிறேன். இது அவர்கள் கொள்கை அல்ல, இது எங்கள் கொள்கை. நாங்கள்தான் தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால், அதைச் செய்யும் முறையில்தான் வித்தியாசம் இருக்கிறது. நாங்கள் 120 மைல்கள் என்று சொன்னோம். இவர்கள் 75 மைல்கள் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே தேசியமயமாக்கப்பட்ட இந்தத் தொழிலிலிருந்து எந்தளவிற்கு லாபம் வருகிறது என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். நெடுந்தூர் பஸ்களை விட்டு நஷ்டத்திற்கு ஈடுகட்டு கிறோம் என்று சொல்லலாம். பரவலாக நாடு முழுவதிலும் பஸ்களை தேசியமயமாக்கப்பட்டுவிட்டால் போதிய அளவுக்கு சூப்பர்விஷன் கண்காணிப்பு குறைந்துவிடும். அப்படி எடுத்துக்கொள்வதை ஆட்சேபிப்பது என்றில்லை. அப்படி எடுக்கும்போது மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ளவேண்டும். நான் அவர்களுக்காகப் பரிந்து பேசுவதாகக் கருதக்கூடாது. அவர்களும் இந்நாட்டு மக்கள்தான், அவர்களும் இங்கு வாழ வேண்டியவர்கள்தான் அவர்கள் இத்தொழில் நிரந்தரமாக நடக்கும் என்று நினைத்து மூலதனம் போட்டு செவ்வனே நடத்திவரும் அந்தத் தொழிலை திடீரென்று எடுத்துக் கொள்வது என்றால், அவர்களுக்கு முன்னதாகவே போதிய அளவு அவகாசம் தரவேண்டுமென்று நினைக்கிறவர்களில் நானும் ஒருவன். 'Reasonable opportunity for them to shift over to another profession' 100, 150 பஸ்களை வைத்து நடத்துகிறவர்கள் பற்றித்தான் கூறப்படுகிறதே தவிர ஐந்தாறு பஸ்களை வைத்து நடத்துகிற முதலாளிகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் வட்டிக்கு பணம் வாங்கி முதல் போட்டு தாங்களும் லாபம் சம்பாதித்துக்கொண்டு சர்க்காருக்கு வரி தருகிறார்கள். திடீரென்று உங்கள் பெர்மிட்டுகளை ரென்யூ செய்யமாட்டோம்

[திரு. கே. விநாயகம்] [1967 ஜூன் 27

சென்னை நகரத்திற்குத் தண்ணீர்பற்றி இவ்வளவு நாட்கள் இருந்த கவலை தீர்ந்துவிட்டது. அதைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை. ஆனால் கூவம் நதியிருக்கிறது.

'This is a source of nuisance and a breeading centre for all mosquitoes for export from the city to all over the State.

நான் இருக்கிற கோடம்பாக்கத்திலே பெரிய கொசுவா, சைதாப்பேட்டையிலே பெரிய கொசுவா, அல்லது புரட்சி நடிகர் இருக்கிற இடத்தில், நந்தம்பாக்கத்தில் பெரிய கொசுவா என்று சில ஆண்டுகளுக்கு முன்னே நான் கேள்வியே கேட்டிருக்கிறேன். இந்தக் கொசுத் தொல்லை போக வேண்டுமென்றால், கூவம் நதியைச் சீர்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு வேண்டியவைகளை உடனடியாகச் செய்ய வேண்டியது அவசியம்.

வரி போடுவதைப்பற்றி நான் சொல்லிக் கொண்டு வந்தேன். வரி போட வேண்டியதுதான். ஆனால், யார் மீது போடுவது? 'நாங்கள் உங்களை ஒழிக்கப் போகிறோம்; நீங்கள் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, அவர்கள் மீதே வரி போடுகிறோம். அதாவது பஸ் ஆப்பரேட்டர்ஸ் மீது. சீட்டுக்கு 30 ரூபாய் இருந்தது 35, 40, 45, 50 என்று உயர்ந்து கொண்டே இருக்கிறது. அப்படி அவர்கள் மீது வரியைப் போடுவது, அதே நேரத்தில் கால வரம்பு கூடக் கொடுக்காமல் அவர்களை ஒழித்து விடுவோம் என்று சொல்வது நியாயமா என்று கலைஞர் அவர்களை யோசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள்தான் அந்தத் தொழிலை விட்டே விலகப் போகிறார்களே, அவர்கள் மீது மேலும் வரியைப் போடவேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சேல்ஸ் டாக்ஸ், விற்பனை வரி போடுவது சுலபமானது; ஒன்றும் பிரமாதம் இல்லை. திட்டவட்டமான கொள்கையைப் போட்ட பிறகு 2½ சதவிகிதத்தை 3 சதவிகிதம் ஆக்குவதும், 3 சதவிகிதத்தை 4 சதவிகிதம் ஆக்குவதும் அனைவரும் செய்வார்கள். யார் மீது போடவேண்டும்? போடுகிற வரியை கன்ஸ்யூமர் கொடுப்பாரா? அல்லது டிரான்ஸாக்ட்டிங் மர்ச்சன்ட்ஸ் கொடுப்பாரா என்று யோசித்திருக்க வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் போட்டிருக்கக்கூடிய வரி கன்ஸ்யூமர் தலையில் போய்ச் சேருமே தவிர, வியாபாரி கொடுக்கமாட்டார். வியாபாரி கொடுக்கும் வரியும் இருக்கிறது. ஹோட்டல் மர்ச்சன்ட்தான் கன்ஸ்யூமரிடமிருந்து வரி வாங்காமல், இட்லியை 10 பைசாவுக்குக் கொடுத்து, சட்னி, சாம்பார் எல்லாம் இனமாகக் கொடுத்து சர்க்காருக்கு வரியையும் கொடுக்கக் கூடியவர் (திரு. அ. ப. அழகமுத்து குறுக்கிடு) நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். வருகிற பட்ஜெட்டிலாவது எந்த வரியைப் போட்டாலும், கன்ஸ்யூமர் வரியாகப் போடுவது ஒன்றும் பிரமாதம் இல்லை; யாரும் போட முடியும். யாருக்குப் போடுகிறோமோ அவர்கள் கொடுக்க முடியுமா என்று பார்த்துச் செய்யவேண்டும். பெரும்பாலும் போடப்பட்டுள்ள வரிகள் சாதாரண பாமர மக்கள்தான் கொடுக்க வேண்டிய வரிகளாக இருக்கின்றன. லக்ஷ[illegible], [illegible]



1967 ஜூன் 27] [திரு. கே. விநாயகம்]

டுக்கு வரி போட்டிருக்கிறோமே, வசதி படைத்தவர்கள் தானே கொடுக்கப் போகிறார்கள் என்றால், அந்த இனங்கள் ரொம்பக் குறைவு. இந்த வரிகளை இன்னும் போடாமல் இருக்கிற காரணத்தினால், அவைகளைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃபாரின் லிக்கருக்கு சேல்ஸ் டாக்ஸை அதிகப்படுத்தியிருக்கிறார்கள்—அது வரவேற்கத்தக்கது. அவர்கள் தாங்களாகவே விரும்பி விளையாடுகிற விளையாட்டு—ஆதலாலே அவர்கள் தர முடியும். அவர்கள் வசதி படைத்தவர்கள்தான். அந்த வரியை இன்னும் கூடக் கூட்டியிருக்கலாம். நான் கூட திரு. அண்ணா அவர்களிடம் கேட்டேன் 'இந்த வரியினால் எவ்வளவு வருமானம் கிடைக்கும்?' என்று. '10 லட்சம் ரூபாய் வரும்' என்று சொன்னார்கள். அதை வேண்டுமானால் இன்னும் பரிசீலித்து கொஞ்சம் அதிகப்படுத்தி நமக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டிக் கொள்ளலாம்.

ஸ்டாம்ப் ட்யூட்டியில் புதிய யோசனை சொல்லியிருக்கிறார்கள். இது பரவலான நோய்தான். சிலர் வேண்டுமென்றே மதிப்பைக் குறைத்து எழுதி ரிஜிஸ்டர் செய்கிறார்கள். இது சாதாரணமாக நடக்கின்ற நிகழ்ச்சிதான். ஆனால், புதிய முறையினால் என்ன நடக்கும்? நான் ஒரே ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் சொல்லுகிறேன். இதைப்பற்றி நன்றாக ஆராய வேண்டும். வயதானவர் ஒருவர் இருக்கிறார். அவர் தன்னுடைய சொத்தை பிள்ளைகளுக்குப் பிரிக்க வேண்டுமென்று நினைக்கிறார். அவர் முன்னதாகவே செய்ய விரும்பாமல், சுடுகாட்டுக்குப் போகும்போதுதான் பிரித்துப் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்ய நினைக்கிறார். பத்திரங்களை சப்-ரிஜிஸ்டிராரிடம் கொடுத்து பதிவு செய்ய வேண்டுமென்றால், சொத்தின் மதிப்பில் சந்தேகம் இருக்கிறது என்று தன்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள அவர் கலெக்டரிடம் போக, கலெக்டருடைய தீர்ப்பை எதிர்த்து கோர்ட்டில் வழக்காட, அப்படிப்பட்ட நிலைமை வந்தால் என்ன ஆகும்? அதற்குள் இந்த ஆள் போய்விடுவான். வயதானவர் போய்விட்டால், என்ன விளைவுகள் ஏற்படும்? இவைகளை மனத்திலே வைத்துக் கொண்டு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசி உயர்வு தான் நம்மை பிடித்திருக்கிற பெரிய நோய் என்று ஒப்புக் கொள்கிறேன். இந்த ராஜ்யத்தில் மட்டுமல்ல, இந்த தேசம் பூராவிலும் விலைவாசி உயர்வானது நம்மை தொல்லைப் படுத்துகிறது. இந்த விலைவாசி உயர்வுக்கு யார் காரணம் எப்படிச் செய்தால் விலைவாசி உயர்வைக் குறைக்க முடியும்? இதற்கு வழி இருக்கிறதா என்று எல்லோருமே யோசிக்க வேண்டுமே தவிர, ஆட்சியில் இருந்தவர்கள் மேல் தான் தவறு என்று அவர்கள் பேரில் தூக்கிப் போட்டு நீங்கள் தான் பொறுப்பு என்று எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் சொல்லுவதோ, ஆட்சி செய்யக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் 'இந்தப்

[திரு. கே. விநாயகம்] [1967 ஜூன் 27

சொல்ல வேண்டும். ஆனால், முடிவைப் பார்க்கும்பொழுது, கடைசியில் பி.எச்.டி. டிகிரி கொடுக்கலாமா, கொடுக்கக் கூடாதா, என்ற சந்தேகம் அங்குதான் வருகிறது. 'தீஸிஸ்' சரியாக இருக்கிறது. முடிவைப் பார்க்கும்பொழுது 'பி.எச்.டி.' டிகிரி கொடுக்கலாமா வேண்டாமா என்ற தயக்கம் ஏற்படுகிறது. ஆனால் மக்கள் கொடுத்துவிட்டார்கள் என்று அவர்கள் சொல்லலாம். 'கன்குளூஷனில்' தான் தடை வருகிறது. எந்த முறையைக் கையாள வேண்டும் என்பதிலே கொஞ்சம் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Chief Minister stated last time, 'Our steps are measured'. What a fine English; When I said, 'Your days are numbered', the Hon. Chief Minister retorted by saying, 'Our steps are measured'. I remember those words which are still ringing in my ears. Now your steps should continue to be measured and your steps should not be faltering and you should not run away from the responsibility. May God bless you.

* திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, 20 ஆண்டுக் காலமாக ஒரே கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்ததன் காரணமாக மெலிந்துபோன மாநில நிதிவசதிகளை வைத்துக்கொண்டு இந்த வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்திருப்பதாக அறிஞர் அண்ணாவர்கள் முன்னுரையிலே கூறியிருக்கிறார்கள். அந்த முறையில், மாநிலத்திற்கு நிலவசதி இல்லாத நிலைமையில் இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தகுந்த புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை என்றாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டாவது ஆண்டு நடந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது ஆண்டாகிய இந்த ஆண்டில் மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் தொகை ரூ. 34 கோடிதான் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படி ஒரு குறைந்த தொகையை வைத்துக்கொண்டு ரூ. 85 கோடிக்குத் திட்டமிட்டு இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றபொழுது, புதுமையான கருத்துக்கள் அதிலே இல்லை என்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். பற்றாக்குறை பட்ஜெட்தான் தயாரித்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். இந்த இரண்டும் ஓரளவுக்குக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள்தான். பற்றாக்குறை பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றால், புதுமையானது ஒன்றுமில்லை என்றால், இதுவரையில் இருந்த பொருளாதார நிதிவசதிகளை வைத்துக்கொண்டு பார்க்கிறபொழுது இந்த மாதிரி பற்றாக்குறை பட்ஜெட் தயாரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனென்றால், இந்த மாநிலத்தின் காங்கிரஸ் அரசாங்கம்



1967 ஜூன் 27] [திரு. து. ப. அழகமுத்து]

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, அதற்கான வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்பொழுது, தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டங்களில் 10 ஆண்டுகளுக்குப் பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் அமைந்திருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குத்தான் உபரி பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது. 15 ஆண்டுகளில் 10 ஆண்டுகளுக்கு ரூ. 52 கோடி அளவுக்குப் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 9 கோடி அளவுக்கு உபரி பட்ஜெட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, 15 ஆண்டுகளில் ரூ. 43 கோடி அளவுக்குப் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் மூலம் பணவீக்கம் உண்டாக்குவதற்கான வழியை காங்கிரஸ் சர்க்கார்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அதனுடைய விளைவுகளையெல்லாம், கஷ்டங்களையெல்லாம் இப்பொழுது பொறுப்பேற்றிருக்கிற சர்க்கார் ஏற்கவேண்டியிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கருதுகிறேன். புதுமையானதாக ஒன்றுமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். புதுமையாக என்ன அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று புரியவில்லை. தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்திருக்கிறோம் இந்த பட்ஜெட்டில். கட்சியினுடைய கொள்கைகளையும் விளக்கியிருக்கிறோம்.

விவசாயம் சம்பந்தமாக என்ன கொள்கைகளைப் பின்பற்றுவோம் என்று குறிப்பிட்டு, விவசாய நிலங்களுக்கு, டிரை லாண்ட்ஸ்க்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். இந்த வரி விலக்குப் போதாது என்று எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள். 'நாங்கள் தேர்தல் காலத்திலே எல்லா நிலங்களுக்கும் வரி விலக்கு கொடுக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டோம், ஏன் இந்த பட்ஜெட்டில் அப்படிக் கொடுக்கவில்லை, புஞ்சை நிலங்களுக்கு மட்டும் தானே கொடுத்திருக்கிறார்கள்' என்று குறைப்பட்டார்கள். அவர்கள் இந்த மாநிலத்தில் மட்டும்தான் அப்படிச் செய்யவேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறார்கள்? அவர்கள் ஆளுகின்ற மற்ற மாநிலங்களில் இதை அவர்கள் கொள்கையாக வைத்துக் கொள்ளவில்லை. மத்திய பிரதேசத்தில் நிலவரியை ஒழிக்கவில்லை. உத்திரப் பிரதேசத்தில் நிலவரியை எடுக்க அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. இந்த மாநிலத்தில் மட்டும் அவர்கள் தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றுவதற்காகக் கைக்கொண்ட ஒரு வழியே தவிர, வேறு ஒன்றுமில்லை. இந்தச் சர்க்கார் ஏன் எல்லா நிலங்களுக்கும் வரி விலக்கு அளிக்கவில்லை என்றால், இப்பொழுதுள்ள நிதிநிலை சரியில்லை அதன் காரணமாகத்தான் கொடுக்கவில்லையே தவிர பின்னால் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்வோம் என்று நான் கூறுகிறேன்.

அதே போல தொழில்களைப்பற்றிய சர்க்கார் கொள்கை பஸ்களை தேசியமயமாக்குவதன் மூலமும் மின்சாரத் துறையை சர்க்காரே ஏற்றுக்கொள்வதன் மூலமும் உறுதியாக்கப்பட்டிருக்கிறது. கல்வி

சம்பந்தமான கொள்கையையும் பற்றித் தெரிவித்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சி தான் நாட்டிலே இருக்கிற மக்களுக்கு கல்வி அளித்தது என்ற எண்ணத்தை அவர்கள் உற்பத்தி செய்துவந்ததோடு மட்டுமல்லாமல், காங்கிரஸ் அல்லாத சர்க்கார் ஏற்படுமானால் அரிஜனப் பிள்ளைகள் கல்வி வசதி பெற முடியாது, திறந்த பள்ளிக்கூடங்கள் மூடப்படும் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் அவர்கள் குறிப்பிட்டு வந்தார்கள். அதற்கு மாறாக, கல்வி வசதியைப் பெருக்குவதற்காக அதிகத் தொகை ஒதுக்கியது மட்டுமல்லாமல், புதிய கல்லூரிகள் திறக்கப் போகிறோம் என்ற அறிவிப்பையும் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் இந்தப் பேரவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, சமுதாயத்தைப்பற்றி சர்க்கார் கொள்கை என்ன என்பதுபற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தை நாங்கள் மேலும் உறுதியாக அமுல் நடத்துவோம் என்று விளக்கியிருக்கிறோம். மதுவிலக்குக் கொள்கையை கொண்டுவந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். ஆனால், அந்தக் கொள்கையை அவர்களால் எல்லா மாநிலங்களிலும் சரிவர பின்பற்ற முடியவில்லை என்பதைக் கூறுவதற்கு வெட்கப்படுகிறார்கள். 'டைரக்டிவ் பிரின்ஸிபில்ஸ் ஆப் தி ஸ்டேட்' என்று நம்முடைய அரசியல் சட்டத்தில் சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் காரியங்களை அவர்கள் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றினார்கள் என்று கூற முடியுமா என்றால், இல்லை. நீதி நிர்வாகத்தைப் பிரிக்க வேண்டும் என்பதை காங்கிரஸ்காரர்கள் கொள்கையாக வைத்திருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு எல்லா மாநிலங்களிலும் பிரிக்கப்படவில்லை. அதைப்போல மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்துவதை கொள்கையாக வைத்திருக்கிறார்கள். ஆனால், எல்லா மாநிலங்களிலும் அம்மாதிரி செய்யப்படவில்லை. சில மாநிலங்களில் அந்தக் கொள்கை தளர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் நாங்கள் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் உறுதியான கொள்கையோடு இருக்கிறோம் என்று சமுதாயத்திற்குத் தெரிவித்திருக்கிறோம். அது மட்டுமல்ல. ஆரம்ப காலம் முதற்கொண்டே எங்கள் கொள்கையாக இருக்கிற கலப்புத் திருமணங்கள் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகக் கலப்பு மணம் புரிந்துகொள்பவர்களுக்கு சன்மானம் கொடுத்து ஊக்கம் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம். இந்த வகைகளையெல்லாம் நாங்கள் சர்க்காருடைய கொள்கைகளை விளக்கிச் சொல்லியிருக்கிறோம். ஆனால், புதியதாக ஒன்றுமில்லையே என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். புதிதாக என்ன செய்ய வேண்டும்? இருபது ஆண்டு காலத்தில் அவர்கள் அரசியல் சாசனத்தில் என்ன இயற்றி வைத்தார்களோ, அவைகளையெல்லாம் கூட அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. மூன்று மாத காலத்தில் எங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள்? மூன்று மாத காலத்தில் இந்தச் சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து





என்னென்ன இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்காரோடு போர் தொடுக்கிறோம் என்று திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நடந்தது என்ன? நாங்கள் அரிசி விலையைக் குறைக்கிறோம் என்று கூறினோம். மத்திய சர்க்கார் உரத்திற்கான விலையை ஏற்றியிருக்கிறார்கள். பஸ் கட்டணத்தை நாங்கள் குறைக்கிறோம் என்று கூறினால், அவர்கள் டீசல், பெட்ரோல் இவைகளுக்கு வரியை உயர்த்துகிறார்கள். இப்படி எங்களுடைய காரியங்களையெல்லாம் மத்திய சர்க்கார் குறுக்கிட்டால் என்ன செய்வது? எல்லாக் காரியங்களையும் எப்படி நிறைவேற்ற முடியும்? மாநில சர்க்காரோடு ஒத்துப் போகிற வகையிலே மத்திய சர்க்கார் எங்கே நடக்கிறது? ஆகவே தான் இந்தக் குறைகளைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மிக விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொருளாதார இலக்கணத்தைப் பற்றி திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வரிபோடுகின்ற தன்மை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். ஆனால், அதே சமயத்தில் போட்டிருக்கிற வரி நியாயமானது என்று சிலவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். வரி போடுகிற இலக்கணத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்களே தவிர, அதை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்ற இலக்கணத்தைப் பற்றி அவர்கள் கூறவில்லை.

அதேபோல, கடன் வாங்கினால், அதை எப்படி செலவழிக்க வேண்டும் என்று அந்த இலக்கணத்தைக் குறிப்பிடவில்லை. மு.ப. 11-00
அறிஞர் அண்ணா அவர்கள் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கடன்களைத் தீர்ப்பதற்கும், வட்டி செலுத்துவதற்கும் போதிய அளவு ஆதாயம் தருகிற திட்டங்களில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்கிற கண்டிப்பான பழம்பெரும் நிதி இலக்கணத்திற்கிணங்க இக் கடன் தொகைகள் பயன் படுத்தப் பட்டிருந்தால், பொதுக் கடன் வளர்ச்சியினாலோ, வளர்ந்து வரும் வட்டிச் செலவுகளினாலோ நமக்குக் கவலைக்கு இடமிராது" என்று தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த இலக்கணத்தை 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் பின்பற்றவில்லை. இந்த மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு 358 கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டும். அதற்கு ஆகும் வட்டி மட்டும் 14 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது. வட்டி செலுத்துவதைத் தள்ளித் தாருங்கள் என்று மத்திய சர்க்காரிடம் கேட்டால், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை ஒப்பவில்லை. கடன் வாங்கினார்களே, அந்தப் பணங்கள் பொருளாதார வளர்ச்சிக்காகச் செலவழிக்கப் பட்டனவா என்றால் இல்லை. தொழில் வளர்ச்சிக்கு மிகக் குறைவாகவேதான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. வாங்கிய கடன் 358 கோடியில் பெரும்பாலான தொகை சமுதாயப் பணிகளுக்கே செலவழிக்கப் பட்டிருக்கின்றன. அப்படிப் பட்ட கடன் தொகை

[திரு. து. ப. அழகமுத்து] [1967 ஜூன் 27

சம்பந்தமான கொள்கையையும் பற்றித் தெரிவித்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சி தான் நாட்டிலே இருக்கிற மக்களுக்கு கல்வி அளித்தது என்ற எண்ணத்தை அவர்கள் உற்பத்தி செய்துவந்ததோடு மட்டுமல்லாமல், காங்கிரஸ் அல்லாத சர்க்கார் ஏற்படுமானால் அரிஜனப் பிள்ளைகள் கல்வி வசதி பெற முடியாது, திறந்த பள்ளிக் கூடங்கள் மூடப்படும் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் அவர்கள் குறிப்பிட்டு வந்தார்கள். அதற்கு மாறாக, கல்வி வசதியைப் பெருக்குவதற்காக அதிகத் தொகை ஒதுக்கியது மட்டுமல்லாமல், புதிய கல்லூரிகள் திறக்கப் போகிறோம் என்ற அறிவிப்பையும் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் இந்தப் பேரவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, சமுதாயத்தைப்பற்றி சர்க்கார் கொள்கை என்ன என்பதுபற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தை நாங்கள் மேலும் உறுதியாக அமுல் நடத்துவோம் என்று விளக்கியிருக்கிறோம். மதுவிலக்குக் கொள்கையை கொண்டுவந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். ஆனால், அந்தக் கொள்கையை அவர்களால் எல்லா மாநிலங்களிலும் சரிவர பின்பற்ற முடியவில்லை என்பதைக் கூறுவதற்கு வெட்கப்படுகிறார்கள். 'டைரக்டிவ் பிரின்ஸிபில்ஸ் ஆப் தி ஸ்டேட்' என்று நம்முடைய அரசியல் சட்டத்தில் சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் காரியங்களை அவர்கள் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றினார்கள் என்று கூற முடியுமா என்றால், இல்லை. நீதி நிர்வாகத்தைப் பிரிக்க வேண்டும் என்பதை காங்கிரஸ்காரர்கள் கொள்கையாக வைத்திருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு எல்லா மாநிலங்களிலும் பிரிக்கப்படவில்லை. அதைப்போல மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்துவதை கொள்கையாக வைத்திருக்கிறார்கள். ஆனால், எல்லா மாநிலங்களிலும் அம்மாதிரி செய்யப்படவில்லை. சில மாநிலங்களில் அந்தக் கொள்கை தளர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் நாங்கள் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் உறுதியான கொள்கையோடு இருக்கிறோம் என்று சமுதாயத்திற்குத் தெரிவித்திருக்கிறோம். அது மட்டுமல்ல. ஆரம்ப காலம் முதற்கொண்டே எங்கள் கொள்கையாக இருக்கிற கலப்புத் திருமணங்கள் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகக் கலப்பு மணம் புரிந்துகொள்பவர்களுக்கு சன்மானம் கொடுத்து ஊக்கம் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம். இந்த வகைகளையெல்லாம் நாங்கள் சர்க்காருடைய கொள்கைகளை விளக்கிச் சொல்லியிருக்கிறோம். ஆனால், புதியதாக ஒன்றுமில்லையே என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். புதிதாக என்ன செய்ய வேண்டும்? இருபது ஆண்டு காலத்தில் அவர்கள் அரசியல் சாசனத்தில் என்ன இயற்றி வைத்தார்களோ, அவைகளையெல்லாம் கூட அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. மூன்று மாத காலத்தில் எங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள்? மூன்று மாத காலத்தில் இந்தச் சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து



1967 ஜூன் 27] [திரு. து. ப. அழகமுத்து]

என்னென்ன இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்காரோடு போர் தொடுக்கிறோம் என்று திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நடந்தது என்ன? நாங்கள் அரிசி விலையைக் குறைக்கிறோம் என்று கூறினோம். மத்திய சர்க்கார் உரத்திற்கான விலையை ஏற்றியிருக்கிறார்கள். பஸ் கட்டணத்தை நாங்கள் குறைக்கிறோம் என்று கூறினால், அவர்கள் டீசல், பெட்ரோல் இவைகளுக்கு வரியை உயர்த்துகிறார்கள். இப்படி எங்களுடைய காரியங்களையெல்லாம் மத்திய சர்க்கார் குறுக்கிட்டால் என்ன செய்வது? எல்லாக் காரியங்களையும் எப்படி நிறைவேற்ற முடியும்? மாநில சர்க்காரோடு ஒத்துப் போகிற வகையிலே மத்திய சர்க்கார் எங்கே நடக்கிறது? ஆகவே தான் இந்தக் குறைகளைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மிக விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொருளாதார இலக்கணத்தைப் பற்றி திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வரிபோடுகின்ற தன்மை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். ஆனால், அதே சமயத்தில் போட்டிருக்கிற வரி நியாயமானது என்று சிலவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். வரி போடுகிற இலக்கணத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்களே தவிர, அதை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்ற இலக்கணத்தைப் பற்றி அவர்கள் கூறவில்லை.

அதேபோல, கடன் வாங்கினால், அதை எப்படி செலவழிக்க மு.ப. 11-00
வேண்டும் என்று அந்த இலக்கணத்தைக் குறிப்பிடவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கடன்களைத் தீர்ப்பதற்கும், வட்டி செலுத்துவதற்கும் போதிய அளவு ஆதாயம் தருகிற திட்டங்களில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்கிற கண்டிப்பான பழம்பெரும் நிதி இலக்கணத்திற்கிணங்க இக் கடன் தொகைகள் பயன் படுத்தப் பட்டிருந்தால், பொதுக் கடன் வளர்ச்சியினாலோ, வளர்ந்து வரும் வட்டிச் செலவு களினாலோ நமக்குக் கவலைக்கு இடமிராது" என்று தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த இலக்கணத்தை 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் பின்பற்றவில்லை. இந்த மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு 358 கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டும். அதற்கு ஆகும் வட்டி மட்டும் 14 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது. வட்டி செலுத்துவதைத் தள்ளித் தாருங்கள் என்று மத்திய சர்க்காரிடம் கேட்டால், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை ஒப்பவில்லை. கடன் வாங்கினார்களே, அந்தப் பணங்கள் பொருளாதார வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்பட்டனவா என்றால் இல்லை. தொழில் வளர்ச்சிக்கு மிகக் குறைவாகவேதான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. வாங்கிய கடன் 358 கோடியில் பெரும்பாலான தொகை சமுதாயப் பணிகளுக்கே செலவழிக்கப் பட்டிருக்கின்றன. அப்படிப் பட்ட கடன் தொகை

[திரு. து. ப. அழகமுத்து] [1967 ஜூன் 27

களுக்கு வட்டி கேட்கிறார்கள். வட்டி கொடுத்தால் அதன் மூலம், எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதை, அறிஞர் அண்ணா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மொத்த வருமானத்திலே கிட்டத்தட்ட 27 சதவிகிதம் வட்டியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை இரண்டு வகையான கடன்கள். ஒன்று பொதுகடன், மற்றொன்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கிய தொகைக்காக உள்ள கடன். கிட்டத்தட்ட மாநில சர்க்கார் கொடுக்க வேண்டிய வட்டி மொத்த வருமானத்தில் ஏழு சதவீதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொகை மாநிலத்தில் செலவழிக்கப்பட்டால், எவ்வளவு சௌகரியமாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதைக் கொண்டு என்.ஜி.ஓ.-களுக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகைகளில் செலவு செய்யலாம். மாநில பட்ஜெட்டில் நிர்வாகச் செலவு மட்டும் 57 கோடி ரூபாய் என்றால், மத்திய சர்க்காருக்கு வட்டிப் பணம் மட்டும் 14 கோடியாக இருக்கிறது. மொத்த நிர்வாகச் செலவில் வட்டிப் பணத்தைக் கணக்குப் பார்த்தால் அது நாலில் ஒரு பங்கு அளவாக இருக்கிறது அந்த அளவிற்கு மத்திய சர்க்காருக்கு வட்டியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொகையை மத்திய சர்க்கார் தள்ளித் தரவேண்டும் என்று கேட்டால், அதைப் போர் தொடுப்பதாக எப்படிக் கருத முடியும்? கடன் வாங்கிச் செலவழித்தார்களே, அதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்றால், அப்படி ஏற்பட்டிருந்தாலும் ஒப்புக் கொள்ளலாம் என்று பார்த்தால், வாழ்க்கைச் செலவு விகிதம் தான் உயர்ந்திருக்கிறது, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மொத்தம் 16.5 இதுவரையில் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிறது. தனியாக உணவுப் பொருள்களைப் பார்க்கும்போது, 24.1 சதவீதம் அளவுக்கு வாழ்க்கைப் புள்ளி உயர்ந்திருக்கிறது. வருமான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றியும் கூட சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், தனிநபர் வருமானம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஆமையைப் போல நகர்ந்து கொண்டிருக்கிறது. 1960-61-ல் தனிநபர் வருமானம் ரூ. 325; 1962-ல் ரூ. 349; 1963-ல் ரூ. 354; 1964-ல் ரூ. 363; 1965-ல் ரூ. 374; 1966-ல் ரூ. 363. ஆக இப்படி, ரூ. 10, 15 குறைந்தோ, கூடுதலாகவோ இருக்கிறதே யல்லாமல், அதிகப்படியாக ஒன்றும் உயர்ந்துவிடவில்லை. வருமானங்கள் வளரும், உயரும் அளவில் தொழில் வசதிகள் பெருக்கப் பட்டிருக்கிறதா என்றால், இல்லை. நிறைவேற்றப்பட்டிருக்கும் தொழில்கள் சரியான முறையில் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. செலவழிக்கப்பட்ட பணம் வருமானம் வரும் துறைகளில் செலவழிக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டைக் கூற வேண்டியிருக்கிறது. இதைச் சொன்னால், எதிர்க் கட்சியில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் சற்றுக் கஷ்டப்படுகிறார்கள். தொழில்கள் இங்கே ஆரம்பிக்கப்பட்ட விதத்தைப் பற்றி நேற்றைய தினம் மாண்புமிகு திரு. பூவராகன் அவர்கள், 'நாங்கள் தொழில்கள் ஆரம்பிக்க



1967 ஜூன் 27] [திரு. து. ப. அழகமுத்து]

போராட்டத்தையா நடத்தினோம்?' என்று கேட்டார்கள். கல்பாக்கத்தில், இன்னும் வேறு பல இடங்களில் தொழில்கள் இல்லையா என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆனால் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. அதற்காக அவர்கள் போராட்டம் நடத்தவில்லை. சரி ஆனால் நாங்கள் போராட்டம் நடத்தியதன் பலனாக, அவர்கள் இவற்றை அடைந்தார்கள். அதை பூவராகன் அவர்கள் மறந்து இருக்கலாம். ஆனால், அன்றைக்கு திரு. சுப்பிரமணியம் இங்கே நிதி அமைச்சராக இருந்த காலத்தில், எங்கள் அறிஞர் அண்ணா குறிப்பிட்டார்கள்: 'எங்களைக் காட்டி நீங்கள் மத்திய சர்க்காரிடம் கூடுதலாகப் பெற்றுக் கொள்ளலாமே' என்று. அதற்கு அன்றைய அமைச்சரான திரு. சுப்பிரமணியம் 'இந்த ரகசியத்தை அம்பலமாகக் கூறிவிட்டீர்களே' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, தொழில்கள் வந்தது என்றால் அது காங்கிரஸ்காரர்களுடைய திறமை காரணமாக வந்துவிடவில்லை. இன்றைக்கு சேலம் ஸ்டீல் ப்ளாண்டை எடுத்துக் கொள்வோம், பல வருஷங்களாக, நீங்களே சொல்லி, இங்கே மக்களை நம்ப வைத்து திட்டம் நிறைவேறும், நிறைவேறும் என்று கூறி வந்தீர்கள். மத்திய சர்க்கார் வெள்ளைக்காரனைப் போல பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு, வேறு மாநிலத்தையும், நம் மாநிலத்தையும் மோத விட்டு, இந்தக் காரியத்தைக் காலந்தாழ்த்திக் கொண்டு போகிறார்கள். போராட்டம் நடத்துவோம் என்றால், என்ன மத்திய சர்க்காரோடு சண்டை போடுவதாகவா ஆகும்? அதைச் சொன்னால் நாங்கள் பிரிவினையை மறைமுகமாக கொண்டு வருகிறோம் என்று பத்திரிகைகளும் கூட கூறுகின்றன. பிரிவினையை மறைமுகமாகக் கொண்டுவர என்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன? மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் சர்க்கார்கள், அவர்களுக்கு ஒரு காரியம் தேவையென்றால் மத்திய சர்க்காரோடு போராட்டம் நடத்தவில்லையா? இதே ஸ்டீல் ப்ளாண்டை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆந்திரா சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு கிளர்ச்சியே நடத்தப் பட்டது. அந்தக் கிளர்ச்சிக்கு சர்க்கார் பின் துணையாக இருந்தது. ஆந்திர சர்க்கார் பின் துணையாக இருந்தது என்பதை மத்திய சர்க்காரில் ஒப்புக் கொண்டார்கள். ஆகவே, இன்றைக்கு இந்தச் சர்க்கார், முன்னால் நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று இங்கே ஸ்டீல் ப்ளாண்ட் அமைக்கப் படவேண்டும் என்று போராட்டம் நடத்துவது என்றால், அதற்கு ஆதரவு கொடுப்பதற்குப் பதிலாக, அதை வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள், அது சரியாகாது என்று தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை புதிய சர்க்கார் காட்டும் புதிய திருப்பத்தைக் கொண்டிருக்கிறது. அந்தத் திருப்பத்தை நான் வரவேற்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, அநேகமாக ஒரு வாரமாக இந்த நிதி நிலை அறிக்கையின் பேரில் நடைபெற்ற விவாதத்திலே சுமார் 100 கனம் அங்கத்தினர்களுக்கு மேல் கலந்து கொண்டிருக்கிறார்கள். முன்பு கவர்னர் பெருமான் உரையின்பேரிலும் கிட்டத்தட்ட 100 அங்கத்தினர்கள் கலந்து கொண்டார்கள். இதிலேயும் 100 கனம் அங்கத்தினர்களுக்கு மேல் கலந்து கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரியாக 120 உறுப்பினர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : I stand corrected Sir ஆகையினால், சபையிலுள்ள அங்கத்தினர்களில் பாதிக்கு மேல் கலந்து கொண்டிருப்பதிலிருந்து, தமிழகத்திலே இன்றைக்கு வரவுசெலவுத் திட்டத்திலே, அரசியலிலே மக்களுக்கு எவ்வளவு பங்கும், பொறுப்பும் இருக்கிறது என்பதை, இந்தச் சபையின் மூலம் தெளிவாகிவிட்டது என்பதைப் பாராட்டுகிறேன். இப்பொழுது நிதிநிலை அறிக்கையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரு தரப்பினரும் கலந்து கொண்டு இருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலே அவர்கள் முன்னால் எதிர்க் கட்சியாக இருந்தபோதிலும் இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கிறவர்கள், அவர்களை நான் வேண்டிக் கொள்வதெல்லாம் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் பேசிய பேச்சுக்களை யெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசுங்கள் என்பதுதான். அப்படிப் பேசியிருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்றுதான் எனக்குத் தெரிகிறது.

அதேபோல் இப்போது நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டிருக்கிறோம். சில அங்கத்தினர்கள் பழைய ஞாபகத்திலே பேசியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். கொஞ்சநாள் பழக்கப்பட்ட பிறகு அவர்கள் தங்கள் கடமைகளை யாற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பட்ஜெட் பற்றி முதலமைச்சரவர்கள் டெல்லியில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில், இதில் என்ன புதுமையிருக்கிறது என்றால் நான் இந்த வருஷத்திலே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதுதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வாஸ்தவம் தான். நானும் இந்தப் பொதுவாழ்விலே, அரசியலிலே இங்கேயும், பாராளுமன்றத்திலும் இருந்திருக்கிறேன். இந்தப் பட்ஜெட்டில் கொஞ்சம்கூடப் புதுமையே இல்லை. இதற்கு உதாரணமாக ஒன்று சொல்லலாம். ஆனால் தவறாகக் கருதக் கூடாது. எலுமிச்சம்பழத்தையும், புளியம்பழத்தையும் பற்றிக் கேட்டால், இது உருண்டை; அது நீளம்; புளிப்புக்கு அது மச்சான் என்று கூறுவார்கள். அதேபோல் இந்த பட்ஜெட் முன்னால் இருந்ததை நீட்டி நெளித்துத் தந்திருப்பதுபோல் இருக்கிறது. அதோடு முதலமைச்சர், நிதியமைச்சர் வரிபோட்டுத்தான் ஆகவேண்டும் என்னும்படியான ஒரு கருத்தை ஏற்றுக்கொண்டிருப்பதை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். எதிர்க் கட்சியாக உள்ள நாங்கள் எதிர்க்கட்சிகளாக இருக்கவில்லை. எதிர்க்கட்சியாக உள்ள



நாங்கள் இதில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்ட வேண்டும். அந்தக் காரியங்களை செவ்வனே சிறந்த முறையில் நடத்திச் செல்ல முடியும். எங்களுடைய ஆலோசனையின் நிச்சயம் ஒத்துழைப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 5001

ஆனால் மிகவும் வருத்தமான காரியம் என்னவென்றால், இந்த நிதிநிலையறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னால் அமைச்சரவையைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஒருவர் வெளியிலே பேசியிருக்கிறார்கள். இதைப்பற்றிக் கேட்டால் அவர்கள், கொள்கைகளைத்தான் சொன்னோம் என்கிறார்கள். அதை விட இன்னொரு படி மேலே சென்று, நான் சொன்னதைத் தவறாகப் பத்திரிகைகளிலே போட்டுவிட்டார்கள். நான் இப்படிச் சொல்லவில்லை என்று கூறக்கூடிய நிலையிலே அவர்கள் பேசுவது பொருத்தமா என்பதை உணர வேண்டும். நான் முதலில் இதைப்பற்றி ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தேன். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர், என்னுடைய நண்பர் உணவு அமைச்சரவர்கள் மேலே இம்மாதிரி ஒரு பிரேரணை கொண்டு வர வேண்டியிருக்கிறதே என்று வருத்தத்துடன் தெரிவித்தேன். இது சாதாரண விஷயம் அல்ல. அவ்வாறு இதைத் தள்ளிவிட முடியாது. அப்படி அவர்கள் தவறாக நினைத்திருப்பார்களானால் சபையில் ஒரு வார்த்தை கூறியிருந்தால் நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருப்பேன். ஆனால் அவர்கள் பட்ஜெட் விவகாரத்தை லீக்கேஜ் செய்யவில்லை. இரகசியம் வெளிப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

V211_31 N67

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகரவர்கள் கனம் எதிர்க்கட்சித் தலைவரின் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகும் அதையே மீண்டும் எழுப்புவது இந்தச் சட்டசபையின் ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டதா என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

N67.2.8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புக்கு ஆதரவாகத்தானே பேசுகிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்பொழுது சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வருவதால் அப்பொழுது பேசிக் கொள்ளலாம், எனவே இப்பொழுது ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதிக்க முடியாது என்று கூறினார்கள். அதன்காரணமாகத்தான் இப்பொழுது நான் இதைப்பற்றிப் பேசுகிறேன். சபாநாயகரின் தீர்ப்புக்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை. நான் கொண்டு வந்த ஒரு விஷயம் இந்த மாமன்றத்திலே சொல்வதுடன் நமக்கு ஆதரவாக இருந்த மக்களுக்கும் தெரிய வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் திரு. தாமஸ், திரு. டால்டன் என்ற அமைச்சர்கள் இதே நிலையிலே ராஜினாமாச் செய்தார்கள். அவர்கள் பட்ஜெட் ரகசியத்தைச் சூசகமாக வெளியிலே சொன்னதற்காக

அவர்கள் ராஜினமா செய்யும்படி ஏற்பட்டது. இவர்கள் இதைப் பற்றி விசாரிக்க ஒரு குழு நியமித்து, என்ன நிலை என்று ஆராய்ந்தது இருந்தாலும் கூட நான் வரவேற்றிருப்பேன். பட்ஜெட் உரையிலே இதுவரும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மிகத் தெளிவாக நான் மறுத்திருந்தும், அது தப்பு என்று சொல்கிறார் போல் தோன்று கிறது. பத்திரிகைகளிலே பல செய்திகள் வருகின்றன. சபாநாயகர் தீர்ப்பு வழங்கியதற்கும் பிறகும் இதையே விவாதப் பொருளாக ஆக்கிக் கொண்டு பேசுவது சரியா, வரப்பு முறை களுக்கு உட்பட்டதா என்று தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தீர்ப்புச் சொல்லுகின்ற பொழுது, குழுவுக்கு விடுவதற்குத் தீர்மானம் கொண்டுவர வழி வகை இல்லையென்று சொன்னேன் மேலும், ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது என்று சொன்னபொழுதே, 'பட்ஜெட்டில் இருப்பவையெல்லாம் இரகசியம் அல்ல. பன்னெடுங் காலமாக மேடைகளில் சொல்லப்பட்டவை கூட இருக்கலாம். 15,000 என்கிற எண் தான் இரகசியம். 15,000 என்கிற எண் இரகசியம் வெளியிடப்படவில்லை' என்று மிகத் தெளிவாகத் தீர்ப்புக் கூறியிருக்கிறேன். பிறகும், மாண்புமிகு உறுப்பினர் இரகசியம் வெளிப்பட்டது என்ற முறையில் பேசக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் பேரவையில் முன்பு முதலமைச்சராகயிருந்த பக்தவத்சலம் அவர்கள் பத்திரிகைச் செய்தி ஒன்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பேசக் கூடாது என்று எவ்வளவோ முறை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்வர்கள் திரும்பத் திரும்ப தம்முடைய கருத்தைப் பேசி முடிக்கவேண்டுமென்று பேசுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலும் ஒன்று. தாமஸ் கேஸ் நடந்தபொழுது நான் அந்த நாட்டில் இருந்தேன் தாமஸ் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு அவர் பட்ஜெட் இரக சியத்தை வெளியிட்டு, அதிலே தனிப்பட பணம் சம்பாதித்தார் என்பதாகும். ஆனால் இங்கு அப்படியில்லை. பட்ஜெட் இரகசிய மான எண் 15,000 ரூபாய் என்பதை மாண்புமிகு அமைச்சர் எங்கேயாவது சொல்லியிருந்தால் அப்போதுதான் இரகசியம் வெளிப்பட்டதாக ஆகும். ஆனால், வெளியிடப்படவில்லை. எனவே இனி இரகசியத்தை வெளிட்டதாகப் பேச அனுமதியில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, கனம் அமைச்சரவர்கள் பேசும்பொழுது திரு. பக்தவத்சலத்தைப் பாராட்டியமைக்காக மகிழ்ச்சியோடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் இரகசியம் லீக்கேஜ் ஆனது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதுபற்றி சபாநாயகரின் தீர்ப்புக்கு கட்டுப்படுகிறேன். ஆனாலும் நான் சொன்னதெல்லாம்



பார்லிமெண்டரி மரபுகள் காக்கப்பட வேண்டுமென்பதுதான். இது பற்றி நான் போனமுறையே சட்டசபையிலே குறிப்பிட்டேன். கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் ஒழுக்கங்கள் எல்லாம் உண்டு. சில நியதிகள் உண்டு. உதாரணமாக, சபாநாயகர் அந்த ஆசனத்தில் அமர வேண்டும். ஆளும் கட்சியினர் அமைச்சர் கள் வலது பக்கத்தில் அவருக்கு முன்னாலே அமர வேண்டும். எதிர்க்கட்சியினர் இடது பக்கத்தில் அமர வேண்டும். சபா நாயகர் வரும்பொழுது எழுந்து மரியாதை செலுத்த வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், சட்டசபையிலே பேசும்படியான ஒரு அங்கத்தினருக்கும் சபாநாயகருக்கும் இடையே இடைமறித்துப் போகக் கூடாது என்ற மரபுகளெல்லாம் இருக்கின்றன. இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், கனம் முதலமைச்சர் அவர் கள் முன்பு ஒரு சமயம் பேசும்போது, "கன்வென்ஷன் என்றால் கன்வீனியன்ஸ், ஆகவே, கன்வென்ஷன் என்னும்போது சௌகரியம் போல் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னதைத்தான் நான் சொல்லுகிறேன். "கன்வென்ஷன் என்றால் கன்வீனியன்ஸ்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'கன்வென்ஷன்' என்பது வேறு. 'கன்வீனியன்ஸ்' என்பது வேறு வேறு.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்",

என்று வள்ளுவர் வகுத்துக் கூறியிருக்கிறார். ஆகவே, இந்த மன்றத்திலே இருக்கக்கூடியவர்கள் பொது மக்களுடைய வாக்கு களைப் பெற்றவர்கள். அப்படி மக்களுடைய வாக்குகளைப் பெற்று இந்த மன்றத்திற்கு வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களில் ஒருவர் தான் இந்த மன்றத்திலே நிதி அமைச்சராக இருக்க வேண்டும் என்பது ஒரு 'கன்வென்ஷன்'. இதுவரைக்கும், இந்த மன்றத்தில் மட்டுமல்ல; அகில இந்தியாவில் மட்டுமல்ல ஜனநாயகத்தைப் பின்பற்றக் கூடிய எல்லாத் தேசங்களிலும், மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டு வரும் ஒரு உறுப்பினர்தான் நிதி அமைச்சராக இருந்து, நிதிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற நிலை இருக் கிறது. ஆகவே குறிப்பாக இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் தான் நிதி அமைச்சராக இருந்து, நிதிப் பொறுப்பை வகிக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்ன சமயத்தில், லார்டு கர்ஸனைக் குறிப்பிட்டார்கள்; லார்டு ஹோமைக் குறிப்பிட்டார்கள். லார்டு ஹோம் அமைச்சராக இல்லையா என்று குறிப்பிட்டார்கள். முதலமைச்சராக இருப் பதைப்பற்றி நான் கூறவில்லை. முதலமைச்சராக இருப்பதற்கு வேண்டிய தகுதியும், திறமையும், அறிவும், ஆற்றலும் அவருக்கு உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். இந்த நாட்டிலுள்ள மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாரத தேசமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சராக இருக்கக் கூடாது என்பதல்ல. ஆனால், நிதி அமைச்சராக இருக்கக்கூடிய ஒரு கன்வென்ஷன், ஒரு மரபு உண்டா? அல்லது, அவர்கள் பதில்

சொல்லும்படியான சமயத்திலே, நமது இந்தியா தேசத்திலே மட்டு
மல்ல, வேறு எந்த ஒரு ஜனநாயக நாட்டிலாவது இப்படி மேல்
சபையிலே இருக்கக்கூடிய ஒருவர் நிதி இலாக்காப் பொறுப்பையும்
வகிக்கிறார் என்று அவர்கள் காட்டுவார்களானால், அதைக் குறிப்
பிடுவார்களானால், நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்
கிறேன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே,
அந்த நிலையிலே முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச்சராக
இருக்க வேண்டுமென்றால், இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்
பட்டு வந்திருக்கும் ஒரு அங்கத்தினராக இருக்க வேண்டும்.
அத்தகைய நிலை இன்று இல்லை. ஆதலால், இந்த மன்றத்திற்கு
உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கும் மக்களுடைய எண்ணங்
களையும், அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்
களுடைய உரிமையையும் இது பாதிக்கிறது என்பதை நான்
மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
ஆகவே, அவர்கள் ஏற்கனவே சொன்ன பதிலில், இந்த மன்றத்தின்
உரிமையில் குறுக்கிடவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
ஆகவே தயவு செய்து அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.
கன்வென்ஷன் என்பது கன்வீனியன்ஸ் அல்ல, மரபு, ஒழுக்கம்
காக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்
ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவையில் ஒரு முறை
பேசி முடிந்த ஒரு காரியத்தை மீண்டும் எடுத்துப் பேசுவ
தென்றால், மிகச் சுருக்கமாகப் பேசினால்தான் கேட்டுக் கொண்
டிருக்க முடியும். A debate shall not revive discussion of a
matter which has been discussed in the same session ஏற்கனவே
ஒரு முறை விவாதம் செய்யப்பட்டது என்ற காரணத்தால் மாண்பு
மிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன கருத்தை அத்துடன்
விட்டு விட்டு அடுத்த கருத்துக்குப் போகும்படியாக நான் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே,
நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், சென்ற தடவை
முதலமைச்சர் அவர்கள்தான் விவாதத்தின் இறுதியில் பதிலளித்
தார்கள். அதற்குப் பின்னால் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்
காததனால்தான் இப்பொழுது குறிப்பிடுகிறேனே தவிர, வேறு
ஒன்றுமே கிடையாது. ஏற்கனவே பேசி விடப்பட்ட விஷயம்
அல்ல இது. முதலமைச்சர் அவர்கள் இறுதியாகப் பேசினதற்குப்
பிறகு சபை ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பின்
இப்பொழுதுதான் கூடியிருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும்
எனக்கும் எந்த விதமான நட்போ உறவோ இருந்தாலும்கூட,
முதலமைச்சர் அவர்கள் கன்வென்ஷன் என்று சொன்னதை நான்
ஏற்றுக்கொண்டுவிட்டேன் என்ற பாவம், பழி, குற்றம் என்மேல்
இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதை இப்பொழுது நான்
சொல்ல ஆசைப்படுகிறேன். அது இருக்கட்டும்.





இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் பழைய பாணியிலேயே இருக்கக் கூடாது என்று மிக மிகப் பணிவுடன் நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், அவர்கள் வெளியிலே கொடுக்கும்படியான பிரசாரங்களெல்லாம் எத்தகைய முறையில் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாமன்றத்தில், அவர்கள் எப்படிப்பட்ட படத்தைப் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இதுவரையிலும் நடந்த காங்கிரஸ் ஆட்சியிலே, அவர்கள் கடனைச் சுமத்திவிட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். என்ற சர்க்கார் கொறடா கூடப் பேசினார்கள். தயவு செய்து அவர்களுக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். உண்மைக்கு மாறான ஒன்றைச் சொல்லுவது; அதையே திருப்பிச் சொல்லுவது; அதையே அடித்துச் சொல்லுவது; அதையே வேகமாகச் சொல்லுவது; அதையே அழகான தமிழில் சொல்லுவது, இப்படி மக்களுடைய மனத்தை திசை மாற்றுகிற செயலில் தயவு செய்து ஈடுபட வேண்டாம் என்று இந்த மாமன்றத்தில் அவர்களுக்குச் சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அந்தக் காலத்தில் டாக்டர் கோயபல்ஸ் செய்த பிரசாரத்திற்கும் இப்பொழுது இவர்கள் செய்து கொண்டிருக்கும் பிரசாரத்திற்கும் எந்த விதமான வேற்றுமையும் இல்லை என்று நான் மிகமிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் உணவு அமைச்சரவர்கள் பேசும்போது, "500 டன் அரிசிதான் இந்த நாட்டில் இருந்தது, கையிருப்பில் ஒன்றும் இல்லை" என்றெல்லாம் சொன்னார்கள். அது மட்டுமல்ல . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** On a point of order Sir, Repeatedly the hon. Leader of Opposition is making an incorrect statement.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** It is not an incorrect statement அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் வெளியிலே சொன்னதைக் கூட நான் இங்கே சொல்ல எனக்கு உரிமை இல்லையென்றால், வேறு எங்கே போய்ச் சொல்லுவது? வெளியிலே போகச் சொன்னாலும் நான் போகத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் எங்கே அவ்வாறு சொன்னேன் என்பதை கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நிரூபிக்க வேண்டும். "இந்த நாட்டிலே 500 டன் அரிசிதான் இருந்தது" என்று நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை. அப்படியிருக்க கனம் எதிர்க்கட்சித் தலைவர், திரும்பத் திரும்ப அப்படியே சொல்லிக் கொண்டிருப்பாரானால், அது எப்படிச் சரியானதாக இருக்க முடியும் என்பதைக் குறித்து, கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள்தான் தீர்ப்பு வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப்பற்றி ஏற்கனவே, தீர்ப்பு இருக்கிறது. பேரவைக்கு வெளியிலே ஒரு அமைச்சர் ஏதாவது ஒரு அறிக்கை வெளியிட்டார் அல்லது ஏதாவது

சர்க்கார் கட்சிக் கொறடா அவர்வகள் பேசுகிறபோது, திரு. பூவராகன் பேசியதைக் குறிப்பிட்டு, 'அவர் அப்படிப் பேசியது தவறு தவறு' என்று சொன்னார்கள். கனம் பூவராகன் அவர்கள் கூறிய அபிவிருத்தித் திட்டங்கள், எவ்வளவு தூரம் தமிழகம் முன்னேறி இருக்கிறது என்பதைச் சொன்னால் அது தவறாகாது. மத்திய சர்க்கார் உண்மையிலே நமக்கு ஒன்றுமே உதவி செய்ய வில்லையா என்று பார்க்க வேண்டும். இப்படிப் பேசிவருவது, மத்திய சர்க்கார் ஏதோ வரிகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு போவதுபோல் தவறான போக்காகவே மக்களுக்குத் தெரியவரும் இங்கே வருமான வரி வசூலிக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் வரியிலிருந்து எவ்வளவு நாம் திரும்பப் பெற்றிருக்கிறோம் என்பதை பட்ஜெட்டை சமர்ப்பித்த மொரார்ஜீ தேசாய் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 500 கோடி ரூபாயில் நான்கில் மூன்று பங்கு எல்லா மாநில சர்க்கார்களுக்கும் பிரித்துக் கொடுக்கப் படுகிறது. மத்திய சர்க்காரே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஜனத்தொகை விகிதாசாரப்படி கொடுத்து வருகிறார்கள்.

தவிர, மத்திய சர்க்காரிலிருந்து இன்கம்-டாக்ஸ், எக்சைஸ் டீட்டி முதலிய இனங்களின் மூலமாக நமக்குக் கிடைப்பது கணிசமான அளவில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ரூ. 31 கோடியே 71 லட்சம் மத்திய சர்க்காருடைய வரி யிலிருந்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரிலிருந்து ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்கள் ஒன்றும் கொடுக்கவில்லை என்று கூறுவது பொருத்தமான வாதம் அல்ல. 31 கோடியே 71 லட்சம் நமக்குக் கொடுக்கப்பட்ட வரி எதற்காக என்றால், அந்த வரிகளைப்பற்றியும், வரி விகிதங்களைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் விரிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். 14 கோடி ரூபாய் எதற்காக வட்டியாகக் கொடுக்கிறோம் என்றால் நாம் எடுத்துக் கொண்ட திட்டங்கள், நம்மிடத்திலே தமிழகத் திலே நிறைவேற வேண்டும் என்பதற்காகவே கொடுக்கப்பட்ட வட்டியிலே நமக்கு வரக்கூடியது 19 கோடியே 87 லட்சம் ரூபாய், நாம் வட்டியாக வசூல் செய்து கொள்கிறோம். நாம் அவர்களுக்கு 14 கோடி ரூபாய் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், அது சரியா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : தலைவர் அவர்களே, வெளிநாடு களிலிருந்து வட்டியில்லாக் கடனாக மத்திய சர்க்கார் வாங்குகிற பணத்தை மாநில சர்க்கார் திட்டங்களுக்குக் கருகிறபோது கடனாகத் தந்து, தமிழக சர்க்காரிடமிருந்து வட்டி வசூலிப்பது நியாயமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல வென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒட்காரவில்லையென்றால் அவருக்கு இடைமறித்துப் பேச அனுமதியே கிடைத்திருக்காது. நீங்கள் இடம் கொடுத்ததால் அவர் பேசினார்.



திரு. பி. ஜி. கருத்திருமன் : இதுவும் உணவு அமைச்சர் அவர் களின் தந்திரம்போல் தெரிகிறது. அவர்தான் அவர் எழுப்பினது 'ஏ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று என்னிடம் கூறினார். (சிரிப்பு).

ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களின்மீது குறை சொல்லக் கூடிய அளவிலேயே இருக்குமானால் பலன் ஒன்றும் இருக்காது நாம் மத்திய சர்க்காருடன் நல்ல முறையில் அணுகி, தொடர்பு வைத்துக்கொள்வோமானால் நிச்சயமாக எல்லாக் காரியங்களி லேயும் எங்களுடைய பூரண ஒத்துழைப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்காரிடத்திலே உள்ள ஒரு கசப்பான போக்கை, இடரான போக்கைக் கைவிட வேண்டும். முதலமைச்சர் அவர்கள் நிதானத்திலே மிகவும் சிறந்தவர்கள். பேசுவதிலே ஒரு நிதானப் போக்கைக் கடைப்பிடிப்பவர். போன தடவை முதலமைச்சர் அவர்கள் கவர்னர் அவர்கள் உரைமீது நடந்த விவாதத்தில் பேசும்போது, "மத்திய சர்க்கார் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை. நம்முடைய திட்டங்களுக்கு எல்லாம் வழி செய்ய இடம் தாவில்லையானால் அவர்களை முச்சந் திக்குக் கொண்டுவந்து நிறுத்துவேன்" என்று பேசினார். 'நான் முச்சந்திக்குக் கொண்டுவந்து நிறுத்துவேன்' என்று சொல்வது, நல்ல தமிழனுடைய, தமிழருடைய பண்பாட்டுக்கு—தமிழருடைய நாகரிகத்திற்கு ஏற்றதல்ல. இந்தமாதிரியான வார்த்தைகளை நாம் பேசாமல் இருக்கும்படியான நிலைமை இருந்தால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆளும் கட்சி அங்கத்தினர்கள், "காங்கிரஸ்காரர்கள் தரக் குறை வாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் காங்கிரஸ்காரர் களுக்கு இந்த கதி ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். எங்கள் கதியை நாங்களே பார்த்துக்கொள் கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் நேற்று பேசும்போது எதிர்க் கட்சிக்காரர்கள்தான் மக்களுக்கு நன்மை செய்கிறார்கள் என்கிற பிரமை நீங்கி ஆளும் கட்சிக்காரர்களும் மக்களுக்கு ஆகாதவர்கள் என்ற பிரமை ஒழியவேண்டுமென்று கூறினார்கள். நாங்கள் ஆளும் கட்சியாக இருந்த சமயத்தில் இதையே அவர்கள் குறிப்பிட்டிருந் தால் நான் அதை மிகவும் வரவேற்று இருப்பேன்.

ஆகவே, அவர்கள் கொண்டிருக்கும் பிரமை ஒழிய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தரக்குறைவான பேச்சாக இருப்பது எந்தக் கட்சிக்கும் சரியல்ல. தரக்குறைவு காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தாலும் சரி அது அகற்றப்படவேண்டும். தேர்தல் முடிந்த பிறகு என் தொகுதியிலே போய் ஒருவர் பேசியிருக்கிறார். அவர் ஆராய்ச்சி நிபுணர் என்று நினைக்கிறார். "நாங்கள் எல்லாம் வெற்றி பெற்று வந்திருப்பதைப் பார்த்தீர்களா? இருபதாயிரத் திலே வெற்றி பெற்றோம்" என்று பேசியிருக்கிறார். நாங்கள் சட்ட மன்றத்தில் நுழைந்து, இருபதாயிரம் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவருக்குத் தனி சீட்டு, 100, 200 ஓட்டு வித்தியாசத்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூன் 27

திலே வெற்றி பெற்றவர்களுக்குத் தனி சீட்டு போட்டிருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன். உடனே சபாநாயகருக்கும் எழுதிக் கேட்கலாமா என்று நினைத்தேன். இந்த மாதிரியான போட்டிப் பிரசாரம் சிறந்ததா என்பதை யோசிக்க வேண்டும். இம்மாதிரியான வகைகளில் சென்று தான் காலத்தை தயாராக இல்லை. நாம் உயர்ந்தவர்களாக, சிறந்தவர்களாக இருக்கவேண்டுமானால் நம்முடைய பேச்சுக்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்களுடைய பேச்சுக்களைப் பார்த்தால் ஒன்றும் சொல்ல முடியாது. "அமைச்சர் அவர்கள் வந்திருக்கும்போது இந்தக் கலெக்டர் எப்படி லீவ் போட்டு விட்டுப் போவது?" என்று ஒருவர் பேசுகிறார். இப்படி ஒரு கலெக்டரைப் பற்றி சொல்வது சரியா? நம்மிடத்தில் பணி புரியவர்கள் இம்மாதிரி என்ன நினைப்பார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த நிலைமைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் கண்காணித்து அங்கத்தினர்களோடு மட்டுமல்ல, மற்ற தோழர் களுடனும் உறவு கொண்டு அவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்கு வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, "நாங்கள் வந்தோம். புதுமையும் புரட்சியும் இல்லையென்கிறார்களே? ரூபாய்க்கு படி அரிசி போடவில்லையா?" என்று கூறுகிறார்கள். படி அரிசித் திட்டத்தை என்னுடைய காங்கிரஸ் கட்சி சார்பாக மட்டுமல்ல. நானும் வரவேற்கிறேன். இதில் குறை சொல்வது என்னவென்றால், இந்தத் திட்டத்தை ஒரு நாளைக்குப் போட்டுவிட்டு பின் கைவிட்டால் என்ன செய்வது என்பதுதான். எங்கள் ஊரில் திருவிழா நடக்கும். திருவிழாவுக்கு வந்தால் அந்த நாளன்று மூட்டை மூட்டையாக அரிசி சமைத்து சோறு போடுகிறார்கள். திருவிழா ஒரு நாளைக்குத்தான் கொண் டாடுகிறார்களே தவிர எல்லா நாட்களும் அல்ல. அதுபோல் ஒரு படி அரிசித் திட்டம் இருக்கக்கூடாது என்றுதான் நினைக்கிறேன். எப்படித் திருவிழாவில் எல்லோருக்கும் போடுகிறார்களோ அப்படி பட்டணத்திலும், கோயம்புத்தூரிலும் உள்ளவர்களுக்குத்தான் போடுகிறார்கள். சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தான் கட்டாய ரேஷன் இருந்தது என்று காங்கிரஸ்காரர்கள் மீது பழியைப் போட்டுவிடலாம். ஆனால் இவர்கள் [illegible] கட்டாய ரேஷனை எடுத்திருக்கலாமே? இதில் [illegible] அரசியல் [illegible] என்று சொல்ல முடியாது. சென்னையில் 12 சீட்டுகளில் சில [illegible] கிரஸ் சீட்டு வந்திருந்தால் கட்டாய ரேஷனை [illegible] கோயம்புத்தூரிலும் சில சீட்டுகள் இவர்களுக்கு [illegible] எடுத்திருப்பார்கள். ஆகவே தான் இவர்கள் இங்கே படி அரிசி போடுகிறார்கள் [illegible] குற்றச்சாட்டைச் சுமத்த எனக்கு உரிமை உண்டு என்று [illegible] துக்கொள்கிறேன். பட்டினத்தில் இருப்பவர்களுக்கு [illegible] பட்ஜெட்டில் பல்லி தம்பின சாகசங்கள் [illegible] "பட்டினத்தில் பூதம்" என்று [illegible] தான் இந்த நிதியில் அரிசியை [illegible]



1967 ஜூன் 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

இருப்பவர்கள் எப்படிப் போனால் என்ன? பட்டிணத்தில் உள்ளவர்களுக்கு படி அரிசித் திட்டம். பட்டிணத்தில் உள்ளவர்களுக்கு வீராணம் ஏரியில் இருந்து குடிதண்ணீர் திட்டம் (திரு. எஸ். முருகையன் குறுக்கீடு) உங்களுக்குச் செய்வதைப்பற்றிக் கவலை யில்லை. எங்களுக்கும் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொல் கிறேன். இன்றைக்கு விவசாயிகளுடைய நிலைமை என்ன? பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி பட்டிணத்தில் போடுகிறோம் என்று சொல்வதில் பயனில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே விவசாயிகள் இருப்பார்கள். ஒரு படி அரிசியை 1 ரூபாயில் உற்பத்தி செய்ய முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். நான் எந்த எந்த இடங்களில் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் பார்த்து அந்த ரக நெல்லையும் கொண்டு வந்து ஒரு ஏக்கருக்கு 4 டன் அதிக அளவு உற்பத்தி செய்தும் பெருமை அடைந்திருக்கிறேன். ஆனால் உற்பத் திச் செலவு எவ்வளவு ஆகிறது என்பதைச் சிந்தித்தாக வேண்டும்.

இந்த ஒருபடி அரிசித் திட்டம் என்பது தேர்தல் கால வாக்குறு தியைவிட ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்சினை. அதற்கு ஒரு சாதாரண உதாரணத்தைச் சொல்கிறேன். ஒரு மின்சார டிரான்ஸ்பார்மர் இருக்கிறது. அதன்மூலம் 10 கிணறுகளுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. அங்குள்ள விவசாயிகள் மேலும் பல கிணறுகளுக்கு விஸ்தரிப்பு வேண்டுமென்று கோரு கிறார்கள். மின்சார இலாகா அமைச்சர் அங்கு போய் மின்சார இன்ஜினியரை ஆலோசனை கேட்கிறார். மின்சார இன்ஜினியர் இரண்டு கிணறுகளுக்குத்தான் கொடுக்க முடியும் என்று ஆலோசனை கூறுகிறார். ஆனால் அமைச்சரோ மேலும் பத்துக் கிணறுகளுக்கு கொடுக்கவேண்டுமென்று உத்தரவுபோடுகிறார். பின்பு மக்களிடம் "பாத்தாயா! காங்கிரஸ் ஆட்சியில் பத்துக் கிணறுகளுக்குத்தான் மின்சார கனெக்ஷன் கொடுக்கப்பட்டது. நாங்கள் இருபது கிணறுகளுக்கு விஸ்தரிப்புக் கொடுத்தோம்" என்று பெருமைப்படலாம். ஆனால் எல்லாக் கிணறுகளும் உள்ள மோட்டார்கள் ஓடினால் என்ன ஆகும்? டிரான்ஸ்பார்மர் வெடித்து விடும். ஆகவே மின்சார உற்பத்தி செய்யும்படியான இடத்தில் ஜெனரேடிங் கெப்பாசிடி அதிகப்படியாக உற்பத்தியாகச் செய்தால் கொடுக்கும்படியான விஸ்தரிப்புப் பயன் உடையதாக பலன் உடையதாக இருக்கும். அதேபோலத்தான் ஒருபடி அரிசித் திட்டமும். உற்பத்தி செய்யும்படியான விவசாயிகளுடைய உற் சாகத்தையும், உற்பத்தி செய்யும் சக்தியையும் அதிகப்படுத்துவதன் அவசியத்தை உணர வேண்டும். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசியை அவனால் உற்பத்தி செய்ய முடியாதிருக்கிறபோது, ஒரு படி அரிசி கொடுங்கள் என்றால் எப்படி முடியுமா? பர்மாவில் இருந்து அரிசி கொண்டு வந்து கொடுப்போம் என்றால் அந்த பர்மாவிலே இன்றை க்கு ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் முப்பது காசு. உலகத்தில் எந்த நாட்டிலும் இன்றைக்கு ஒரு கிலோ 1¼ ரூபாய்க்கு குறை வாக அரிசி உற்பத்தி செய்ய முடிகிறது இல்லை.) இன்றைக்கு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூன் 27

சென்னை, கோவையில் உள்ளவர்களுக்கு ரூ. 1·06 காசுக்கு அடங்குகிற அரிசியை படி 1 ரூபாய் என்று கொடுத்து அதனால் 5 கோடி நஷ்டத்தை ஏற்கிறோம்.

ஆனால், இந்த மானியம் யாருக்குக் கொடுக்கப்படவேண்டும்? எந்த இடத்தில் கொடுக்கப்படவேண்டும்? அமெரிக்காவில் ஒரு தம்பதிகள் ஒரு காரில் சென்று கொண்டிருந்தார்களாம். கார் மக்கர் செய்துவிட்டது. ஒரு மெக்கானிக்கை அழைத்துக் காட்டினார்கள். அவன் இரண்டு தட்டுத் தட்டிவிட்டு, காரை ஓடச் செய்துவிட்டான். அதற்கு கூலியாக ஐந்து டாலர் கேட்டானும். ஒரு டாலர் என்பது 7½ ரூபாய். அந்தக் காரில் வந்தவருடைய சம்சாரம் அவனைப் பார்த்து இரண்டு தட்டுத் தட்டியதற்கா 5 டாலர் என்று கேட்டார்களாம். "ஆமாம் அம்மணி, இரண்டு தட்டுத் தட்டியதற்கு ¼ டாலர் தான். ஆனால் எந்த இடத்தில் தட்ட வேண்டும், எப்படித் தட்ட வேண்டும் என்பதைப் பார்த்துத் தட்டினேன்னே, அதற்காக நாலேமுக்கால் டாலர்" என்றானும் அவன்.

அதுபோல, இன்றைக்கு உணவுக்காக மானியம் ஏற்கிறது சர்க்கார் என்றால் இந்த மானியம் எந்த இடத்தில் வழங்கப்பட வேண்டும், யாருக்கு வழங்கப்படவேண்டும் என்பதைப் பார்த்து வழங்கியிருந்தால் தமிழகத்தில் இருக்கும்படியான விவசாயிகள் தமிழகத்தின் தேவைக்கு மட்டுமல்ல, வெளியில் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் உற்பத்தி செய்து தருவார்கள். இன்றைக்கு உணவு சப்ஸிடியில் 5 கோடி ஆகிறது என்றால் அந்தப் பணத்தை விவசாயிகள் பயன் அடைய வகை செய்திருக்கலாம். இந்த மானியத்தை நகரப்பகுதியில் அதிக வருமானம் பெறக்கூடியவர்களுக்கு, விவசாயம் சம்பந்தப்பட்டவரை சும்மா இருப்பவர்களுக்கு, உற்பத்தியை உண்டு களிப்பவர்களுக்கு இந்தச் சர்க்கார் வழங்கியிருக்கிறது. ஏழைகளின் முகத்தைப் பார்த்தேன், கொடுத்தேன் என்கிறீர்களே, விவசாயிகளின் வயிற்றையும், கையையும் பாருங்கள் என்பது என் வேண்டுகோள். மேற்கு வங்கத்தில் மூட்டைக்கு குவின்டால் 52 ரூபாய் சர்க்கார் கொடுப்பது. 62 ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது. ஆனால் அங்கெல்லாம் போலீஸ்காரர்களை வைத்துக் கொண்டு ப்ரொக்யூர்மெண்டு நடைபெறுகிறது என்றார்கள். இங்கே இருந்த நிலைமை என்ன? திறமையாக, நேர்மையாக நீங்கள் கொள்முதல் செய்வதாக சொல்லிக் கொள்ளலாம். ஆனால் எத்தனை வீடுகளில் போலீஸ்காரர்கள் நுழைந்தார்கள், என்ன வகையில் கொள்முதல் செய்யப்பட்டது என்பதுபற்றி இங்கேயே சொல்லப்படுகிறது.

ஆகவே, Procurement வேண்டாமென்று நான் சொல்லவில்லை. புரக்யூர்மெண்ட் என்றால் இப்படிக் கொள்முதல் செய்வது சரியல்ல, காங்கிரஸ் சர்க்கார் காலத்திலே செய்தால்கூட அது தவறுதான் என்பது என்னுடைய கருத்தாகும். விவசாயிகள் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு [illegible] [illegible] [illegible] ளோர். எவ்வளவு அவர்களைத் [illegible]



1967 ஜூன் 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அளவுக்கு, ஏழை அழுத கண்ணீர் கூரியவாளையொக்கும் என்ப
தைப் பொதுத் தேர்தல் காட்டிய உண்மையாக எடுத்துக்கொண்டு
விவசாய மக்களை வாழவைக்க வேண்டுமே ஒழிய அவர்களைத் துன்
புறுத்தக் கூடாது. வாழவைக்க உங்களால் முடியாது என்பதைச்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயி என்றால் யார் என்பதைப்பற்றி ஒரு அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள், யார் வயலிலே இறங்கி நாற்று நட்டு,
களையெடுத்து, மற்ற வேலைகளையெல்லாம் செய்கிறார்களோ அவர்
கள்தான் விவசாயிகள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்
லும்படி பார்த்தால், இந்த செகரடேரியட்டில் யார் உண்மையாக
வேலை செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் சலுகைகள் என்று
சொன்னால் இங்கே வேலைபார்க்கின்ற எல்.டி.சி.களுக்கும்
யூ.டி.சி. களுக்கும்தான் சலுகைகள் கிடைக்குமே தவிர, மற்றவர்
களுக்கு டெபுடி செகரட்டரி, செகரட்டரி போன்ற அதிகாரிகளுக்கு
ஒன்றுமே கிடைக்காது. ஏனென்றால் காலையிலே வந்து மாலை 5 மணி
வரை எழுதிக்கொண்டே, உண்மையாக எழுதிக்கொண்டே இருப்ப
வர்கள் அவர்கள்தான். ஆகவே அவர்கள்தான் அந்தச் சலுகை
களைப் பெறவேண்டும் என்று சொல்வது போல்தான் இருக்கிறது,
உண்மையிலேயே பூமியில் இறங்கி அங்கே நாற்று நட்டு, களை
யெடுத்து வேலைகளைச் செய்கிறவர்களுக்குத்தான் விவசாயிகள்
என்று பெயர் உண்டு என்பது. உதாரணத்திற்கு ஒரு கதை
சொல்லுகிறேன். தஞ்சாவூரிலே ஏதோ ஒரு நிகழ்ச்சியிலே நாதஸ்
வரத்தை ஓரேயடியாக ஊதிக்கொண்டேயிராமல் வாயில் வைத்து
எடுத்து எடுத்துத்தானே இவர் வாசித்தார். இவருக்கு ஒன்று
மில்லை, ஆனால் வாயைவிட்டு எடுக்காமல் எப்பொழுதும் வாயிலேயே
வைத்து ஊதிக்கொண்டிருந்த ஒத்து ஊதுகின்றவருக்குத்தான்
இரண்டு மடங்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்களாம்.
ஆகவே, இப்படியெல்லாம் விவசாயிகளைப்பற்றிச் சொல்லி
மலிவான விளம்பரத்திற்காக இதையெல்லாம் சொல்லவேண்டா
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதல் வேண்டியதுதான். அதே நேரத்தில் விவசாயி
உற்பத்தி செய்வதற்குத் தகுந்த முறையிலே விலையை யாரும்
சரியாகக் கொடுப்பதில்லை, நியாயமாகக் கொடுப்பதில்லை.
விலையைப்பற்றிச் சொல்லும்பொழுது மூன்றுவிதமான விலைகள்
இருக்கின்றன. ஒன்று மத்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்படுகின்ற
விலை, பேஸிக் பிரைஸ், அடிப்படை விலை, உற்பத்தி செய்கின்ற
விலையைக் கணக்கிட்டு அதைவைத்து ஒரு விலையை நிர்ணயித்து
இதுதான் நியாயமான விலை என்று சொல்கிறார்கள். அடுத்ததாக
வெளி மார்க்கெட்டில் கிடைக்கின்ற விலை, உற்பத்தி செய்கின்ற
வனும், வாங்குகின்றவனும் நிர்ணயித்துக்கொள்கின்ற விலை.
[illegible] பிராஃபிட்டபிள் பிரைஸ், அதாவது உற்சாகத்தை
[illegible] விலை, நம்முடைய நாட்டில் இந்த விலை வரும்
[illegible], ஏனென்றால், விவசாயிகள் ஒட்டப்பட்டு
[illegible]

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூன் 27

கொண்டுதான் இருக்கவேண்டும். நான் சொல்வது என்னவென்றால் ஓரளவுக்கு கொள்முதல் செய்யுங்கள், பாக்கியிருப்பதைச் சுதந்திரமாக மார்க்கட்டிலே விட்டுவிடுங்கள். அப்படிச் செய்தால்தான் இந்தக் கஷ்டத்தைப் போக்கக்கூடிய நிலைமை ஏற்படும். 'லெவி சிஸ்டம் ஆப் புரக்யூர்மெண்ட்', அதாவது குத்து மதிப்பு [illegible] என்று வைத்துவிடலாம். ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று வைத்துவிட்டு பாக்கியுள்ளதை மார்க்கட்டில் விற்க விட்டுவிடலாம். லெவி சிஸ்டத்தைக் கொண்டுவந்தால் 20 ஏக்கர், 30 ஏக்கர் வைத்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இத்தனை மூட்டைகள் கொடுத்துவிடவேண்டுமென்று [illegible] சொல்லிவிட்டு, அவர்கள் மீதியிருப்பதை வெளியிலே விற்பதற்கு அனுமதிக்கலாம். குத்துமதிப்பாக அவர்கள் ¼ பங்கு கொடுத்துவிட்டு மற்றவற்றை வெளி மார்க்கட்டிலே கொண்டு செல்வதற்கு வழி செய்யுங்கள். ஏழை விவசாய மக்கள் நன்றாக வாழவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அப்படிச் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கொடுப்பதற்கு ஏற்ற முறையில் பகிரங்கமாக மார்க்கட் இருப்பதற்கு அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உத்திரவுகள்-மிக அற்புதமான உத்திரவுகள்-வரும், அதாவது தடை நீக்கப்பட்டது என்று ஒரு நாள் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், பிறகு இல்லை இல்லை என்று மறுபடியும் சொல்வார்கள். இப்படி இரண்டுங்கெட்டான் நிலைமைதான் இருந்துவருகிறது. ஒரு சிலருக்குச் சலுகையும் கொடுத்து சிலர் தப்பித்துக் கொள்ளவும் வகை செய்யக்கூடிய நிலை இருக்க கூடாது. அந்தச் சலுகையை எல்லோருக்கும் கொடுத்தால் என்ன என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

விலையை நிர்ணயிக்கும்பொழுது, தொழிலை எடுத்துக்கொண்டால் ஒரு தொழிலுக்கு ஆகின்ற உற்பத்திச் செலவையும், முதலீட்டையும் வைத்துத்தான் நிர்ணயிக்கப்பட்ட விலை கணக்கிடப்படும். ஆனால், விவசாயிகளுக்கு அந்தச் சலுகை கிடையாது. யாரோ எங்கோ உற்பத்தி செய்கிறான், நமக்கென்ன என்றுதான் இருப்பார்கள் "ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்காய், காசுக்கு நாலு விற்கச் சொல்லி காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரர்" என்று முன்பெல்லாம் வேடிக்கையாகச் சொல்வார்கள். இப்பொழுது அதுமாதிரி நிலை ஏற்படக் கூடாது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி நான் [illegible] சாட்டுவது என்னவென்றால் பட்டணத்திற்கு அதிகமாக சாதகங்களும், கிராமங்களுக்குப் பாதகங்களும் செய்யக்கூடியதாக இருக்கும் என்பதுதான்.

விவசாய வருமான வரியைப் புகுத்தியிருக்கிறார்களே அதனால் [illegible] பாதகம் விளைவிக்கக்கூடிய இடம் [illegible] இல்லை என்பதைத் தெரிவித்துக் [illegible] இருந்த [illegible]



1967 ஜூன் 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வருமான வரியைப்பற்றி என்ன என்ன சொன்னார்கள் என்பதை பட்ஜெட் புரொசீடிங்ஸை படித்துப்பார்த்துக்கொண்டால் தெரிந்து கொள்ளலாம். இது கூடாது, வசூல் செய்வதற்கான செலவு, வருகின்ற வருமானத்தைக் காட்டிலும் அதிகமாகும். ஆகவே இது வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

புஞ்சை நிலத்திற்கு வரியை எடுத்துவிட்டார்கள். நஞ்சை நிலத்திற்கும் வேண்டாம் என்பதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விற்பனை வரியைப் போடும்பொழுது குத்து மதிப்பு என்று அவர்களுக்குக் கொடுத்து 50,000 அல்லது 70,000 என்ற அளவில் கம்பவுண்ட் பண்ணிக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் இதிலே அப்படி இல்லை, 5 ஏக்கர், 7 ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகள் எல்லாம் கணக்கு வைக்க வேண்டுமென்று சொன்னால் அது முடியக்கூடிய காரியமா என்று யோசிக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால்-நான் நினைக்கிறேன்-கருத்திருமன் பெரிய நிலப்பிரபு என்று. என்னுடைய நிலையென்ன என்பதை நான் சொல்கிறேன். என்னுடைய நிலத்தையெல்லாம் சம்சாரம், குழந்தை எல்லோருக்கும் பிரித்து விட்டதாகச் சொல்கிறார்கள். நான் உண்மையாகக் கூறிக் கொள்கிறேன். எனக்கு இருக்கின்ற நிலம் எல்லாவற்றையும் சேர்த்தாலே உச்ச வரம்பு அளவுக்கு வராது. உண்மையை உண்மை என்றுதான் நான் சொல்வேன்; இந்த மன்றத்திலே சொல்லும்பொழுதுகூட நான் உண்மையைத் தான் சொல்வேன். என்னுடைய வீட்டுக்கு வந்துகூட நீங்கள் டாக்குமெண்ட்களையெல்லாம் பார்க்கலாம். நான் ஏதாவது தவறாகச் செய்திருக்கிறேன் என்றால் நீங்கள் சொல்லும் தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இடைக் [illegible] வைத்துத் திருப்தியாக இருந்து வாழக்கூடிய சக்தியை நான் பெற்றிருக்கிறேன். ஒருவனுக்கு பத்து ரூபாய் கடன் இருக்குமானால் அவனுக்கு ஊரெல்லாம் கடன் என்று சொல்வார்கள், பத்து ரூபாய் ஒருவன் கையில் இருந்தால் அவன் பெரிய பணக்காரன் என்று சொல்வார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்றவர்களும், [illegible] பொறுப்புக்களை மறந்து 410 கோடி ரூபாய் கடன் [illegible] என்று சொல்கிறார்கள். ஆனால், 550 கோடி ரூபாய் [illegible] இருக்கிறது என்றும் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட் காங்கிரஸ் அச்சடித்துக் கொடுத்த பட்ஜெட் அல்ல, திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பட்ஜெட்டிலே அப்பன்டிக்சிலே கொடுத்திருக்கிறார்கள். இந்த [illegible] கடன்கள் 436 கோடி ரூபாய்; ஆனால் அஸெட்ஸ் 597 கோடி ரூபாய் என்றும், நிகரம் அதாவது அசட்ஸ் ஓவர் லையபி

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967, ஜூலை 27

விட்டிஸ் 93 கோடி ரூபாய் என்றும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரிலே கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி [illegible] வெளியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர், தவறான கருத் துக்களை, அரசாங்கத்திலே இருப்பவர்கள்கூட, பிரச்சாரம் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த முறை நீங்கள்கூட கடன்கள் ஃப்லோட் பண்ண வேண்டுமென்று நினைத்தால் உங்களுக்கு யார் கடன் கொடுப்பார்கள் என்பதையும் நீங்கள் இந்த நேரத்திலே சிந்தித்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திற்கு எதிர்காலம் இருண்ட எதிர்காலம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் எந்த விதமான தொழில்களும் ஆரம்பிக்கப்படவில்லை. தொழில் வளர்ச்சி காணப்படவில்லை. அதிகமாகப் படித்துவிட்ட காரணத்தால் [illegible] திண்டாட்டம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. [illegible] காரர்கள் பற்றுக்குறை பட்ஜெட்டைப் போட்டார்கள், நாங்கள் அப்படியில்லை, என்றார்கள். ஆளுங்கட்சி கொறடாகூட ஏதோ

ந.ப. 12-00 ஒன்றைப் படித்தார்கள்.

1956-ம் வருஷம் தமிழ்நாட்டு அரசின் வருமானம் 60 கோடியாக இருந்தது. தற்போது 217 கோடி ரூபாய் அளவுக்கும் [illegible] கிறது. யார் கொடுத்தது இது? உங்களுடைய [illegible] ஆகவே, இது மாதிரியான தவறான கருத்துக்களைத் தயவு செய்து சொல்ல வேண்டாம். நாங்கள் செய்த காரியங்களிலே [illegible] இல்லாமல் இருக்கலாம், பலன் மக்களுக்குப் போதிய அளவு போய்ச் சேராமல் இருக்கலாம். பற்றுக்குறை, பருவகால [illegible] விலைவாசி உயர்வு ஆகியவற்றின் காரணமாகத் தேர்தலிலே ஆட்சியை மாற்றியமைக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆப்பிரகாம் லிங்கன் அழகாகச் சொன்னார். ஜனநாயக நாட்டில் தேர்தலிலே தவறு நடக்குமானால் அதற்குப் பரிகாரம் அடுத்த தேர்தல்தான் என்று. 'People may err in an election. The remedy is the next election. என்று சொன்னார். Government of the people, by the people and for the people' என்று சொன்னார். ஆகவே, [illegible] சிறப்புமாக [illegible] இன்ற சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்பதற்காக [illegible] நான் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன்.

இப்போதுள்ள சர்க்காரில் பணிபுரிபவர்களின் நிலை யாரை எப்போது வீட்டுக்கு அனுப்புவார்களோ என்ற நிலை, [illegible] அதிகாரிகளை டிரான்ஸ்பர் செய்கிறார்களோ, [illegible] போகச் சொல்லுகிறார்களோ என்ற நிலை. ஒரு நிச்சயமற்ற [illegible] இருக்கிறது. நிலையில்லாத நிலை இருக்கிறது. இந்த [illegible] இடத்திலும் காரியங்கள் சரியாகச் செய்யப்படவில்லை. [illegible] களுக்கு நம்பிக்கை கொடுத்து, எதிர்காலத்தைச் [illegible] களுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் [illegible] [illegible] வேலை செய்வார்கள். [illegible]



1967, ஜூலை 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சென்டால் இவ்வளவு பகுதி ஒழிப்பு என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. ஒரு நாள் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் படிப்படியாக ஒழிக்கப்படும் என்றும் அடுத்த நாள் யார் அப்படிச் சொன்னார்கள் என்றும் செய்தி வருகிறது. சர்க்காருடைய ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் ஆட்குறைப்பு சூழ்நிலை. இப்போது அரசாங்க உத்தியோகத்திலே இருப்பவர்கள் எல்லாம் தங்களுடைய நிலை என்ன என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக் கிறதே தவிர, எந்த வேலையையும் செய்ய முடியாத அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். நிர்வாகத்திலே இந்த நிலை. தொழில் ஒன்றும் புதிதாகக் கிடையாது. விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை இல்லை. இதையெல்லாம் பார்க்கும்போது எதிர்காலம் மிகுந்த இருண்ட காலமாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாரதி சொன்னார். உழவுத் தொழில் மட்டும் செய்து கொண்டிருந்தால் பிரயோசனம் இல்லை; தொழிலும் இருக்க வேண்டும். மக்கள் நன்றாக உழைக்க வேண்டும்; உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உழைப்பையும், உற்பத்தியையும் பெருக்கு வதன் மூலந்தான் நாட்டிலே சுபிட்சம் பெற முடியுமே தவிர, பட்டணத்தில் இருக்கும்படியான அழகான விளக்குகளாலோ, நல்ல சாலைகளினாலோ சுபிட்சம் பெற்று விட்டதாக நினைத்துக் கொள்ள முடியாது. கிராமங்களிலே வயல்களில் உள்ள தானிய மணிகளின் உரத்தைப் பார்த்துத்தான் சுபிட்சத்தைக் கணிக்க முடியும். கிராமங்களில் உள்ள வயல்களில் பயிர்களின் வளர்ச்சி பெருகாத வரையில் சுபிட்சம் ஏற்பட முடியாது. இந்த சுபிட்சம் ஏற்பட தொழில் வளமும் அதிகமாக வேண்டும். தொழில் வளம் அதிகமானால் விவசாயத்தில் கட்டுபடியாகாது. இருப்பவர்கள் எல்லாம் தொழிலுக்கு வந்து வாங்கும் சக்தி அதிகமாக இருக்கும் படியான நிலைமையில் உற்பத்தி பெருக அடிப்படையாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அண்மையில் அமெரிக்காவிலுள்ள டென்னசி பள்ளத்தாக்கிற்குச் சென்றிருந் தேன். அந்தப் பள்ளத்தாக்கில் 1932-ம் ஆண்டில் சராசரி வருஷ வருமானம் 150 டாலர்; அதாவது அந்த நேரத்தில் இருந்த நாணய மதிப்பின்படி 300 ரூபாய். 1966-ம் வருஷத்தில் அக்டோபர் மாதத் தில் நான் அங்கு சென்றிருந்தபோது சராசரி வருமானம் என்ன என்று கேட்டேன். 3,000 டாலர்கள் என்று சொன்னார்கள். இப்போது இருக்கும்படியான நாணய மதிப்பின்படி டென்னசி பள்ளத்தாக்கில் சராசரி வருமானம் 21,000 ரூபாய். இதற்கு அடிப் படையான காரணம் விவசாயிகளுக்கு மின்சார வசதிகளை அதிக மாகக் கொடுத்ததுதான். கோழிகளைப் பார்த்தால் ஆட்டுக் குட்டி கள் போல் இருக்கின்றன. ஆட்டுக்குட்டிகள் கன்றுக்குட்டிகள் போல் இருக்கின்றன, கன்றுக்குட்டிகள் யானைக் குட்டிகளைப் போல் இருக்கின்றன. அங்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

கடுமையாக உழைத்ததன் காரணமாக வருமானமும் வாங்கும் சக்தியும் உயர்ந்திருக்கிறது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் விவசாயிகளை கொஞ்சம் நன்றாகக் கவனியுங்கள் என்பதுதான்.

இப்போது வைத்திருக்கும்படியான இந்தத் திட்டத்தில் புதிய தொழில்கள் எதுவும் இல்லாமல் இருந்தாலும்கூட, இனிமேல் வரக்கூடிய காலத்திலாவது தொழில்கள் அதிகமாக ஏற்படச் செய்து தொழில் வளர்ச்சி ஏற்படச் செய்யவேண்டும். சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றியும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைப் பற்றியும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை மத்திய அரசு செய்யவில்லை என்றால் போராடுவோம் என்ற அவருடைய போராட்டப் போக்கு தயவு செய்து மாற வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். நல்ல காரியத்தை நல்ல முறையில் செய்ய முயற்சிக்கவேண்டும். 'மத்திய சர்க்காரின் போக்கு சரியாக இல்லை; அவர்கள் போக்குக்குக் காங்கிரஸ்காரர்கள் ஆதரவு கொடுத்துக் கொண்டு வந்தார்கள்; இப்போது நாங்கள் எதிர்ப்புக் காட்டி இருக்கிறோம்' என்று சொன்னார்கள். மத்திய அரசை—எங்களை விடக் காங்கிரசில் எதிர்த்தவர்கள் ஒருவரும் இல்லை.

1965-ம் வருஷத்தில் இந்தி கட்டாயப் பாடமாக வரக்கூடாது என்பதற்காக நடந்த போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட சில சம்பவங்களின் காரணமாக மத்திய அமைச்சர்களாக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களும், அளகேசன் அவர்களும் பதவியை உதறித் தள்ளிவிட்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.பி. யாராவது ராஜினாமாச் செய்தார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் ராஜினாமாச் செய்தார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் செய்தீர்களா என்று நான் கேட்கும்போது . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் சுப்பிரமணியம் அவர்கள் ராஜினாமாச் செய்ததைக் காங்கிரஸ் ராஜினாமா செய்ததாகக் கொள்வது தவறு. அவர் ராஜினாமாச் செய்தது பொறுப்பற்ற செயல் என்று காங்கிரசில் உள்ள மற்றத் தலைவர்கள் அப்போது அறிக்கை விட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொறுப்பற்ற செயல் என்று சொன்னாலும்கூட, வாக்காளர்கள் பொறுப்பற்ற செயல் என்று . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் சுப்பிரமணியம் அவர்கள் ராஜினாமாச் செய்தது தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட எழுச்சி காரணமாக. அது காங்கிரஸ் திட்டமல்ல, காங்கிரஸ் கட்சியின் செயல் அல்ல. ஏனென்றால் அவர் இப்படிச் செய்ததைப் பாராட்டுவதற்குப் பதிலாக, தமிழ்நாட்டில்





மாநிலத்தைச் சேர்ந்த மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் 'நீங்கள் ராஜினாமாச் செய்வீர்களா?' என்று அவரிடம் கேட்ட போது, அவர் சொன்னது 'இது பொறுப்பற்ற செயல்' என்று. இன்னொரு காங்கிரஸ் தலைவர் சொன்னது I am not so immature'

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவருடைய அபிப்பிராயத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப் போலவே நல்ல காரியம் செய்தால் அதைப் பாராட்டுகின்ற பண்பு எனக்கு உண்டு. கனம் சுப்பிரமணியம் அவர்கள் ராஜினாமாச் செய்த பதினைந்தே நிமிஷத்தில் நான் இங்கிருந்து கொண்டே அவரைப் பாராட்டினேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** போராட்டங்கள் எல்லாம் இல்லாமல் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு எங்கள் கட்சியின் சார்பாக எங்களுடைய ஒத்துழைப்பும் நியாயமான முறையில் கிடைக்கும்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தை இந்தச் சபையிலே குறிப்பிட்டால் அது புறம்பாக இருக்காது என்ற எண்ணத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நாம் அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி பிரமாணம் எடுத்து பதவிக்கு வந்திருக்கிறோம். தேசியக் கொடிக்கு நாம் உரிய மரியாதையையும், கவுரவத்தையும் கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. சில சமயத்தில் எனக்கு வரும் செய்திகள், நானே கூட நேரில் கண்டது என்னவென்றால்—அமைச்சர்கள் தங்களுடைய கார்களில் தேசியக் கொடியைப் போட்டுக் கொண்டு செல்லலாம் அல்லது போடாமல் செல்லலாம்—ஆனால் அவர்கள் கட்சிக் கொடிக்குக் கொடுக்கும்படியான கவுரவத்தைவிட அதிகமாக தேசியக் கொடிக்குக் கொடுப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. மக்களிடையே நிலவி வரக்கூடிய இந்தக் கருத்தைப் போக்கவேண்டும். கட்சிக் கூட்டங்கள் நடக்கும்போது கட்சிக் கொடியைப் போட்டுக் கொண்டு போவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அமைச்சர் என்ற முறையில் செல்லும்போது அமைச்சர்கள் வெளியிலே போகும்படியான சந்தர்ப்பங்களிலே கட்சிக் கொடியைப் போட்டுச் செல்வது அவ்வளவு விரும்பத்தக்கது அல்ல; அது நாம் எடுத்துக் கொண்ட பிரமாணத்திற்கு அவ்வளவு பொருத்தமானதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். கட்சிக் கொடி போட்டுக் கொண்டு தனியாகப் போவதில் அல்ல. தேசியக் கொடியைத் தனியாகப் போட்டுச் செல்லட்டும். ஒரு பக்கத்தில் கட்சிக் கொடி, நடுவில் தேசியக் கொடி போட்டுச் செல்வது அவ்வளவு முறையானதல்ல என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி வேறு, அரசாங்கம் வேறு. கட்சிக்குக் கொடுக்கும் கௌரவத்தை விட அவர்கள் பொறுப்பில் இருப்பது வரையில் நம் தேசியக் கொடிக்கு, தேசாபிமானத்திற்கு அதிக மதிப்பு கொடுக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். அதை நிச்சயமாக முதல் அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இனிமேலாவது அரசாங்க வேலையில் ஈடுபடும்போது கட்சிக்கு அதிகம்

உள்ளவர்களுக்கு ஏக்கருக்கு இவ்வளவு என்று செய்யுங்கள். எதிர்க் கட்சிக்காரர்களை குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியைக் கலந்து கொண்டு இத்திட்டத்தைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கம்பௌண்டிங்கை முன்னால் புகுத்திய போதே அது ஒரு இடைக்காலத் திட்டம் என்ற முறையில் டெம்பரரி மெஷர் என்ற முறையில் புகுத்தப் பட்டது. கம்பௌண்டிங் இருப்பதால் சர்க்காருக்கு வரக்கூடிய அளவிற்கு பணம் வரவில்லை என்ற மனக்குறை இருக்கிறது. ஆகவே, கம்பௌண்டிங்கை எடுத்து விடுவது என்று இந்த சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. கம்பௌண்டிங்கை எடுத்து விட்டால் ஏற்படக் கூடிய சிக்கல்கள் பற்றி விளக்குகிற எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கம்பௌண்டிங்கை வைத்துக் கொண்டு சர்க்காருக்கு வரக்கூடிய வருவாய் குறையாமல் ஓரளவிற்கு மிகும் படியான முறையில் என்ன மாற்று யோசனை சொல்கிறார்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 20 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். எல்லோரும் கணக்கு கொடுக்க முடியாது. சேல்ஸ் டாக்ஸுக்கு 10,000 ரூபாய் என்றிருந்ததை 15,000 ஆக மாற்றி 16,000 பேர்களுக்கு ரிலீஃப் கொடுத்திருக்கிறார்கள். கம்பௌண்டிங்-க்கு வழிசெய்து நிலையான வரி கொடுப்பது இவ்வளவு ஏக்கருக்கு, அதற்கு மேல் உள்ளவர்கள் இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று செய்யலாம். ஐந்தாறு ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் கம்பௌண்டிங் கொடுத்துவிடலாம். கம்பௌண்டிங் வரம்பை கீழே கொண்டு வரட்டும். அதற்கு மேல் உள்ளவர்களுக்கு இந்த வரி போட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்து கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் சொல்லுவது விவசாய வருமானவரி திட்டம் கொண்டுவரப்பட்டபோது சர்க்கார் எவ்வளவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்களோ அது கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பதற்குக் காரணம் கம்பௌண்டிங் இருப்பதுதான் என்ற கருத்தின் அடிப்படையில் தான் கம்பௌண்டிங்கை எடுத்துவிடலாம் என்று சொல்லுவது. கம்பௌண்டிங்கை வைத்துக்கொண்டே கூட சர்க்காருடைய வருமானம் குறையாத விதத்திலும், முடியுமானால் அந்த வருமானத்தை அதிகப்படுத்தக் கூடிய விதத்தில் ஒரு மாற்று யோசனை வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் ஆலோசனை கேட்டதற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன் 'விவசாயி' என்ற ஒரே கொள்கை தான் எனக்கு. கணக்கு எழுதிக் கொடுக்கும் நிலைமைக்கு தயவு செய்து விவசாயியை இழுக்காதீர்கள். விவசாயி கணக்கு வைத்துக் காட்ட, அவனை குற்றவாளியாகக் கருதி ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நோட்டீஸ் கொடுப்பார், அதை எடுத்துக்கொண்டு போய் அவர்களிடத்தில்



அவனை காக்க வைக்கக் கூடாது. இந்த நிலைமை தான் வேண்டுமென்று சொல்லுகிறேன். அவர்கள் கேட்பதற்கு யோசனை செய்து மாற்று யோசனை சொல்லத் தயாராக இருக்கிறோம். விவசாயிகளை தாலுகா ஆபீசுக்குப் போய், ரெவின்யூ இன்ஸ் பெக்டரிடமும் மற்ற அதிகாரிகளிடமும் நிற்கும நிலையை மட்டும் ஏற்படுத்தவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் சொல்லுகிற, அதிகாரிகளிடத்தில் அகப்பட்டுக்கொள்ளக் கூடிய சிக்கல்களை நான் நிச்சயமாக உணருகிறேன். அந்தச் சிக்கல்களில் விவசாயிகளைப் புகுத்தவேண்டுமென்ற எண்ணம் எனக்குத் துளியும் இல்லை. ஆனால், கம்பௌண்டிங் இருந்தால் உள்ளபடி கொடுக்க வேண்டிய வரியை கொடுக்காமல் பல விவசாயிகள் இருந்து விடுகிறார்கள் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் மறுக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்களே இப்போது, 'கணக்கு வேண்டுமென்று சொன்னபோது நானும் கணக்குக் கொண்டு போய்க் காட்டினேன்' என்று சொன்னார்கள். ஒரு கணக்குக் காட்ட இவர்களுக்குத் திறமை இருக்கிறது. அதை மறுக்க அதிகாரிக்கு உரிமை இருக்கிறது. ஒருவரை ஒருவர் ஏமாற்றுகிற வேலை நடந்திருக்கிறது. ஏமாற்றுவது என்பது பொதுவாகச் சர்க்காருக்கு ஏற்படுமானால், மொத்தமாகக் கிடைக்கும் வருவாய் குறைகிறது. சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் குறையாமல், இன்னும் சொல்லப் போனால் வருவாய் அதிகரிக்கும் விதத்தில் விவசாயிகளுக்கு அதிகாரிகளிடத்தில் சென்று கணக்குக் கொடுக்கும் சங்கடமும் இல்லாமல் ஒரு மாற்று யோசனை வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகவே, முதலமைச்சர் அவர்கள், விவசாயிகள் அதிகாரிகளிடத்தில் கணக்குக் கொடுக்காமலும், சர்க்காருக்கு வரும்படியான வருமானம் குறையாமலும் ஒரு திட்டத்தைக் கொடுத்தால் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் இந்த நிலையைச் சொல்லி, விவசாயிகளிடத்தில் இந்தப் பிரச்னைகளை வைத்து, ஆலோசனை செய்யும்படியான நிலைமை இருக்குமானால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து. என் கருத்து மட்டுமல்ல, கொடுக்க வேண்டிய வரியை கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று சொல்லக் கூடியவன் நான். மலிவான விளம்பரத்திற்காக வரியே வேண்டாமென்று சொல்லாமல், எந்த விதத்தில் போட வேண்டும், யார் மீது போடவேண்டும், எவ்வளவு போடவேண்டும் என்று பார்த்து அப்படிப் போட்டு தகுதியுள்ளவர்கள் கொடுக்க வேண்டும், வசதி உள்ளவர்கள் கொடுக்க வேண்டும், சக்தி உள்ளவர்கள் கொடுக்க வேண்டும் என்று மக்களிடமும் அறிவுறுத்துகிறவன் நான். இந்த நிலையில் ஒரு பொறுக்குக் கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி மாவட்டவாரியாகச் சென்று, முதலமைச்சர் அவர்கள் சொல்லும்படியான ஆலோசனையை விவசாயிகளைக் கூட்டி

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூன் 27

'இந்தமாதிரியான நிலை இருக்குமானால் என்ன சொல்லுகிறீர்கள்' என்று கேட்டு அறிந்து, அதை வைத்துக் கொண்டு பொதுக்குழு கமிட்டியில் முடிவு எடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லி, பொதுவாக இந்த பட்ஜெட்டில் இந்த விவசாயத் தொழிலுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருக்கும்படியான நிலையில், இருக்கும்படியான சிக்கல்களை நீக்கும் முறையில் போகப் போக அவைகளைக் களைந்து எறிவார்கள் என்று நம்புகிறேன்.

இறுதியிலே, இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில், முதலிலே நான் எடுத்த நிலை தான்—இதிலே புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை. அதோடு புரட்சி ஏற்படக் கூடிய நிலைதான் இருக்கிறது. சேரணி என்னும்படியான ஒரு 'பிரிகேட்' ஏற்படுத்துவதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சேரணி என்பதிலே அவர்களுடைய எண்ணத்தை, நினைக்கும்படியான போக்கை, தவருகச் சொல்லவில்லை. ஆனால், சேரணியில் இருக்கும் தோழர்கள் எந்த விதத்தில் நடந்து கொள்வார்கள் என்பதில் தான் ஐயப்பாடு இருக்கிறது. அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள் செங்காவல் படை போல என்று சொன்னதற்கு "ஆமாம், செங்காவல் படைக்கு, ஈக்கள் அதிகமாக இருந்தபோது, ஈக்களை ஒழிக்கவேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். அவர்கள் ஈக்களை எல்லாம் ஒழித்து விட்டார்கள். என்ன நன்மை பார்த்தார்களா?" என்று பத்திரிகையில் வந்திருந்த குறிப்பை நான் பார்த்தேன்.

முதலமைச்சர் அவர்கள் இந்தப் பக்கத்தில் இருந்து, அந்தப் பக்கத்தில் இருந்தபோது அவர்கள் சொன்ன ஒரு கதையை மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது சொன்னார்கள். ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அந்த ராஜாவுக்கு ஒரு மெய்க்காப்பாளன் இருந்தான்—அவர்கள் சொன்ன கதையைத் தான் சொல்லுகிறேன்—அந்த ராஜாவை யாரும் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அந்த மெய்க்காபாளனுக்கு உத்தரவு. திடீரென்று ஒரு ஈ அந்தச் சீமானின் மேல் உட்கார்ந்து கொண்டது. பார்த்தான் மெய்க்காப்பாளன்; எடுத்தான் தடியை; அடித்தான் ஈயை; அடித்ததோ ஈயை—செத்ததோ சீமான். சீமானைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த மெய்க்காபாளன், ஈயை அடித்து சீமானை செத்த மாதிரி சேரணியானது சாதிப்பதைவிட அங்கு இருக்கிற மக்களை அடிக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலையில், இதைப் பற்றி யோசனை செய்து இந்த முயற்சியிலே ஈடுபடவேண்டுமென்று சொல்லி இந்த பட்ஜெட்டிலே புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை, பழைய கருப்பன் தான் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முதல் முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற அரசின் [illegible]



1967 ஜூன் 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

நிலை அறிக்கை இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டதை இந்த மன்றத்திலே உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மிக அக்கறையோடு கவனித்து இருக்கிறார்கள் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் பல்வேறு வகையான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்றாலும், 'இது யாரும் கவனிக்கத் தக்க நிதி நிலை அறிக்கை இல்லை' என்று அவர்கள் அலட்சியப் படுத்தி விடவில்லை என்பதில் எனக்கு முதல் மகிழ்ச்சி. அதிலும், இதிலே புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு உள்ள நிதி நிலை அறிக்கை விவாதத்திலே 120 உறுப்பினர்களுக்கு மேல் கலந்துகொண்டு, நாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகப் பெரிய அளவுக்கு விளக்கங்களைத் தர அது தூண்டுகோலாக இருந்ததென்றால், இன்னும் அதிகமான புதுமையும், புரட்சியும் புகுத்தப்படக் கூடிய நிதி நிலை அறிக்கை வரும் நேரத்தில் இன்னும் அதிக உறுப்பினர்கள் அதிக அளவுக்கு அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

கடைசியாகப் பேசிய விஷயத்தை முதலாவதாக எடுத்துக் கொள்கிறேன். கடைசியாகப் பேசியது என்றால், அவர்கள் இப்போது குறிப்பிட்டார்களே, 'சேரணிப் படை' அதைப் பற்றி முதலிலே எடுத்துக் கொள்கிறேன். அதிலே நான் சொன்ன கதையை அவர்கள் எடுத்துச் சொல்லி, அதைப் போல் நடந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கதையைச் சொன்னவன் என்ற முறையில், அந்த முறையிலே நடந்து விடாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் பேரிலேதான் இந்தச் சேரணி அமைக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் சொன்ன கதைகள், நான் சொன்ன உவமைகள், நான் காட்டிய வாதங்கள், நான் சொன்ன புள்ளிவிவரங்கள் இவையெல்லாம் ஒரு காலத்தில் மேற்கோளாக வரும் என்று நான் உள்ளபடி எண்ணியதே இல்லை. அந்த அளவுக்கு நீங்கள் என்னுடைய உரைகளை மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டு வருவதற்கு நான் மிகுந்த நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும். பொதுவாக என்னுடைய கதைகளை, என்னுடைய உவமைகளை, வாதங்களை, புள்ளிவிவரங்களை, என்னுடைய கட்சிக்காரர்களும், என்னிடத்தில் அன்புகொண்ட நாட்டு மக்களும்தான் பார்க்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நீங்கள் இவ்வளவு அக்கறை வைத்துப் பார்ப்பதை—நான் வேடிக்கையாகச் சொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்—இவ்வளவு பெரிய சீடகோடிகள் கிடைப்பார்கள் என்று நான் முன்னாலே எண்ணியதே இல்லை. ஆனால், இதிலே நான் சொன்ன கதைகளையும், உவமைகளையும், வாதங்களையும், புள்ளிவிவரங்களையும் தக்க முறையில் அவர்கள் பயன்படுத்தியிருப்பார்களானால் இன்னும் அதிக மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஜில்லா போர்டுத் தேர்தலிலே பிரசாரம் செய்வதற்காக நான் என்னுடைய கல்லூரி நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை

பகுதிக்குப் போயிருந்தேன். ஒரு நாள் மாலை சுற்றுப் பிரயாணம் தொடங்கியது. கடைசிக் கூட்டம் நடக்கும்போது இரவு 12-00 மணிக்கு மேல் இருக்கும். ஒரு சிறு கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் பாதித் தூக்கத்தில் இருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்துப் பேசுகிற நோத்தில் சொன்னேன், 'நீங்களெல்லாம் பாதித்தூக்கத்தில் இருக்கிறீர்கள். உங்கள் தூக்கத்தைக் கெடுப்பதற்கு மன்னிக்க வேண்டும். நீங்கள் பாதித் தூக்கத்தில் இருக்கிற நிலையில் அதிகம் பேசுவதும் அவ்வளவு பொருத்தமா என்று யோசிக்கிறேன்' என்று பேசினேன். என்னோடு வந்த கல்லூரி நண்பர், என்னோடு இருந்து பேசுவதற்குப் பழகவேண்டுமென்று வந்தவர். அவர் என்னோடு [illegible] இன்னொருவரிடம் போய்க் கேட்டிருக்கிறார் 'எப்படிப் பேசினால் நன்றாக இருக்கும்?' என்று. அவர் சொன்னார், 'அண்ணா [illegible] என்னென்ன பேசுகிறார் என்று குறித்து வைத்துக்கொண்டு, மறு கூட்டத்தில் அதைச் சொல்லிவிட்டால் போதும்' என்று.

பி.ப. 12-30 அதை அந்த நண்பர் அப்படியே பின்பற்றி மறுநாள் மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் நான் இரவு ஒரு மணிக்குச் சொன்னதையே சொன்னார். 'நீங்களெல்லாம் பாதித் தூக்கத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் விழித்துக் கொள்ள வேண்டும். உங்களையெல்லாம் கஷ்டப்படுத்துவதற்கு நான் வருத்தப்படுகிறேன்' என்றெல்லாம் சொன்னார். மக்கள் நான் சொன்னபொழுது எவ்வளவு உருக்கம் அடைந்தார்களோ அவ்வளவு உருக்கம் அடையாதது பார்த்து, பேசியவருக்கு ரொம்ப வருத்தம். திரும்பி வந்து அந்த நண்பர் கேட்டார், 'அண்ணாதுரை சொன்னதைத் தான் நான் சொன்னேன். மக்கள் அவர்கள் சொன்னபொழுது உருக்கமாகக் கவனித்ததுபோல் கவனிக்காமல் கேலியாகச் சிரித்தார்களே காரணம் என்ன?' என்று கேட்டார்கள். அதைப் போல கனம் உறுப்பினர்கள் நான் சொன்னதை, எந்த நேரத்தில் எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பதைக் கவனிக்காமல், என்னுடைய பழைய கல்லூரி நண்பர் செய்ததைப்போல, இந்த மன்றத்தில் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். ஆகையினால், என்னுடைய கருத்துக்களை, உரைகளைப் படித்தது மட்டுமல்லாமல், அது எந்த இடத்தில் சொல்லப் பட்டது, எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்ற இரண்டாவது பாடத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று வழக்குமன்றங்களில் சொல்வார்கள். 'உண்மை, முழு உண்மை, உண்மையைத் தவிர மற்றது சொல்லுவதில்லை' என்று சொல்லிவிட்டுத்தான் வழக்கு மன்றங்களில் வழக்குகளை நடத்துவார்கள். அதைப்போல நான் சொன்னதிலே, முழுப்பகுதியை முழு அளவிலே எடுத்துச் சொல்லி, அது நியாயமா [illegible] என்று பார்த்தால்தான் உண்மையான பொருள் விளங்கும். [illegible] [illegible] கூட இந்த மன்றத்திலேயே [illegible] [illegible] இருந்தபொழுது, நண்பர் கருத்திருமன் [illegible] [illegible], இராமாயணத்திலிருந்து 2, 3 வாக்கியங்களை [illegible]



எடுத்து, இராமாயணத்திலிருந்து வேறு மாறாக கதை சொல்ல முடியும். அசோக வனத்தில் சீதை அமர்ந்திருந்தாள். ராவணன் அவளைப் பார்த்து 'உன்னிடத்தில் எனக்கு மையல் வந்துவிட்டது' என்று சொன்னார். ஸ்ரீராமன் 'ஆகா' என்று சொன்னார். லக்ஷ்மணன் 'அப்படியே ஆகட்டும், அண்ணா' என்று சொன்னார். இவைகளெல்லாம் ராமாயணத்தில் உள்ள வாக்கியங்கள், தனித்தனியாக வெவ்வேறு இடத்திலுள்ள வாக்கியங்கள். இவைகளையெல்லாம் ஒன்றாக இணைத்து, இது தான் என்னுடைய இராமாயணம் என்று யாராவது சொல்வார்களேயானால், அது எவ்வளவு பொருத்தமற்றது? அதைப் போலவே நாங்கள் சொன்னவற்றில் இங்கும் அங்குமாக ஒன்றை ஒன்று எடுத்து, அதை இணைத்து 'நீங்கள் வரியே போடாமல் ஆள்வதாகச் சொன்னீர்களே, இப்பொழுது வரி போடுகிறீர்களே' என்று கேட்பது-நான் சொன்ன அந்த வேடிக்கை இராமாயணத்திற்குச் சமமாக இருக்கும்.

இந்த மன்றத்தில் முதன்முதலில் நான் அமர்ந்த நோத்திலேயே சொன்னேன். 'நாங்கள் எதிர் தரப்பில் இருந்தாலும், எதிர் தரப்பிலே கடைசிவரையிலும் இருக்கப் போகிறோம் என்ற எண்ணத்தோடு இங்கே வரவில்லை. என்றைக்காவது ஒரு நாள் பொறுப்பேற்றுக்கொள்கிற நாள் வரும் என்ற பொறுப்பு உணர்ச்சியுடன் தான் நான் பேசுகிறேன் வரியே போடாமல் ஆட்சி நடத்தவேண்டுமென்று நான் குறிப்பிட மாட்டேன். போடவேண்டிய இடத்தில், போடத்தக்க வரியை போடுகிற முறைப்படி போடவேண்டும். அப்படிப் போட்டு பெறுகின்ற வரிப் பணத்தை தக்க முறையிலே செலவழிக்க வேண்டும். வரியே போடாமல் ஆட்சி நடத்தலாம் என்று நாங்கள் சொல்லவில்லை' என்று குறிப்பிட்டேன். இதைப்பற்றி நான் என்னுடைய முதல் பேச்சிலேயே சட்டமன்றத்தில் சொன்னேன். பொதுக் கூட்டங்களிலும் அதைத்தான் நாங்கள் பேசிக்கொண்டு வருகிறோம். அதை எடுத்து வைத்துக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 'வரியே போட மாட்டேன் என்று சொன்னாயே?' என்று கேட்டார். [illegible] சொன்னேன். எப்படி? 'ஏழைகளுக்கு' என்ற ஒரு வார்த்தையை நீக்கிவிட்டிருக்கிறார்கள். 'ஏழைகளுக்கு வரி போட மாட்டேன். தாங்கக்கூடிய மாட்டேன். மற்றவர்களுக்கு வரி போடுவேன். அப்படிப் போட்டு பெறுகிற வரிப் பணத்தை தக்க காரியங்களுக்கு பயன்படுத்துவேன்' என்றுதான் சொன்னேன். இவ்வளவையும் வைத்துச் சொன்னால், உள்ளபடியே நான் சொன்னதை திரும்பவும் படித்ததற்கு பயன் கிடைத்திருக்கக் கூடும். அதை விட்டுவிட்டு, நடுவில் எடுத்து 'வரி போட மாட்டேன் என்று சொன்னீர்களே. இப்போது வரி போடு [illegible] இருக்கிறீர்களே' என்றும், அதிலே கொஞ்சம் தரம் உயர்ந்ததாக [illegible] நண்பர் கருத்திருமன் அவர்கள் 'இப்பொழுது [illegible] [illegible] உணர்ந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்' என்று சொல்லிக்கொண்டு [illegible] சொன்னார்கள். 'ரொம்ப நாட்களாக அவர்கள் சொல்லிக்கொண்டு இருந்தது எனக்கு விளங்காமல் இருந்தது. இப்பொழுது எனக்கு அர்த்தம் எனக்கு விளங்கிற்று. அவ்வளவு மந்த சுபாவம்' என்று அவர்கள் [illegible] 'இப்பொழுதாவது உணர்ந்தார்களே' என்ற சொன்னார்கள்.

இம்மாதிரி பேச்செல்லாம்—நான் இதைச் சொல்வதனால் யாரையும் தவருகச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம்—எனக்கு இவைகளெல்லாம் பால பாடம். ஆகையினால் நான் சொல்ல விரும்புவது, நாங்கள் சொன்னவைகளுடைய முழுத்தன்மையையும் எடுத்து வைத்துக்கொண்டு, 'இப்படி இப்படி சொன்னீர்களே, இப்படி இப்படி நடத்தீர்கள்' என்று வாதாடினீர்களேயானால் உள்ளபடியே அது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

இவைகளுக்கு அப்பாலே சென்று ஒன்று சொல்கிறேன். ஒரு கட்சியின் சார்பிலே அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னாலே இன்னதைச் செய்யப் போகிறோம் என்று அவர்கள் கொடுத்திருக்கிற வாக்குகள் நிறைவேற்றப்பட்டனவா, இல்லையா என்பதைக் கணக்கிடுகிற காலம் இதுதானா? அவர்கள் பொறுப்பில் இருக்க வேண்டிய அளவுக்கு இருந்து—தோழர் விநாயகம் அவர்கள் 'ஐந்து வருஷங்களுக்கு நீங்கள் இருந்துதான் ஆக வேண்டும்' என்று சொன்னார்கள்—அப்படி இருக்கவேண்டிய கால அளவிற்கு இருந்து, செய்யக்கூடியவைகளை நான் பல தடவை இந்த மன்றத்தில் சொன்னபடி படிப்படியாகச் செய்து, நாங்கள் இறுதியில் அந்தக் காரியங்களில் எதையுமே நிறைவேற்றவில்லையென்றால், 'நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன? உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிற சாதனை என்ன?' என்று அந்த நேரத்தில் கணக்குப் பார்க்க வேண்டும். ஆனால், நீங்கள் கணக்குப் பார்த்தது மார்ச்சு 7-ம் தேதி. மார்ச்சு 6-ம் தேதி நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டோம். மார்ச்சு 7-ம் தேதி நீங்கள் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விட்டீர்கள். நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட மறு நாளே 'என்ன செய்துவிட்டீர்கள்' என்று கேட்டீர்கள். 8-ம் தேதி 'என்ன செய்துவிட்டீர்கள்' என்று இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக் கேட்டீர்கள். 10-ம் தேதி 'என்ன நான் செய்தீர்கள்' என்று கேட்டீர்கள். இப்படியா கணக்குப் பார்ப்பது? 6-ம் தேதி நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்திருக்கிறோம். 7-ம் தேதியே நீங்கள் கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டீர்கள். இது கணக்குப் பார்க்கும் முறையும் அல்ல, கணக்குப் பார்க்கிற காலமும் அல்ல. உண்மையான கணக்குப் பார்க்கிற தன்மையும் இது ஆகாது.

ஆதலால், திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிற இந்த அரசு அதனால் முடிந்த அளவுக்கு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு படிப்படியாக முயன்று வரும் என்பதை நம்முடைய அனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னபடி, இந்தப் படி அரிசித் திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு மெய்ப்பித்திருக்கிறோம். அதைப்போல பஸ்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தின் மூலம், மோட்டார் பஸ் போக்குவரத்து 75 மைல்களுக்கு அப்பாற்பட்டு இருப்பவையெல்லாம் நாட்டுடைமை ஆகவேண்டும் என்ற முறையிலே, எங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதிலே அக்கறையோடு நாங்கள் இருக்கிறோம் என்பதை மெய்ப்பிக்கத் தொடங்கியிருக்கிறோம். நில





வரியினால் கஷ்டப்படுகிற மக்களுக்கு அந்தக் கஷ்டத்தைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று நாங்கள் சொன்னதை ஓரளவுக்கு நிறைவேற்றுவதிலே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏழை எளிய மக்கள் கல்விச் சலுகை பெறுவதற்காக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாங்கள் சொன்ன தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில், புதுமுக வகுப்பில் ரூ. 1,500-க்கும் அதற்கும் குறைவான வருமானம் பெறுகிற ஏழை எளியோர் குடும்பங்களுக்கு, அவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் சரி, முற்போக்கு வகுப்பினராக இருந்தாலும் சரி, பின்தங்கிய வகுப்பினராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் அவர்களுக்கு அந்த நன்மை ஏற்பட வேண்டும் என்று நாங்கள் அக்கறை காட்டியிருக்கிறோம். ஆக நாங்கள் பொறுப்பேற்று 120 நாட்களுக்குள் எங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் நாங்கள் இந்த அளவுக்கு ஈடுபாடு வைத்திருக்கிறோம் என்பதை அவர்கள் உற்று கவனித்திருப்பார்களேயானால், 'இது அல்ல நாம் முன்னேற்றக் கழகத்தை கண்டிக்கக்கூடிய காலம், இன்னும் அதற்குக் காலம் வரவில்லை' என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கருதுவதுபோல அவர்கள் கருதுவார்கள். அவர்கள் கூட காத்துக்கொண்டிருக்கிறார்கள், எனக்குத் தெரியும். எப்பொழுது தவறு செய்கிறார்களோ அப்பொழுது கண்டிக்கலாம், எப்பொழுது வழி தவறுகிறார்களோ அப்பொழுது கண்டிக்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் எதிர்க்கட்சியினர்களுக்கு அந்த அளவுக்கு பொறுத்துக் கொள்கிற தன்மை இல்லை, அவசரம் இருக்கிறது. அந்த அவசரத்திற்கு என்ன காரணம் என்றும் எனக்குப் புரிகிறது. என்ன காரணம் என்றால், இன்றையதினம் நம்முடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்களும் திரு. விநாயகம் அவர்களும், என்னைப்பற்றி நானே கூச்சப்படுகிற அளவுக்கு பாராட்டினார்கள். அவர்கள் இருவரும் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல. என்னுடைய நெருங்கிய நண்பர்களும்கூட. என்னை இந்த சட்டமன்றத்தில் அந்த அளவுக்குப் பாராட்டியதற்கு அவர்களுடைய கட்சிக் கூட்டத்தில் அவர்களுக்கு சில சங்கடங்கள் கூட விளையும் என்று என்னாலே யூகித்துப் பார்த்துக்கொள்ள முடிகிறது.

ஆனால், அவர்கள் என்னை இந்த அளவுக்கு பாராட்டியதற்கு பொதுவாக, பெரும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றாலும், நாங்கள் பொறுப்பேற்றுக் காலமான காங்கிரஸ்கார நண்பர்களுக்கு என்ன கொள்கிற நிமிடம் வரையில் இருந்து வந்த எண்ணம் என்னவென்றால், நாங்கள் ஆளத் தகுதியற்றவர்கள், ஆள்வதற்கேற்ற திறமையற்றவர்கள், ஆள்வதற்கு எங்களுக்கு பொறுப்புணர்ச்சி இருக்காது என்பதுதான். அந்த எண்ணத்தில் தங்களை வளர்த்துக் கொண்டார்கள். அது தவறான எண்ணம். அந்த எண்ணத்தை வளர்த்துக் கொண்டதினாலே, நாங்கள் எதைச் செய்தாலும், 'இவர்கள்தான் தகுதியற்றவர்களாயிற்றே, இவர்கள் போட்டிருப்பதில்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூலை 27

இது பிடித்தமானது போல இருக்கிறதே, இது எப்படி பிடித்தமான
ாக இருக்க முடியும்' என்று அவர்கள் ஆராய்கிருர்கள். மிகப்
பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர், நான் ஆட்சிப் பொறுப்புக்கு
வந்தால், நாடு நகரங்களில் பெண்கள் வெளியே வரமுடியாது,
உலவ முடியாது, என்ருர்கள். இன்னொரு பெரிய காங்கிரஸ் தலைவர்,
இவர்களா ஆளுகிறவர்கள், முகத்தைப் பாருங்கள் என்று சொன்
ஞர்கள். இன்னும் சில காங்கிரஸ் தலைவர்கள், இந்தப் பக்கம் உதிக்
கும் சூரியன் அந்தப் பக்கம் உதித்தாலும் இவர்கள் வரமுடியாது
என்று சொன்ஞர்கள். (குறுக்கீடு) நண்பர் விநயகம், அதெல்லாம்
தேர்தல் பேச்சு என்கிருர்கள். தேர்தல் பேச்சு, தேர்தெடுத்த
பேச்சல்ல (சிரிப்பு) என்றுதான் குறிப்பிடுகிறேன். அந்த வகையில்
மனத்தை வளர்த்துக் கொண்டிருப்பதால், நாங்கள் எதைச் செய்
தாலும், அதில் புதுமை இல்லை, புரட்சி இல்லை என்று சொல்லத்
தோன்றுகிறது. இல்லையென்ருல், நாங்கள் செய்ததைத்தானே
நீங்களும் செய்கிறீர்கள் என்று சொல்லுகிருர்கள். இந்த [illegible]
லாஜிக்' படி எப்படி பொருந்தி வருகிறது என்று புரியவில்லை.
ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லிவிட்டு, நாங்கள் செய்ததைத்
தானே நீங்களும் செய்கிறீர்கள் என்ருல், அதன் பொருள் என்ன ?
இத்தனை காலமாக நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை, நானும்
ஒன்றுமே செய்யாமல் இருக்கிறேன் என்பதுதானே ! கொஞ்சம்
ஆத்திரமும், அருவருப்பும் இருந்தாலும் பேச்சில் பொருத்தம்
இருக்க வேண்டும் என்பதை கனம் உறுப்பினர்கள் அறிந்திருக்க
வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு நேர்
மாருக, நான் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில், ஆட்சிப்
பொறுப்பில் இருந்த காங்கிரஸ்காரர்களையோ, தலைவர்களையோ
மதிக்க ஒரு துளியும் தவறியதில்லை. நண்பர் கருத்திருமன் இடத்
தில் அல்லது இன்னும் பொருத்தமாகச் சொல்லவேண்டும் என்ருல்,
திரு. பொன்னப்ப நாடார் உட்கார்ந்திருக்கிற இடத்தில் நான்
இருந்தேன். அன்று அரசாண்ட காங்கிரஸ் அமைச்சர்களை நான்
பாராட்டியிருக்கிறேன். அவற்றை நீங்கள் சட்ட மன்ற குறிப்பு
களைப் பார்த்தால், விரிவாகக் காணலாம். என்னுடைய மாநிலத்து
அமைச்சர்கள் திறமை மிக்கவர்கள், நிர்வாகம் செய்யத்
தெரிந்தவர்கள், என்றெல்லாம் நான் பாராட்டியிருக்கிறேன்.
அதற்குக் காரணம் என்னவென்ருல், நீங்கள் ஆளத் தகுதியுள்ளவர்
கள் என்பதை ஒப்புக்கொண்டு, என்னுடைய அரசியலை நடத்திக்
கொண்டு இருந்தேன். நீங்கள் 'நாங்கள் ஆளத் தகுதியற்றவர்கள்'
என்று மனதில் எண்ணத்தை வளர்த்துக் கொண்டு [illegible]
அதை மாற்றிக்கொள்ள கொஞ்சம் நாள் ஆகும். [illegible]
குற்றம் குறைகள் என்று வாதாடுகின்றவர்களுக்கு, நண்பர் கருத்
திருமன் எடுத்துச் சொன்னபடி, இன்னும் கொஞ்ச நாளாகும்
சரிப்பட்டுப் போய்விடும். ஆகையினுல், நான் எடுத்துக்கொண்ட
முயற்சிக்கு என்னைப் பாராட்டியவர்களுக்கு முதலிலே [illegible]
தெரிவிக்கிறேன். இதிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னவர்
முன்றலே குறிப்பிட்டுச் சொன்னபடி, இன்னும் கொஞ்ச [illegible]
பிடிக்கும், நீங்கள் வளர்ச்சி பெறவேண்டும் [illegible]



1967 ஜூலை 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

கிறேன் என்று கூறுகிறேன். என்ன இருந்தாலும், எதிர்ப்போம் என்று சொல்லக்கூடியவர்கள் யாராவது இருப்பார்களாஞல், 'வாழ்க உங்கள் வீரம்' என்று வாழ்த்துகிறேன். (சிரிப்பு).

இனி, நிதி நிலை அறிக்கையில் வரவேற்கத்தக்கவை இருக்கின்றன என்று பெரும்பாலான உறுப்பினர்கள், எந்தக் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, ஏற்றுக்கொண்டதற்கு, நான் மகிழ்ச்சி அடைகிறேன். தயக்கத்தோடுதான் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தேன். பழக்கம் இல்லை என்பது மட்டுமல்ல அதற்குக் காரணம்; ஏற்றுக்கொண்ட அரசும், அதனுடைய பொருளாதார நிலைகளும், நான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகளும், நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை எளிதாகத் தயாரிக்கும் சூழ்நிலையை நிச்சயமாகத் தரவில்லை. அதற்காகத்தான் இருக்கின்ற கடனைப்பற்றி குறிப்பிட்டோம். அதற்கு நண்பர்கள் வாதாடினுர்கள், 'அஸெட்ஸ் அண்ட் லயபிலிடிஸ்' பற்றி வாதாடினுர்கள். 400 கோடி ரூபாய்க்கு கடன் இருந்தால், 500 கோடி ரூபாய்க்கு சொத்து வாங்கியிருக்கிறேம் என்று. சொத்து எவ்வளவு இருக்கிறது என்கிற கணக்கைப் பார்த்தா கடன் வாங்கவேண்டும்? கடன் வாங்குகிறவர்கள் சொத்துக் கணக்கைப் பார்ப்பது சாதாரண வாழ்க்கை நியதியல்ல. அது மட்டுமல்ல, கடன் வாங்குகிறேம் என்ருல், கடனே கூடாது என்று விவாதித்தோம் என்ற வகையில் நண்பர்கள் சொன்ஞர்கள். அதிலேயும், வரியே போடக்கூடாது, போட மாட்டோம் என்று சொன்னேம் என்று அரைகுறை வார்த்தைகளை வைத்துக்கொண்டு பேசியிருப்பது போலத்தான். கடன் வாங்க வேண்டும் என்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் லெனின் அவர்களை சான்றுக்கு அழைத்தார்கள். லெனினை இவ்வளவு சாதாரண விஷயத்திற்கா சான்றுக்கு அழைக்க வேண்டும். அவரை மனதிற்கு சிக்கல் ஏற்படும் வேறு பல பிரச்சினைகளுக்கு சான்றுக்கு அழைக்கலாம். ஆகவே கடன் வாங்கலாமா, கூடாதா என்பதல்ல கேள்வி. எதற்காக வாங்குகிறேம் என்பதுதான் கேள்வி. ஒரு 500 ரூபாய் என்னுடைய நண்பர் கருத்திருமனிடத்தில் கடன் வாங்கி, நான் ஒரு பசுமாடு வாங்கி, பால் கறந்து, நானும் சாப்பிட்டு, மற்றவர்களுக்கும் விற்று, கடனை அடைத்தால், நண்பர் கருத்திருமனிடம் வாங்கிய கடனை கொடுக்கின்ற வாய்ப்பு கிடைக்கிறது. அப்படி வாங்கப்படும் கடன், வாங்கப்படவேண்டிய கடன். அப்படி வாங்கப்படும் கடன், முறையாகப் பெறும் கடன். அதற்கு பதிலாக எனக்கு வேண்டியவர் கருத்திருமன் என்று, ஒரு 500 ரூபாயைக் கடனாகக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, ஒரு அல்சேஷன் நாய் குட்டியை வாங்கினேன் என்ருல், அது வாங்கக்கூடிய கடன் அல்ல. அந்தக் கடனை வாங்கினுல், திருப்பிக் கொடுக்க முடியாது. எனக்கு பதில் சொல்லும் வாய்ப்பு இருந்தால், காங்கிரஸ் உறுப்பினர் சிலர் சொல்லலாம், அல்சேஷன் நாய், குட்டி போடாதா, விற்கக் கூடாதா, அதிலிருந்து லாபம் வராதா என்று சொல்லலாம். அவர்கள் அப்படியெல்லாம் கேட்கமாட்டார்கள் என்று நினைக்

கிறேன். கேட்பார்கள் என்றால், அதை அல்சேஷன் ஆண் நாய்க் குட்டி (ஆரவாரம்) என்று சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். ஆக, வாங்கப்படும் கடன், பயன்படுத்தப்படும் முறையில், நாம் அதிலிருந்து பெறக்கூடிய ஆதாயத்தைப் பொறுத்து, போட்ட பணத்தைத் திருப்பி எடுக்க வேண்டும் என்ற அந்த முறையில் செலவழிக்கப்பட்டதா என்பதைப் பார்த்துத்தான் கடனின் தன்மையைத் தீர்மானிக்க வேண்டும். 'கடன்காரர்', 'கடன்காரர்' என்றால், அதற்காக கடனே வாங்கக் கூடாது என்று சொல்கிறோம் என்று அர்த்தம் இல்லை. இன்றைக்கு உலக பாங்கி ஏற்படுத்தியிருப்பதன் நோக்கம், பல நாடுகளும் கடன் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான். கடன் என்பதைத் தமிழர் வாங்கும் பொருள்களுக்கு மட்டும் அன்றி, செய்ய வேண்டிய கடமைகளுக்கு 'கடன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கடனே கூடாது கடனே வாங்க மாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை. வாங்கிய கடன் குத்து மதிப்பாக 400 கோடி ரூபாய் என்றால், வருவாய் வரும் துறைகளில் செலவழிக்கப்பட்டிருப்பது கிட்டத் தட்ட 170 கோடி ரூபாய்தான். வாங்கியிருக்கிற பணத்தில் சரியான முறையில் வருவாய் கிடைத்திருக்கிறதா என்பதை ஒரு நிபுணர் குழுவை வைத்து ஆராயச் சொன்னாலும் நான் தயார். மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கியிருக்கிற கடனை மூன்று வகைகளாகப் பிரிக்க வேண்டும். ஒன்று, 'டிஸ்ட்ரெஸ் லோன்'—நமக்கு நலிவு ஏற்படும்போது வாங்கிய கடன். இரண்டாவது, 'அன்ரெம்யூனரேட்டிவ் லோன்'—பலன் கிட்டாத கடன்கள்; ஆனால் வாங்கியே தீரவேண்டும். இன்னொன்று, 'ரெம்யூனரேட்டிவ் லோன்'. அதாவது செலவழிக்கப்பட்டால், வருவாய் கிடைக்கும் கடன்கள். இந்த மூன்றில் அன்ரெம்யூனரேட்டிவ் லோன்களும், டிஸ்ட்ரெஸ் லோன்களும் பெரும் பகுதி என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அதில் சந்தேகம் வேண்டாம்—நேரம் இல்லாததால் அதிகமான புள்ளி விவரங்களைக் கொடுக்கவில்லை; என்னுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளலாம்—400 கோடி ரூபாய் கடன் வாங்கினால் அதில் பெரும்பகுதி வருவாய் தருகிற துறையில் பயன் படவில்லை. முக்கியமாக, மின்சாரத் துறைக்குச் செலவழிக்கப் பட்டது என்றால், எதிர்பார்த்த வருவாய் வரவில்லை. உலக பாங்கினர் இந்தக் கடன்களுக்கு எந்த அளவு வருவாய் வரவேண்டும் என்கிற கணக்குக் கொடுக்கிறார்களோ அந்த அளவு வருவாய் வர வில்லை—மின்சாரத் துறையில் பெற முடியவில்லை. இன்னொரு பகுதி—இர்ரிகேஷனுக்கு—நீர்பாசனத்திற்கு செலவழிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்தின் மூலம் கிடைத்தது என்னவென்றால், கிட்டத்தட்ட 3·5 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டக் கணக்கில் இருக்கிறது— வருவாய் வரவில்லை. அதற்காக 'மின்சாரமே வேண்டாமே, நீர்ப் பாசனமே வேண்டாமே' என்று சொல்ல முடியாது. [illegible] வேண்டும் என்றாலும், சில காரியங்களைச் [illegible] கருதிச் செய்ய வேண்டியிருக்கிறது. [illegible] பாசனமும் சமுதாயத்திற்கு நன்மை தரும் [illegible] [illegible] பெற்றக் கடன் [illegible]





இருக்கிறது. ஆகையினால்தான், கடன்பட்டிருக்கிறோம், கடன் பட்டிருக்கிறோம் என்று நாங்கள் வெளியிலேயும், வாய்ப்புக் கிடைக்கின்ற நேரத்தில் இங்கேயும் சுட்டிக்காட்டுகிறோம். அதனால் கடன் வாங்கக் கூடாது என்பதல்ல பொருள். வாங்கக்கூடிய கடன், சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் வருவாய் கிடைக்க வில்லை என்பதுதான் வாதம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், வாங்கியிருக்கும் கடனில், 100 கோடி ரூபாயை அல்லது 200 கோடி ரூபாயை லாபம் தரக்கூடிய துறையில் ஈடுபடுத்தி, நமக்கு வரி மூலமாக வருவாய் வருவதுபோல தொழில்கள் மூலம் கிடைக்குமானால், அப்படி வருவாய் வந்தால், வட்டி கட்டுவதைப் பற்றியோ, முதலையே திருப்பிக் கொடுப்பதைப்பற்றியோ சங்கடப் படத் தேவையில்லை. ஆகையால்தான் இந்தக் கடனுக்குச் செலுத்த வேண்டிய 16 கோடி ரூபாய் வட்டித் தொகையை இந்தத் தடவை தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரின், நிதியமைச்சரைக் கேட்டுக்கொண்டேன். நம்முடைய நண்பர்கள் மாரடோரியம் என்று அதைப் பயன்படுத்துகிறார்கள். அதே சமயத்தில் இங்கு, கடனைக் கொடுக்க மாட்டேனென்கிறாரே என்று கேட்கிறார்கள்.

மாரடோரியம் என்பது வேறு, கடன் ரைட் ஆப் என்பது வேறு. ரைட் ஆப் என்று கேட்டிருந்தால் கடன் வாங்கிவிட்டு அதைத் தள்ளிவிடு என்கிறாரே, அது என்ன நியாயம் என்று கேட்கலாம். வாதத்திற்காகக் கூறுகிறேன், அப்படிக் கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. இதே மன்றத்தில் விவசாயிகள் பட்ட கடன்களுக்கு அவர்கள் கொடுத்த வட்டி முதலுக்கு அதிகமாகிவிட்டால் கடனைத் தள்ளிவிடலாம் என்று கூறியிருக்கிறோம். அவ்வாறு நாமும் கேட்பதற்குக் காலமும் வரலாம். ஆனால் இந்தத் தடவை நான் சென்று கேட்டது மாரடோரியம் என்பதாக. நாங்கள் இப்பொழுது ரூபாய்க்கு ஒரு படி போடுவதிலே ஏற்படுகிற துண்டு, சிறிய நீர்ப்பாசன திட்டத்திற்கு வேண்டிய அதிகப் பணம் ஆகிய செலவுகள் இருப்பதால் நாங்கள் கட்ட வேண்டிய வட்டியை இந்த வருஷத்திற்குத் தள்ளிக் கொடுங்கள், ஒத்தி வையுங்கள் என்றுதான் கேட்டோம். அதை நம்முடைய நண்பர்களெல்லாம் சரியாகப் பரிசீலிக்காமல் கடனைத் தள்ளிவிடு என்கிறாரே என்று சொன்னார்கள். மொரார்ஜி தேசாயே இந்த அளவுக்குப் பேச வில்லை. அவர் தயக்கத்தோடு பேசினார். நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ அவர்கள் என்னுடைய கோரிக்கைக்கு இணங்கிவருகிற நிலைகூட ஏற்பட்டது. ஆனால், அந்த நேரத்திலே கெய்ரோ நகரத்தில் இஸ்ரேல் குண்டு வீசிய தந்தி வந்தது. அவரும் என்னுடைய கடைசி வாதத்திற்குப் பிறகு அந்தத் தந்தியைக் காட்டி இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்கள். இதிலிருந்து ஒன்று நான் தெரிந்து கொள்கிறேன். அண்மையில் உள்ளவர்களிடமிருந்து பெறக்கூடிய கருணையைவிட தூரத்திலுள்ளவர்களிடமிருந்து எளிதாகக் கருணை பெற முடியும் போல் இருக்கிறது. இதை நான் சொல்வதற்கு இன்னொரு

காரணமும் இருக்கிறது. நான் மத்திய சர்க்காருடன் மோதப் போகிறேன் என்று கஷ்டப்பட்டுக்கொண்டு பேசுகிறார்களே அதற்கும் போதுமான காரணம் இல்லை என்பதற்கு இதையே நான் ஒரு எடுத்துக்காட்டாக பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்க முன்வருகிறார்கள். ஆனால் இங்கே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசிய பேச்சையெல்லாம் காட்டுகிறார்கள். வேண்டாமென்று அவர்களே கூறுகிறார்களே, நீங்கள் கேட்கிறீர்களே என்று எடுத்துச் சொன்னார்கள். நல்லவேளையாக நம்முடைய முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் இந்தக் கோரிக்கை கவனிக்கத்தக்கது என்று சொன்னார்கள். அதை நான் அவர்களுக்கு நினைவுபடுத்தினேன். அப்படியா என்று ஆச்சரியப்பட்டார்கள். பத்திரிகைக் குறிப்பையே எடுத்துக்காட்டினேன். ஆம். பக்தவத்சலம்தான் சொல்லியிருக்கிறார், ஆச்சரியமாய் இருக்கிறதே என்று சொன்னார்கள். ஆகவே, அருள்கூர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய சர்க்காரிடமிருந்து இந்த மாநில சர்க்காருக்கு உரிமைகளைப் பெற்றுத்தர முயற்சியெடுக்கின்றபொழுது, நிதிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றபொழுது, தொழிற்சாலைகளை ஏற்படுத்தித்தர முயற்சிக்கின்றபொழுது, கட்சிக்கண்ணோட்டத்தை மறந்து நாட்டுக் கண்ணோட்டத்தோடு சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதை நடைமுறையில் செய்வதனால் சேலம், தூத்துக்குடி ஆகிய இரண்டு திட்டங்களை வலியுறுத்துவதற்காக 'எழுச்சி நாள்' கொண்டாடும்பொழுது காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று அறிக்கை விடக்கூடாது. நாங்கள் எழுச்சி பெறலாம் என்று கூறுகின்றபொழுது 20 வருஷம் அரசாண்டிருந்தவர்கள், ஆமாம் எழுச்சி பெறலாம், என்றுதான் சொல்லவேண்டும். ஆகையினால் இந்த சர்க்கார் இந்த முக்கியமான காரியத்திலே ஈடுபடுகின்றபொழுது ஒத்துழைப்பதற்கு அறிகுறியாக 23-ஆம் தேதியன்று, சேலம், தூத்துக்குடி ஆகிய திட்டங்கள் தமிழகத்திற்கு நிச்சயம் தேவை என்று திரு. கருத்திருமன் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் என்னுடைய வலது, இடது புறங்களிலே இருப்பார்களேயானால் அப்பொழுது நான் அவர்கள் எதிரிக்கட்சி அல்ல, எதிர்க்கட்சி என்பதை நிரூபிக்க முடியும். 23-க்கு அதிக நாள் இல்லை. 23-ஆம் தேதி வருகின்ற நேரத்திலே உங்களுடைய போக்கையும் நடவடிக்கையையும் தெரிந்து கொள்ளமுடியும்.

இப்பொழுது வாங்கப்பட்டிருக்கும் கடன்கள் சரியான வகையில் செலவழிக்கப்பட்டிருக்கின்றனவா என்பது பற்றி பைனான்ஸ் கமிட்டி அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளைப் படிப்பதற்கு நேரமில்லை. நான் படித்துக்காட்டித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நிலையில் நீங்கள் இல்லை. இப்பொழுது அவர்கள் 14 கோடி ரூபாய் வட்டியை ஒரு வருஷத்திற்கு மாரட்டோரியம் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டபடியால் இந்த





அரசின் அடுத்த நடவடிக்கை, வாங்கப்பட்ட கடன்களை ஆராய்ந்து பார்த்து, எந்தெந்தக் கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும், எந்தெந்தக் கடன்களுக்கு வட்டி இல்லாமலும், டிஸ்ட்ரஸ் லோனாகவும் பாவிக்கவேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டும். இவ்வாறு ஒரு திருப்பம் இருக்க வேண்டும். உதாரணமாக அணிகலத் தங்கக்கட்டுப்பாடு சட்டம் கொண்டுவந்தபொழுது அணிகலத் தொழிலாளர்கள் இங்கே அவதிப்பட்ட நேரத்தில் மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் எழுதிற்று. அணிகலத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு சில கோடி ரூபாய்களை, மூன்று கோடிக்கு மேலே என்று சொல்லுகிறார்கள், அவர்கள் கொடுத்தார்கள். அதை வாங்கி வேலையிழந்தவர்களுக்கு வேறு வேலை வாய்ப்பு தேடிக்கொள்வதற்கு இந்தச் சர்க்கார் முயற்சிகளை எடுத்துக் கொண்டது. மத்திய சர்க்கார் போட்ட சட்டத்தினாலேதான் இந்த நிலைமை ஏற்பட்டது. அந்தச் சட்டத்தை நாம் விரும்பவுமில்லை, கொண்டு வரவுமில்லை. அது தேவையற்றது என்றும் நாம் எடுத்துச் சொல்லி வந்தோம். நம்முடைய கோல்ட் கண்ட்ரோல் சட்டத்தைக்கொண்டு வந்து அணிகலத் தொழிலாளர்களுக்கு நலிவை ஏற்படுத்தி ராஜ்ய அரசு அதைத் தீர்ப்பதற்குக் கொடுத்த டிஸ்ட்ரஸ் லோனைக் கடன் என்று கொள்ள வேண்டுமா? நியாயமுள்ளவர்கள் என் எதிரிலே நிரம்பியிருக்கிறார்கள். அங்கு உள்ளவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்கலாம். நாங்கள் கழகத்தவர்களாக இருக்கலாம். ஆனால் அணிகலத் தொழிலாளர்களின் நலிவை நீக்குவதற்குக் கொடுத்த பணத்தைக் கடன் என்று எழுதி அதற்கு வட்டி வாங்க வேண்டுமா? தென்னார்க்காடு, இராமநாதபுரம், தஞ்சை, சற்று நாள் முன்னால் தொழிலாளர் … ஆகிய இடங்களிலே வீசிய புயலினால் … மாவட்டம் ஆகிய இடங்களிலே வீசிய புயலினால் … களுக்குப் பொருள் நஷ்டம் ஏற்பட்டது. அந்தப் புயல் நிவாரணத்திற்காகக் கொடுத்த தொகையை இரண்டு கோடி அல்லது மூன்று கோடி என்று நினைக்கிறேன். டிஸ்ட்ரஸ் லோன் என்று எழுதி அதற்காக நம்மிடத்தில் வட்டி வாங்க வேண்டுமா? புயலினால் ஏராளமான பொருள் நஷ்டம். பல உயிர்கள் கூடப் பறிக்கப்பட்டன. அதைச் சொல்லி, 'சைக்ளோன் ரிலீஃப்' வேண்டும் என்று கேட்டதற்கு, இரண்டு கோடி ரூபாயோ, மூன்று கோடி ரூபாயோ கொடுத்தார்கள். அதை 'டிஸ்ட்ரஸ் லோன்' என்றார்கள். 'டிஸ்ட்ரஸ்' என்று இருக்குமே தவிர, 'டிஸ்ட்ரஸ் லோன்' என்றால், நலிவுற்றவர்களுக்கான நலிவைத் துடைப்பதற்காக கொடுக்கின்ற உதவித் தொகையாகத்தான் அதைக் கருதியிருக்கவேண்டும். அதையும் கடனிலே எழுதி வைத்துக்கொண்டு, பெயர்தான் 'கடன்' (லோன்) என்று அதற்கும் அவர்கள் வட்டி வாங்க வேண்டுமா? நியாயம் என்று இதிலிருந்து ஏதாவது ஒருவாய் ஒருவதாகச் சொல்லுகிறீர்களா? சொல்லுகிறீர்களா? இல்லையே! பி.ப. 1-00

இன்னும் நீங்கள் தள்ளிப் போவீர்களானால், ஆந்திராவும் தமிழ்நாடும் ஒன்றாக இருந்த நேரத்திலே, 'காம்பொஸிட் மெட்ராஸ் ஸ்டேட்' என்ற நிலையில் இருந்த நேரத்திலே, புயல் நிவாரணத்

திற்காகக் கொடுத்த பணம், ஆந்திரமும் தமிழகமும் வேறு வேறாகப் பிரிந்தவுடன் நம்முடைய பங்குக்கு வந்திருப்பது கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் ஆகும். அதற்கு இதுவரையில் வட்டி மட்டும்—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—ஐந்து கோடி ரூபாய் கட்டியிருக்கிறோம் என்று கருதுகிறேன். அந்தக் கடன் நமக்குத் திருப்பியா வரும்? புயல் அடித்ததனால் செலவழித்தோமே, பணம், அந்தப் பணத்தைத் திருப்பியா பெறப் போகிறோம்? ஆனால் அந்தப் பணத்தைக் கடனுக்கு வரவு வைத்து, அதற்கு வட்டி கட்டச் சொல்லுகிறார்கள். நியாயம் என்று சொல்லுகிறீர்களா? காங்கிரசிலே இருங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், நியாயத்தை விட்டுவிட்டா, காங்கிரசிலே இருப்பது? காங்கிரசிலே இருந்துகொண்டா நியாயத்தை மறுப்பது? நியாயத்தின் அடிப்படையில்தானே காங்கிரஸ் அமைந்திருக்கிறது? அப்படித்தானே நீங்கள் சொல்லுகிறீர்கள்? நாங்களும் நம்பு கிறோம்? அப்படியிருக்கிறபோது, 13 கோடி ரூபாய், எப்போதோ புயல் அடித்த நேரத்தில் தரப்பட்டதே. அதைக் கூட இந்த நிமிடம் வரை தள்ளுபடி செய்யவில்லை. அதற்கும் வட்டி கட்டிக் கொண்டு வருகிறோம்.

நம்முடைய குந்தா மின்சாரத் திட்டத்திற்கென்று கனடா நாட்டவர்கள் இலவசமாகச் சில கருவிகளைத் தந்திருக்கிறார்கள். நெடுந்தொலைவில் இருப்பதாலே அவர்களுக்கு நம்மிடத்திலே கொஞ்சம் கருணை இருந்திருக்கிறது. மத்திய சர்க்கார் செய்த தெல்லாம், கனடா நாட்டுக்காரர்கள் கொடுக்கிற இயந்திரத்தை நாம் பெற்றுக்கொள்ளுவதற்கு அனுமதித்தது. அந்த இயந்திரத் தினுடைய மதிப்பு கிட்டத்தட்ட ஒன்பதுகோடி ரூபாய்—இனமாக நமக்குக் கனடா கொடுத்தது—அந்த ஒன்பது கோடி ரூபாயும் கடனாக எழுதப்பட்டு அதற்கும் நாம் வட்டி கொடுத்துக்கொண்டு வருகிறோம். தேவை என்கிறீர்களா? நியாயந்தான் என்கிறீர் களா? நிச்சயம் சொல்லமாட்டீர்கள்.

இன்னும் அதைப்போன்ற விவரங்கள் நிரம்ப இருக்கின்றன. ஏற்கனவே பல பேருடைய பேச்சைக் கேட்டுக் களைத்திருக்கிற இந்த மன்றத்தை வேறு பல புள்ளி விவரங்களைக் கொடுத்து மேலும் களைப்படையச் செய்ய விரும்பவில்லை.

இந்த அடிப்படையில்தான் நிதிக் கமிஷன் கூட, இந்தக் கடன் களில் தள்ளுபடி செய்யவேண்டியதையெல்லாம் தள்ளுபடி செய்து, பலவற்றை ஒன்றாக இணைத்து, ஒரு 'கன்சாலிடேடெட் பண்டு' என்று ஆக்கி, அதற்கு ஒரு தவணை கொடுத்து, வட்டி விகிதத்தைக் குறைத்து, கொஞ்சம் பளுவைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் 4½ சத விதம் வரையில் சில இனங் களில் வட்டி கொடுக்கிறோம், மத்திய சர்க்காருக்கு. சில இனங் களில் 5 சத விதம் வட்டி கொடுக்கிறோம். சில இனங்களில் 3 சத விதம் வட்டி கொடுக்கிறோம். சில இனங்களில் 6 சத விதம் வட்டி



கொடுக்கிறோம். இப்படி வட்டி விதம் மாறி மாறி இருக்கிறது. இவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்திச் செய்யவேண்டும் என்று நிதிக் கமிஷன் சொல்லுகிறது.

நான் அதற்கும் ஒரு படி முன்னாலே போய், முன்னாலே நாம் இந்த விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ததைப் போலத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பேன். கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் சேர்ந்து மத்திய சர்க்காருக்கு ஐயாயிரம் கோடி ரூபாய் வரையில் கடன் தரவேண்டியிருக்கிறது. நிரம்ப வட்டியை கட்டிக்கொண்டு வருகிறோம். நான் குறிப்பிட்டபடி, அவர்களும் கூட இப்படிப் பல்வேறு வகையான முறையில், வருவாய் வர முடியாத வகையில்தான் அந்தக் கடனை வைத்திருக்கக்கூடும். அதைப்பற்றி முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. ஐயாயிரம் கோடி ரூபாய்க் கடன் தொகையில் குறைந்தது 50 சத விதம், அதாவது 2,500 கோடி ரூபாய்க் கடனை உடனடியாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மத்திய சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளு வதற்கு உங்களுடைய மேன்மையான ஒத்துழைப்பை நாடுகிறேன். இது கழகம் சொல்லுகிற விவரம் என்று உங்களுக்கு யாருக்காவது அருவருப்பு இருக்குமானால், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த வரும், உங்களுடைய கட்சியினாலேயே இந்த நிதிக் கமிஷனிலே ஒரு முறை அமர்த்தப்பட்டவரும், ஒரு மாநிலத்திற்குக் கவர்னராக இருந்தவரும், பல முறை பண்டித ஜவஹர்லால் நேருவோடு சிறைச் சாலைக்குச் சென்றவரும், தெளிவான அரசியல் கண்ணோட்டம் உடையவருமான திரு. சந்தானம் அவர்கள், ஐயாயிரம் கோடி ரூபாய்க் கடனை 2,500 கோடி ரூபாயாகக் குறைக்கவேண்டும் என்று இன்றல்ல, சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், கழகத்திலிருந்து வருகிற கோரிக்கை என்று பார்க்கக்கூடாது. வேண்டுமானால் உங்களுக்குச் சந்தோஷம் கூட வரலாம். திருப்பித் திருப்பி அண்ணாதுரை நாங்கள் சொன்னதைத்தான் சொல்லுகிறார் என்று சந்தோஷப் படுங்கள். நீங்கள் சந்தோஷப்படுகிறபோது, உண்மையிலேயே சொல்லுகிறேன்—எனக்கும் உங்களைப் பார்த்து எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? சந்தோஷப்படுங்கள். ஆனால், இந்தக் காரியத்திலே குறுக்கிட்டு நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைக் கெடுக்காதீர்கள் என்று மட்டும் உங்களை நான் பணி வோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னும் ஒன்று. "நாங்கள் தொழிலை வளர்த்திருக்கிறோம், நீங்கள் தொழிலை வளர்க்க ஒன்றுமே செய்யவில்லை" என்று சொன்னார்கள். "நாங்கள் தொழிலை வளர்த்திருக்கிறோம்" என்று மத்திய சர்க்காரையும் இணைத்துச் சொன்னார்கள். நம்முடைய நண்பர் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னபடி அதில் பொருத்தம் இருக்கிறது. அவர்கள் சொன்னதைச் சொன்னால், திருச்சியிலே இல்லையா? நெய்வேலி தன்: பொம்பூரிலே இல்லையா?

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூன் 27

யிலே இல்லையா? என்றெல்லாம் சொன்னார்கள். நான் கூட
சொன்னதுண்டு. பல கூட்டங்களில், ஒரு பெரிய
பணியாற்றுபவன் வீட்டுக்கு வந்து சொன்னானாம். "ஆறு வெள்ளி
தம்ளரைத் துடைத்து வைத்தேன், எட்டு இரத்தின ஜமக்காளங்களை
மடித்து வைத்தேன், மூன்று இரும்புப் பெட்டியைத் தூக்கி
வைத்தேன்" என்று. "யாருடையது?" என்றால், "எஜமான
ருடையது" என்றானாம். அதைப்போல, பெரம்பூரில் இல்லையா?
நெய்வேலியில் இல்லையா? என்று சொல்லலாம். எங்களுக்குத்
தெரிந்தவரை, அதெல்லாம் எஜமான் வீட்டு இரும்புப் பெட்டியாக
தெரிகிறதே தவிர, நம்முடைய வீட்டுச் சாதாரணப் பெட்டியாகத்
தெரியவில்லை (ஆரவாரம்).

தொழில்களை வளர்த்திருக்கிறோம் என்றால் இந்த மாநில
அரசுத் துறையில் நாம் வளர்த்திருக்கிற தொழில்கள் என்ன?
எவ்வளவு? சிறு கைத்தொழிலை வளர்த்திருக்கிறோம். கூடை
முடைகிறோம். பாய் முடைகிறோம். கேலிக்குச் சொல்லவில்லை.
பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்தது. அதை
'இல்லை' என்று சொல்லவில்லை. ஆனால் நிரம்ப வருவாய் தரத்தக்க
தொழில், ஸ்டேட் செக்டாரில், நம்முடைய மாநில அரசுத்
துறையில் இல்லை. முன்னாலே இருந்ததெல்லாம், தனிப்பட்டவர்கள்
ஆரம்பிக்கின்ற தொழில்களுக்குச் சர்க்கார் ஊக்கம் கொடுத்தி
ருக்கிறார்கள். சர்க்கார் பணம் கொடுத்திருக்கிறார்கள்.
அதைத்தான் நம்முடைய நண்பர் திரு. பூவராகன்
அவர்கள் சொன்னார்கள். நான் அவருடைய பேச்சை அன்றைய
தினம்தான் கேட்டேன். அதற்கு முன்னாலே கேட்கின்ற வாய்ப்பு
எனக்குக் கிடைத்ததில்லை. பல காங்கிரஸ்காரர்கள் என்னோடு
பழகினவர்கள் உண்டு. ஆனால், திரு. பூவராகன் அவர்கள் சற்று
கூச்சப்படுபவர் போலிருக்கிறது. என்னோடு அவர்கள் முன்னால்
பழகியதே இல்லை. ஆகையால், அவருடைய பேச்சை அன்றைய
தினம் நான் ஒரு துளியும் குறுக்கீடு இல்லாமல் கேட்டதற்குக்
காரணம், அவருடைய மனப்போக்கு எப்படித்தான் இருக்கிறது
என்பதையும் முழுவதும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று, மெத்த
அக்கறையோடு கவனித்தேன். அவர்கள் சொன்னார்கள்—"அம்பத்
தூரில் சைக்கிள் கம்பெனி இருக்கிறதே, மூன்று லட்சம் சைக்கிள்
கள் தயாராகிறதே, தெரியுமா?" என்று சொன்னார்கள். உண்மை
யிலேயே தெரியும், அங்கே மூன்று லட்சம் சைக்கிள்கள் தயாரா
கின்றன. இது அவர்கள் சொல்வதல்ல. கனம் சுப்பிரமணியம்
அவர்கள் வருஷத்திற்கு வருஷம் நிதி நிலை அறிக்கையில் படிப்
பார்கள் "ஒரு லட்சம் சைக்கிள்கள் தயாரிக்கப்பட்டு வந்த
அம்பத்தூர் தொழிற்சாலையில் இந்த ஆண்டு 1,40,000 சைக்கிள்கள்
தயாரிக்கப்பட்டிருப்பதை அறிந்து இந்த மன்றம் மகிழ்ச்சி
அடையும் என்று கருதுகிறேன்" என்று மகிழ்ச்சி அடைகிறோம்.
இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், இவைகளெல்லாம்
தொழில் வாய்ப்பு கொடுக்கின்ற வகையில் வரவேற்கத்தக்கது. பல
ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கிறது விரும்பத்



1967 ஜூன் 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

தக்கது. ஆனால், இவைகளெல்லாம் ஸ்டேட் செக்டார் அல்ல; சர்க்காருக்கு வருமானம் தரத்தக்க துறைகள் அல்ல. ஆகவே, ஏற்கனவே இருந்த அரசு எப்படி ஸ்டேட் செக்டாரிலே தொழில்களை ஆரம்பிக்கவில்லையோ அதைப் போல நாங்களும் இப்பொழுது ஆரம்பிக்கவில்லை. அப்படித்தானா? நீங்கள் ஆரம்பிக்கமாட்டீர்களா என்றால், நூறு நாட்களுக்குள் நாங்கள் அதை ஆரம்பிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்றுதான் சொல்லவேண்டும். அப்படியானால், நீங்கள் ஒன்றுமே செய்யவில்லையா என்றால், நீங்கள் செய்யலாமா, வேண்டாமா என்று தயக்கப்பட்டுக் கொண்டிருந்த, ரஷ்ய நாட்டினுடைய கூட்டுறவோடு, அரக்கோணத்தில் ஆரம்பிக்க இருக்கிற வார்ப்படத் தொழிற்சாலைக்குப் பத்து நாட்களுக்கு முன்பாக கையொப்பமாகி சர்க்கார்த் துறையிலே துவக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சரி. நாங்கள் ஆரம்பித்ததைப்போல், தனிப்பட்ட முதலாளிகளுடைய தொழிலையெல்லாம் நீங்கள் ஆரம்பித்தீர்களா என்றால், அது, இரண்டு நாட்களுக்கு முன்னால், முன்னாள் தொழிலமைச்சர், இந்நாள் தொழிலமைச்சர் இரண்டு பேரும் ஒரு கலியாண வீட்டுக்கு விருந்துக்குப் போய் வருவதைப் போல ஒரு தொழிற்சாலைக்குப் போய் வந்தார்கள். கலியாண வீடு என்றால், எல்லோரும் சந்தோஷமாக இருப்பார்கள். அப்படி எல்லோருமே சந்தோஷமாக இருந்தார்கள். அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்த முதலாளியும் சந்தோஷப்பட்டார். இப்படிச் சில முதலாளிகள் கிடைத்திருக்கிறார்களே என்று இன்னாள் தொழில் அமைச்சர் சந்தோஷப்பட்டார். அந்நாள் தொழிலமைச்சரும், ஆகா! அந்தக் காரியம் அப்படி நடக்கிறதே என்று சந்தோஷப் பட்டார். நான் கூடப் பத்திரிகையிலே பார்த்து, ஒரு புதிய தொழிற்சாலை வருகிறது என்று சந்தோஷப்பட்டேன். ஆக, ஒன்றும் நடக்காமல் போகவில்லை.

அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால், மேட்டூரிலே ப்ளாஸ்டிக் தொழிற்சாலையைத் துவக்கி வைக்கிற காரியத்திற்கு நானே போயிருந்தேன். அதற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, டாடா கம்பெனியால் ஆரம்பிக்கின்ற பெஸ்டிஸைட்ஸ் தொழிற்சாலையின் துவக்க விழாவிற்கும் நானே போயிருந்தேன். அதைப் போலவே, இண்டியா பிஸ்டன்ஸ் கம்பெனி தொழிற்சாலை விரிவுப்படுத்துகிற விழாவிற்கும் நான் போயிருந்தேன். அவற்றையெல்லாம் நான் இதிலே குறிப்பிடாததற்கு காரணம், இவைகளெல்லாம் ஸ்டேட் செக்டாரிலே இல்லையே என்பதனால்தான் அடக்கத்தோடு அதை நாங்கள் குறிப்பிடவில்லை. நீங்கள் கடையிலே உள்ள எல்லாச் சரக்குகளையும் குறிப்பிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருப்பீர்களானால், அதை ஒரு வரி எழுதிவிட்டிருந்தால் ஒன்றும் தவறு இருந்திருக்க முடியாது. ஆகையால், தொழில் துறையிலே

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூன்

ஏனென்றால், வகுப்புவாதிகள் என்று தூற்றப்பட்ட நாங்
வகுப்புகளைக் கவனிக்காமல், ஏழ்மையை மட்டும் கவனி
எல்லா வகுப்பாரையும் கவனித்து, வருவாய் 1,500 ரூபாய்
வர்களுக்கு இலவசக் கல்வி என்று சொன்னோம், இதை எங்களி
லிருந்து யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வகு
வாதிகள் என்று தூற்றிய காரணத்தால் இதை எதிர்பார்த்திரு
முடியாது. இதுதான் புதுமை. இதுதான் புரட்சி. புர
என்றால், நம்முடைய நண்பர்கள் ஜூலை மாதம் 6-ம் தே
ஆரம்பித்து, ஆகஸ்டு மாதம் 27-ம் தேதிவரையில் காலம் போ
நடக்கும் என்று கருதுகிறார்கள். புரட்சி என்பது வெடி
எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. நடந்து முடி
பிறகு எழுதப்பட்ட வரலாறுதான் புரட்சி. பொரும்பா
வரலாறு அதில் சம்பந்தப்படாதவர்கள் எழுதிய வரலாறுதா
இவைகள் எல்லாம் புரட்சி இல்லையென்றா கருதுகிறீர்கள்? புர
என்பதற்காக, நாங்கள் வரவு செலவுத் திட்டத்தை மன்றத்
வைக்கப்போவது இல்லை, ரேடியோவிலே படிக்கப்போகி
என்றால் பெரிய புரட்சியாக இருக்கிறதென்று சொல்லலாம்.
செலவுத் திட்டத்தை அச்சடித்துக் கொடுக்காமல், நிலவரி இ
இவ்வளவு விற்பனை வரியில் வரவு, இவ்வளவு செலவு இவ்வ
துண்டு, போய் வருகிறீர்களா என்று சொன்னால் அதுவும்
புரட்சிதான். அப்படிப்பட்ட புரட்சியை என்னிடத்தில்
பார்க்கமாட்டீர்கள். இது நாட்டு மக்களுடைய பிரச்சினை.
கோடி மக்களுடைய வாழ்வும், தாழ்வும் இந்த 64 பக்
அடங்கியிருக்கிறது. நம்முடைய இதயமும் அதிலே கலக்
டிருக்கிறது. நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் லட்சிய
இதில் அடங்கியிருக்கின்றன. ஆகையாலே புதுமை, பு
என்பதைவிட, பொறுப்பு, அடக்கம் என்பவைகள் அதிகம் இரு
வேண்டுமென்று நான் கருதினேன். நல்லோர்கள் இதுதான் நியா
என்று ஏற்றுக் கொள்வார்கள். நண்பர்கள் கூட இத
நியாயம் என்று ஏற்றுக்கொள்வார்கள். அவர்களுக்கு இரு
சங்கடம் எல்லாம், ஒரேயடியாக கோயம்புத்தூர் பாஷை
'செம அடி' கொடுப்பதற்கு இதில் இடம் இல்லையே என்பதுதா

ஏதாவது குறை கண்டுபிடித்து, "ஆ.பிடி,பிடி, இத
என்று கூறும் நிலை வைக்கவில்லையே என்று சங்கடப்ப
நான் உணருகின்றேன். வரி போடுவதை இவர்கள்
கண்டிக்கமுடியும்? மேலே திரு. மொரார்ஜி தேசாய் அ
வரி போட்டிருக்கிறார்கள். பல்லைக்கடித்துக்கொண்டு
பார்த்து எப்படிக் கண்டிக்க முடியும்? இப்போது விற்பனை
போடுகிறீர்களே என்று கேட்க முடியும். நா
கிரோசின், டீ, காப்பி போன்ற ஏழை மக்களுக்கான பொரு
மீது வரி இருக்க வேண்டாமென்று கருதினேன். மொ
தேசாய் அவர்கள் அப்படிக் கருதவில்லையே? 'டீ'க்கா வரி
கேட்கும்போது 'டீ' குடிக்காதே என்கிறார். 'சிகரெட்



1967 ஜூன் 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

வரி' என்று கேட்டால் 'சிகரெட் பிடிக்காதே, பீடி பிடி.' என்கிறார். அந்தப் பாடத்தை மற்ற நிதியமைச்சர்களும் எடுத்துக்கொள்வார்கள். நாங்கள் அப்படி இல்லை. உங்களுக்கு இருக்கிற ஒரு கஷ்டத்தை நான் உணருகிறேன். ஒரு இடத்திலே நீங்கள் ஆளும் கட்சி; இன்னொரு இடத்திலே நீங்கள் எதிர்க்கட்சி. முழுவதும் எதிர்க்கட்சி என்ற முறையில் இருந்தால், உங்களுடைய பேச்சிலே இன்னும் சற்று விறுவிறுப்பு இருந்திருக்கும். முழுவதும் ஆளும் கட்சியாக இருந்திருந்தால் அதிக கம்பீரம் இருந்திருக்கும். அப்படி இருக்க முடியாத காரணத்தினால் வரி போடுவது தவறு, தவறு என்கிறபோது இந்தப்பக்கத்தில் உள்ளவர்ககள் திரு. மொரார்ஜி தேசாய் போட்டிருக்கிறாரே என்று சுட்டிக்காட்டினால் என்ன செய்வது என்கிற தயக்கத்தோடுதான் பேசுகிறீர்கள். கனம் விநாயகம் அவர்களாக இருந்திருந்தால் 'That is another matter' என்று சொல்லித் தட்டிக் கழித்திருப்பார். நண்பர் கருத்திருமன் அவர்கள் இன்னும் கொஞ்சம் பண்பாட்டுடன் "தவறு எங்கு நடந்தாலும் நான் கண்டிக்கிறேன். கண்டிக்கத் தயங்க மாட்டேன்" என்பதாகப் பேசிப் போயிருப்பார். எங்கே கண்டிப்பார்? இங்கேதான்! அங்கே உள்ளவர்கள் இவர்களுடைய நண்பர்களாயிற்றே. ஆகையால் இன்றைக்கு எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்களுடைய சங்கடத்தை நான் உணர்கிறேன். அவர்களும் எதிர்க்கட்சிக்குப் புதியவர்கள். நாங்களும் ஆளும் கட்சிக்குப் புதியவர்கள். நாங்கள் ஆளும் கட்சியிலேயே இருப்பதால் ஒரேவிதமான கொள்கையுடன் நடந்துகொண்டுவிட முடியும். ஆனால் நீங்களோ இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிறீர்கள். டெல்லியில் ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள். அதன் காரணமாக பேச்சில் முரண்பாடு ஏற்படுகிறது. காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த ஒரு நண்பர் வெளியே பேசுகின்றபோது, "இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் ஒரே ஒரு படைதான் இருக்கிறது. போலீஸ்படை... ஆனால் எங்களிடமோ முப்படைகள் இருக்கின்றன. தரைப்படை, கடற்படை, விமானப்படை" என்று பேசினார். நான் அவரது வாதத்தைப் புரிந்துகொள்ள முடியும். கடந்த இருபது ஆண்டுகளாக எல்லாவிதமான பொறுப்புக்களையும் வைத்திருந்துவிட்டு, இன்றைக்கு ஒன்றுமே இல்லை என்கிறபோது இப்படிப்பேசிக் கொள்கிற மனோபாவம் ஏற்படும். "நான்தான் பில் கலெக்டரே தவிர, என் அண்ணன் சப் கலெக்டர்" என்று சொல்லிக்கொள்கிற பெருமையைப்போன்று, "இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிறோமே தவிர, டெல்லியிலே நாங்கள் ஆளும் கட்சி" என்று சொல்லிக் கொள்ளலாம். நான் ஒன்றைச் சொல்வதற்கு வருத்தப்படக் கூடாது. அங்கேயும் கூட நிலைமை சரியாக இல்லை. அதைத் தெரிந்து கொள்ளவேண்டும். மத்திய சர்க்காரில் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறதே தவிர, முன்பு நண்பர் கருத்திருமன் அங்கே இருந்தபோது அவர்களுக்கு இருந்த பலம் இன்றைக்கு இல்லை. எதிர்க்கட்சிகளுக்கும் ஆளும் கட்சிக்கும் உள்ள இடை

வெளியில் 50 பேர்களே தான் இருக்கிறார்கள். 50 ஓட்டு வித்தியாசத்தில்தான் இன்றைக்கு மத்திய சர்க்கார் இருக்கிறது. யாராவது ஒருவருக்குத் துணை அமைச்சர் பதவி கிடைக்காத சோகநிலை வந்தால்—வரவேண்டாம்—வந்தால் தான் கேட்ட ஒன்றைச் செய்யத் தவறினால் இந்த 50 என்ற அளவு எவ்வளவு வேகமாகக் குறையும், எப்படி எப்படி மாறும் என்பதை ராஜஸ்தானிலும், பஞ்சாபிலும் வேறு மாநிலங்களிலும் சொக்கட்டான் காய்கள் மாறி உட்காருவதைப்போல உறுப்பினர்கள் உட்கார்ந்த நிலைபார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அரசியல் ஆய்வாளர்கள், பிரதம மந்திரி இந்திரா காந்தியைப் போன்ற சிறந்த ராஜதந்திரியினால் தான் இன்றுள்ள மத்திய சர்க்காரின் நிலை நீடிக்கலாமே தவிர, இல்லையென்றால் ஓராண்டு காலத்திற்குள் இந்த நிலை சரிந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். என் சொந்த விருப்பம் அங்குள்ள நிலை மாற்றப்படக்கூடாது என்று கருதுகிறேன். அதைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று எதுவும் சொல்லவில்லை. காரணம் நாங்கள் அங்குள்ளவர்களை மதித்து அரசியலில் நுழைந்திருக்கிறோம். நீங்கள் எங்களை மதிக்காமல் அரசியலில் நுழைந்தவர்கள். அதனால்தான் மத்தியில் நீங்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் உங்கள் நிலைமை என்ன என்பதை உணரவேண்டுகிறேன். முன்னால் பாராளுமன்றத்திலே நீங்கள் ஒரு மோஷனைக் கொண்டு வந்து 'I move this' என்று சொன்னால் 'Carried' என்று எதிரொலிக்கிற அளவுக்கு வலிவு இருந்தது. ஆனால் இன்றைக்கு This is not the time to move it என்ற அளவில் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பே விதிமுறைகளை விவாதிப்பதில் 2 மணி ஆகிறது. ஆக அங்கும் சங்கடமான நிலைமை தான் இருக்கிறது. நான் அனுதாபப்படுகிறேன். பரிவு காட்டுகிறேன். கொஞ்சம் அதிகமான விவரம் இல்லாதவர்கள் 'எங்களிடம் முப்படை இருக்கிறது' என்று பேசிவிடலாம். இன்றைக்கு அவர்களிடம் என்ன என்ன படைகள் எல்லாம் வந்திருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும்.

உண்மையைச் சொல்லப் போனால் நான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு குறுக்கிடத் தயாராய் இல்லை. இந்த அரசு மத்திய அரசோடு மோதிக்கொண்டே தீரவேண்டுமென்ற எண்ணத்தில் இல்லவே இல்லை. சிலர் ரொம்ப ஆராய்ந்து உண்மையைக் கண்டு விட்டவர்கள் போலப் பேசுகிறார்கள். முன்னாலே நாங்கள் கேட்டுக் கொண்டு வந்த திராவிட நாட்டைத்தான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு போராடி பெற்றுவிட சுற்றிவளைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது தவறு. நான் திராவிட நாட்டு கோரிக்கையை விட்டு விட்டேன். ஆனால் திராவிடநாடு கேட்பதற்கு என்ன என்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதில் ஒளிவுமறைவு இல்லை. அதைச் சொல்லிக்கொள்வதற்கு வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. திராவிடநாடு என்று தனியாக இருந்தால் நாம் தொழில்



வளர்ச்சி பெற முடியும் என்று சொன்னோம். அன்றைக்கு இந்த மன்றத்தில் இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையை எதிர்த்தார்கள். ஆயினும் என்ன சொன்னார்கள். சேர்ந்து இருப்பதனால்தான் தொழில்கள் வளரும். ஒன்றாக இருந்து தொழில் துறையில் வளர்ச்சி காண்போம், பத்து வருடங்கள் கழித்துப் பார்க்கிறபோதும் தொழில் துறையில் வளர்ச்சி அடையாது இருந்தால் நிச்சயமாக நானே அவர்களோடு சேர்ந்து திராவிட நாடு தனித்திருக்கவேண்டுமென்று கேட்கிறேன்' என்று சொன்னார்கள். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே இங்கே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும். பிராந்திய சமநிலை ஏற்படுவதற்குப் புதுப் புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுதான். அதை நாங்கள் விட்டு விடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம். அதைவிட்டுவிடவில்லை. மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக்கூடாது என்பதற்காகக் கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களைப் பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விடவில்லை. ஆகவே திராவிட நாடு நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அவை நியாயமான காரணங்கள், மனமார்ந்து ஏற்றுக்கொண்ட காரணங்கள். நாங்கள் திராவிட நாட்டைவிட்டுவிட்டோம்.

"திராவிட நாட்டைத் தான் விட்டுவிட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள்?" என்று கேட்டால் ஒத்துக்கொள்ள முடியுமா? இந்தி எதிர்ப்பை விட்டுவிடமாட்டோம். திராவிட நாட்டை விட்டு விட்டதால் "எங்களுக்குச் சேலம் இரும்பாலை வேண்டாம், ஜாம்ஷெட்பூரிலேயே வையுங்கள்" என்று சொல்லிவிடுவோமா? நிச்சயமாகச் சொல்லமாட்டோம். "தூத்துக்குடி வேண்டாம், இன்னொரு கண்டலா கட்டுங்கள்" என்று சொல்வோமா? நிச்சயமாகச் சொல்லமாட்டோம். திராவிடநாடு கிடைத்தால் என்ன என்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும் இந்திய யூனியனின் உள்ளே இருந்தே பெறலாம், பெறவேண்டும், பெற முடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர, திராவிட நாட்டுக்கான காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டு விடவில்லை. மாமியார் வீட்டை விட்டுவிட்டான் என்றால் மனைவியை உடன் அழைத்துச் சென்றுவிட்டான், அல்லது வியாழக்கிழமை வா என்று மனைவிக்குச் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான் என்பதுதானே தவிர, மனைவியையே விட்டுவிட்டான் என்பது அல்ல. நாடு பிளவுபடக்கூடாது என்றார்கள், ஒத்துக் கொண்டோம். தனித்திருந்தால் அந்நியத் தலையீடு ஏற்படும் என்றார்கள், உணர்கிறோம். திராவிடநாட்டைப் பெறுகின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை உள்ளே இருந்தே

பெறலாம் என்றார்கள், அதை நம்புகிறோம். திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள் சேலம் என்றும், தூத்துக்குடி என்றும் பிரதேச மனப்பான்மை காட்டாதீர்கள் என்றால், நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம். திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள் இந்தி படித்தால்தான் என்ன என்றால், நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம். ஆந்திரப் பண்பாடு, கன்னடப் பண்பாடு, வடவர் பண்பாடு, தமிழர் பண்பாடு என்றெல்லாம் பிரித்துப் பிரித்துப் பேசலாமா என்றால் நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம். திராவிட நாடு எதற்காக வேண்டுமென்றோமோ அதற்கான காரணங்கள் ஒன்றையும் விட்டு விடவில்லை. அப்படியே வைத்திருக்கிறோம். திராவிட நாடு பிரிந்துபோகவேண்டுமென்ற அளவில் நான் சொல்லவில்லை.

இந்த மன்றத்தின் மூலமாகப் பொதுமக்களுக்கும், பொதுமக்களுக்கு மட்டும் அல்லாமல், மத்திய சர்க்காருக்கும் தெளிவு படுத்த விரும்புகிறேன். திராவிட நாட்டை விட்டுவிட்டோம் என்றதாலே காரணங்களையும் விட்டுவிட்டோம் என்பது பொருள் அல்ல. அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன. மத்திய சர்க்காரோடு போராடவில்லை. நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டுமென்பதற்கு வாதாடுகிறேன். இந்தியஅரசியல் சட்டம் எழுதப்பட்ட நேரம் வெள்ளைக்காரன் கொடி இறக்கப்பட்டு, மூவர்ணக்கொடி ஏற்றப் பட்ட மகிழ்ச்சி வெள்ளத்தில் இருந்த நேரம். பதினைந்து வருடத்திற்கு, இருபது வருடத்திற்குப் பிறகு என்ன நிலை ஏற்படக்கூடும் என்பதை யோசித்துப்பார்த்திருக்க முடியாது. நிதி மந்திரியாக இருந்த திரு. டி. டி. கே. அவர்கள் அரசியல் சட்டத்திலேயே பிரிவுகளைப் பற்றிய ரெவ்யூ சிற்சில ஆண்டுகள் கழித்து மறு பரிசீலனை செய்யப் படவேண்டும் என்கிற விதி அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இணைக்கப்பட்டிருக்கவேண்டுமென்று பேசினார்கள். ஆகவே அரசியல் சட்டம் இந்த இருபது வருட அனுபவத்தின் காரணமாக எந்த எந்த வகையில் திருத்தப்பட வேண்டும், எந்த எந்த வகையில் மாற்றப்படவேண்டுமென்பதை எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற் பகல் 1-30 அதிலே நமக்கும் மத்திய சர்க்காருக்கும் பினான்ஷியல் ரிலேஷன்ஷிப், அட்மினிஸ்டிரேட்டிவ் ரிலேஷன்ஷிப், கன்சல்டேட்டிவ் ரிலேஷன்ஷிப் என்று மூன்று வகையான தொடர்புகள் இருக்கலாம். ஆனால் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் பினான்ஷியல் ரிலேஷன்ஷிப்பைப்பற்றிமட்டும்தான் குறிப்பிடுகிறேன். என்னுடைய பேச்சிலேயும் இதுவரையில் அதைப்பற்றி மட்டும்தான் குறிப்பிட்டுக்கொண்டு வருகிறேன். அட்மினிஸ்டிரேட்டிவ் ரிலேஷன்ஷிப்பைபற்றிச் சொல்லவேண்டுமென்றால் ஆயிரத்தெட்டு இருக்கிறது. நம்முடைய கிண்டியில் நம்முடைய சர்க்கார் நடத்துகின்ற எஞ்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது, ஆனால் அதற்குப் பக்கத்திலே மத்திய சர்க்கார் நடத்துகிற தொழில் நுட்பக் கல்லூரியும் இருக்கிறது. இங்கே இருக்கின்ற பேராசிரியருடைய சம்பளம் 500 ரூபாயாக இருக்கலாம், அங்கேயிருக்கிற





பேராசிரியருடைய சம்பளம் 1,500 ரூபாயாக இருக்கலாம். இங்கே இருக்கின்ற பேராசிரியருக்கு இந்த வகுப்பா கண்ணுக்குத் தெரியும் ? இங்கே உட்கார்ந்துகொண்டு அதை எண்ணிக்கொண்கொண்டிருப்பார். நமக்கு வேலை அங்கே கிடைத்திருந்தால் நமக்கு 1,500 ரூபாய் கிடைக்குமே என்று எண்ணிக்கொண்டிருப்பார். இப்படி நிர்வாகத்திற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கி வந்திருப்பதைப்பற்றியெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது அந்தச் சந்தர்ப்பத்தை நாம் தான் உண்டாக்கிக் கொள்ளவேண்டும் அப்பொழுது பேசிக்கொள்ளலாம்.

இப்பொழுது நான் நிதித் துறை பற்றியும், கடன்பற்றியும் மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. காசிராமன் என்று நினைக்கிறேன், அவர்கள் பேசும்பொழுது, மத்திய சர்க்காரைப்பற்றிச் சொன்னார்களே தவிர அவர்கள் கொடுக்கின்ற மானியம், கிராண்ட் எவ்வளவு என்று தெரியுமா என்று கேட்டார்கள். இதைப்பற்றி திரு. கருத்திருமன் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும்கூடச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் வருமான வரியைப் பெற்றுக்கொண்டாலும் திருப்பி அது தரப்படுகிறதல்லவா என்று சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கும் நமக்கும் நிதித் தொடர்பு வரியிலே மட்டும் இல்லை; வரியிலே மட்டும் இருக்குமானால், மூன்றாவது, நான்காவது பைனான்ஸ் கமிஷன்கள் ஓரளவுக்கு அதைச் சரிப்படுத்திக்கொண்டு வருகின்றன. 66 சத வீதமாக இருந்தது, இப்பொழுது 75 சதவீதமாக்கப்பட்டிருக்கிறது ; எக்ஸைஸ் வரிகளைப் பொறுத்தவரையில் அது 50 வரையிலும் போக வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுக் கொண்டு வருகிறது. நாளா வட்டத்தில் வசூலிக்கப்படுகின்றவற்றில் பெரும்பகுதி மாநிலங்களுக்குப் பிரித்துச் தரப்படவேண்டுமென்ற நிலை நடைமுறைக்கு வரும். அது மட்டும்தான் நிதி சம்பந்தமான தொடர்பு என்றால் எனக்குக் குறை இருக்காது. மானியங்கள் அவர்கள் தருகிறார்கள், மானியங்கள் தருவதற்கு ஓர் இலக்கணம் இல்லை, வரையறை இல்லை, டிஸ்கிரஷனரி என்று சொல்லக்கூடிய அளவிலேதான், அவர்களுடைய இழுப்பிற்கும் பறிப்பிற்கும் தக்கபடி, அவர்களுடைய எண்ணத்திற்கும் ஏற்பாட்டிற்கும் தக்கபடி, போகிறவர் வருகிறவர்களுக்குத் தக்கபடிதான் அளவு குறைகிறது, விரிகிறது. இதை பைனான்ஸ் கமிஷன் நன்றாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. எல்லாவற்றையும்விட அரசியல் சட்டம் தீட்டப்பட்ட நேரத்தில் துளியும் எதிர்பாரா நிலையில் நாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வாழ்கிறோம். இதனுடைய விளையாகப் பேசுகின்ற முறையில், விரிவாகப் பேசாமல் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திட்டத்திற்கு நான் விரோதி அல்ல; திட்டமிட்ட பொருளாதாரத்தை நான் எதிர்க்கட்சியிலிருந்தபொழுதே வரவேற்றிருக்கிறேன். ஆகவே நான் திட்டம் வேண்டாம் என்கிறேன் என்று யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன்,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூன் 27

திட்டத்திற்காகச் செலவழிக்கின்ற பணம், அந்தப் பணத்தைப் பெறுகின்ற வகை, அதற்காகத் தீட்டப்படுகின்ற திட்டம், செயல்படுத்துகின்ற முறை என்ற எல்லாவற்றிலும் மத்திய சர்க்காருக்கு ஏகபோகம் அதிகப்படும் என்று அரசியல் சட்டம் எழுதப்பட்ட நேரத்தில் எண்ணிப்பார்க்கப்பட்டதே இல்லை. அதற்கான விதிமுறைகள் அதிலே இல்லை. கூர்ந்து கவனித்தால் வரி மூலமாகக் கிடைப்பதைவிட, கிராண்ட் ஆகவும், திட்டத்திற்காகவும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பது நாளாக நாளாகத் தெரியும். பைனான்ஸ் கமிஷன் மூலமாகப் பெறலாம் என்றால் வரிப் பங்கீடு வரையில்தான் பெறமுடியும்; கிராண்ட்களைக்கூட குறித்த அளவிலே தான் பெறமுடியும். திட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் வைத்ததுதான் சட்டம். இதை நான் சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்திற்கு 43 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்குமென்ற நம்பிக்கையோடு தான் திட்டம் தீட்டினோம். திட்டத்தை நாங்கள் தீட்டி முடித்தபிறகு, மத்திய சர்க்கார் திட்டத் துறையிலிருந்து அதிகாரி வந்து உங்கள் மாநிலத்திற்கு 43 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு, உங்களுக்கு 38 கோடி ரூபாய்தான் வரும், எனவே அதற்கேற்றபடி திட்டத்தை வெட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நியாயமா? நாங்கள் அவர்கள் சொல்வதைக் கேட்டு சற்றுத் தயக்கப்பட்டபொழுது அவரே சொன்னார், இதிலே 10 லட்சத்தை எடுத்து விடுங்கள், இதிலே 6 லட்சத்தை எடுத்துவிடுங்கள் என்றெல்லாம் சொன்னார், காரணம் என்ன? திட்டத்திற்கான பணத்திற்கு நான் இவர்களைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. விதி முறைகளை அவர்கள் மீறி விடுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசிய நேரத்தில் நம்முடைய மாநிலத்திற்கு 7.14 சதவீதம் ஒதுக்கப்படவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் ஒப்புக்கொண்டது, பிளானிங் பாடி ஒப்புக்கொண்டது, நம்முடைய சர்க்காரை நடத்தியவர்கள் ஒப்புக்கொண்டுவந்தார்கள். ஆனால் போன வருடம் அப்படி ஒதுக்கப்பட்ட 43 கோடி, 44 கோடி ரூபாயில் என்று நினைக்கிறேன் அதில் 5 கோடி ரூபாயை குறைத்துக் கொண்டார்கள். இப்பொழுது ஒப்புக்கொண்ட விகிதாசாரப்படி தர வேண்டாமா? இப்பொழுதும் 5 கோடி ரூபாயைக் குறைத்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட தொடர்புகள் திருத்தியமைக்கப்பட வேண்டாமா என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

வீரத்திற்காகச் சொல்லலாம், தன் கையே தனக்குதவி என்று. இது மிகச் சாதாரணமானது என்பதை இதைச் சிறுபிள்ளைகளுக்குப் பாடமாக வைத்திருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இதைக் கல்லூரிகளிலா சொல்லிக்கொடுக்கிறார்கள்? எளிதாகப் புரியக்கூடியது இது. தன் கையே தனக்கு உதவி என்றால் மத்திய சர்க்காருடைய கையை நான் வேறு [illegible] கருதவில்லை. மத்திய சர்க்காரைப்பற்றி குறிப்பிடும்பொழுது இந்த அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன், [illegible]



1967 ஜூன் 27] [திரு. சி. என். அண்ணாதுரை]

என்று, அதாவது பங்குகொண்டவர்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர மேல் அதிகாரம் படைத்தவர்கள் என்பதைக் கூட நான் முழு அளவுக்கு ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. நிதி நிலைத் தொடர்பில் நமக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற தொடர்பு திருத்தியமைக்கப்படவேண்டுமென்பதில் இந்த அரசு திட்டவட்டமான கருத்துக் கொண்டிருக்கின்றது. நான் இப்படிச் சொல்வது எங்களால் செய்யமுடியாமல் அவர்கள்மீது பழிபோடுவதற்காக அல்ல. ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று வழியிருந்தால் நீங்களே போடுங்கள், ஏன் மத்திய சர்க்காரிடம் போய்ப்போய் வருகிறீர்கள் என்று கூறினார்கள். பல காரியங்களை முன்னால் இருந்த அரசு செய்து மத்திய சர்க்காரிடம் போய்போய் வந்த கதைகள் நிறைய இருக்கின்றன. அது திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும், திரு. விநயகம் அவர்களுக்கும் தெரியும். அதைச் சொல்வது தேவையோ தேவையில்லையோ என்றாலும், பல காரியங்களை முன்பிருந்த அரசு செய்துவிட்டு மத்திய சர்க்காரை உதவியளிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். திரு. காமராஜ் அவர்களை நான் சந்தித்த பொழுது அவர் கூடச் சொன்னார், நீங்கள் சண்டை போட்டால் நடக்காது, செய்துவிட்டுக் கேளுங்கள் என்று சொன்னார்கள்.

THIRU K. VINAYAKAM: The Hon. Chief Minister is letting out a secret.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதில் சீக்ரெட் ஒன்றுமில்லை. எனக்கும் அவருக்குமுள்ள நட்பு எல்லோருக்கும் தெரியும். அவருடைய முறைகள் என்ன என்பது தெரியும். அவருக்குமட்டும்தான் அது முறையாக இருக்கும். கொடப்பா என்று அவர் சொன்னால் அவர் நான்கு தடவை கேட்டால் இரண்டு தடவையாவது கிடைக்கும். ஆனால் நான் சொன்னால், உட்கார், கணக்குக் கொடு என்றுதான் என்னிடம் சொல்வார்கள். அவர் சொன்ன முறை அவரைப் பொறுத்தவரையில் சரி, எனக்குச் சரியாக இருக்காது. செய்துவிட்டுக் கேட்கலாம் என்று அவர்கள் சொன்னார்கள். செய்துவிட்டுக் கேட்கும்பொழுதுகூட நான், ஃபுட் சப்ஸிடி, பணம் கொடுங்கள் என்று கேட்கவில்லை. அவர்களைக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. பைனான்ஸ் கமிஷன் அறிக்கையைப் பார்ப்போமானால் அதிலே மாநில சர்க்கார் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கேட்டாலும், டியர்னஸ் அலவன்ஸ் சம்பந்தமாகக் கஷ்டங்கள் ஏற்பட்டாலும், அதற்கு மத்திய சர்க்கார் உதவவேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. ஆகவே, அப்படிக் கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது, நியாயம் இருக்கிறது. ஆனால் நான் அப்படிக் கேட்கவில்லை. நான் அவர்களிடம் சொன்னது, எந்த முறையில் வேண்டுமானாலும் நான் கேட்பதற்குப் பெயர் வைத்துக்கொள்ளுங்கள், மைனர் இரிகேஷன் என்று வைத்துக்கொண்டாலும்சரி, ஃபுட் சப்ஸிடி என்று வைத்துக் கொண்டாலும்சரி, எப்படியாவது 10 கோடி முதல் 15 கோடி ரூபாய்வரை எனக்குக் கொடுத்தால் எங்கள் மாநிலத்தில் சிறிய

பாசனத் திட்டத்தை எங்களுடைய அதிகாரி திரு. ராயப்பா
அவர்கள் கொடுத்திருக்கின்ற திட்டத்தை நிறைவேற்றுவதன்
மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கி, உணவு நெருக்கடியைத்
தீர்த்து அண்டை மாநிலங்களுக்குக்கூட உணவு தரத்தக்க நிலையில்
திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று கேட்டோம். ஸப்
சப்ஸிடியாகக் கேட்கலாமா என்று சொல்வதற்கு வழியில்லை.
அப்படியே வைத்துக் கொள்ளுங்கள், கேட்டால் என்ன தவறு?

118 கோடி ரூபாய் இந்தியா முழுவதற்குமாகச் சேர்த்து
உணவுக்காக சப்ஸிடி தரப்படுகிறது. நாம் அரிசி சாப்பிடுகிறவர்
களாக இல்லாது கோதுமை சாப்பிடுகிறவர்களாக இருந்தால் 10
கோடி ரூபாயாவது நமக்குக் கிடைத்திருக்கும். நாம் அதை
இழந்து விட்டல்லவா இருக்கிறோம். அப்படி இருக்கும்போது
இந்தியா முழுவதும் தருகிற அந்தச் சலுகையில் ஒரு பகுதியை
எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்பதிலே எந்தவிதமான
நியாயக் குறைவும் இல்லை. மறுபடியும் நான் கவனப்படுத்து
கிறேன்; நான் அதற்காக உதவித்தொகை கொடுங்கள் என்று
கேட்கவில்லை; மற்றவற்றைப்பற்றிச் சொல்லும்போது இதையும்
இணைத்து எடுத்துக் காட்டப் பயன்படுத்தியிருக்கிறேன்.

நாங்கள் மத்திய சர்க்காரோடு மோதிக் கொள்வோம் என்று
கருதத் தேவையில்லை. ஜூலை மாதம் 23-ம் தேதி மோதுகின்ற
காரியமல்ல. சேலம் இரும்பாலைபற்றிப் பதினைந்து வருஷங்
களாகப் பேசிப் பேசி நம்முடைய மக்கள் இன்றைய தினம் சலிப்
படைந்து போயிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி அவர்
களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. முன்னால் இருந்த காங்கிரஸ்
அரசும் அதைப் பெற்றுத் தரவில்லை; இப்போதுள்ள திராவிட
முன்னேற்றக் கழக அரசும் பெற்றுத் தரவில்லை; சேலம் இரும்
பாலை என்பது முடியவே முடியாத ஒன்றோ என்று மக்கள்
எண்ணக் கூடும். சேலம் இரும்பாலை என்பது எவ்வளவு
நியாயத்தின் அடிப்படையில் கேட்கப்பட்டது? இன்னும்
சொல்லப்போனால் நாம் வெட்கப்படவேண்டும்; மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் அது இணைக்கப்பட்டுவிட்டது;
இணைக்கப்பட்டுவிட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று
மத்திய சர்க்கார் சொல்லுமானால் அதை முச்சந்தியில்
நிறுத்துவோம் என்று நாங்கள் சொல்லக் கூடாதா? முச்சந்தி
என்பதற்கும் சந்துமுனை என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல்
காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.
முச்சந்தி என்பது கண்ணியமானது; சந்து முனை என்பது தரக்
குறைவானது. உங்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலர் முச்சந்
திக்கும் சந்துமுனைக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக்
கொண்டிருக்கிறார்கள். உங்களால் முடிந்தால் அவர்களைத்
திருத்துங்கள்.

முச்சந்தி என்பது "பப்ளிக் ஃபோரம்". அதைத்தான் [illegible]
என்று சொல்வது. முச்சந்தி என்பது [illegible]
போல் இருக்கிறது என்றால் மக்கள் மன்றத்தில் என்று சொல்





லாம். மக்கள் மன்றம் என்பது கண்ணியமான வார்த்தை. அவ்வாறு சொல்லத் தயாராக இருக்கிறேன். மக்கள் மன்றத்தில் இவை விளக்கப்பட வேண்டும். மூடி மூடி வைத்துப் பயன் இல்லை. 23-ம் தேதி அதை விளக்குவதற்கான நாள்; எழுச்சி தருகிற நாள் என்ற முறையில் பல கட்சிகளும் வரவேற்றிருக்கின்றன. காங்கிரஸ் தான் 'சேரமாட்டோம்' என்று விட்ட அறிக்கையைப் பார்த்தேன். சுதந்திராக் கட்சி, கம்யூனிஸ்டுகள்—அதிலே வலது சாரி கம்யூனிஸ்டுகள், இடதுசாரி கம்யூனிஸ்டுகள்—தமிழரசுக் கழகம், சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி எல்லோருமே ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஊரெல்லாம் கூடி தேர் இழுக்கும் போது ஒரு கை கொடுங்கள் என்றால், இந்தத் தேரை இப்படி இழுக்கக்கூடாது, பின்னால் இருந்து தள்ளவேண்டும் என்று யாரோ உங்களை என்னவோ செய்வார்கள் என்ற பயத்தில் வர மாட்டேன் என்று சொல்லுகின்றீர்கள் என்று நான் கூறவில்லை, மக்கள் கருதிக் கொள்ளுவார்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சியும் இந்த சேலம் திட்டத்திலே, தூத்துக்குடித் திட்டத்திலே நல்ல ஆர்வத்தோடு இருக்கிறது என்பதை மெய்ப்பித்துக் கொள்ளு வதற்காக இந்த எழுச்சி நாளிலே கலந்து கொள்ள வேண்டுமென்று மறுபடியும் அன்போடு அழைக்கிறேன். அந்தப் புள்ளி விவரங் களில் இன்னும் ஒன்றை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

காங்கிரஸ் மெம்பர்கள் வரியே போட மாட்டோம் என்று சொல்லிவிட்டு வரி போட்டுவிட்டதாகத் தவறான ஒரு வாதத்தை எடுத்துச் சொன்னார்கள், வரி தேவைதான் என்பதை இப்போது ஒத்துக் கொண்டார்கள் என்று கூறினார்கள். சொல்லப்போனால் இப்போது போடப்பட்டது வரியே அல்ல. இருக்கிற வரியைக் குறைத்து ஏற்றுவதை வரி என்று சொல்லுவதற்கில்லை. புஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கிவிட்டு நஞ்சை நிலத்திற்கு வரியை நீக்க வில்லையே என்று சொன்னார்கள். நஞ்சை நிலத்திற்கும் வரியை நீக்குவதற்குத் தீவிரமான ஆலோசனையில் இருக்கிறோம் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன். தெரிவித்துக்கொண்ட பிறகும் சொல்லுகிறேன்—எப்படிச் சர்க்கார் செய்கின்ற வசதிகள் முதலிலே ஏழைக்குச் செய்து கொடுத்து விட்டுப் பிறகு கொஞ்சம் வசதியுள்ளவர்களுக்குப் போகவேண்டுமோ—அதைப் போல்தான் நிலத்திலே கூட புஞ்சை என்பது ஏழை; நஞ்சை என்பது கொஞ்சம் வசதியுள்ளது. ஏழை நிலத்திற்கு முதலிலே வரியை நீக்கிவிட்டோம். அது கட்டபொம்மன் காலத்திலிருந்து கேட்கப் பட்டு வருகின்ற ஒன்று. 'வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் கப்பம்?' என்று கட்டபொம்மன் காலத்திலேயே கேட்கப்பட்டது. அதை இப்போது செய்திருக்கிறோம். மற்ற தற்கும் வரி நீக்குவதற்கு ஆய்வு நடத்தப்படும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.

விவசாய வருமான வரிக் கணக்கு வைப்பதிலுள்ள கஷ்டங்களைப் பற்றியெல்லாம் நண்பர்கள் சொன்னார்கள். குறிப்பாக, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் வெகு விளக்கமாகச்

[திரு. சி. என். அண்ணதுரை] [1967 ஜூன் 27

சொன்னார்கள். அவர்கள் எப்போது பேசினாலும் உற்றுக் கேட்டால் விவசாயிகளுக்காகத்தான் பேசுவார். கட்சிப் பாகுபாடு என்பது கூட அதிலே இல்லை. காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதும் அதைத் தான் கேட்டார். அவரைப்பற்றி நானும் கனம் சுப்பிரமணியம் அவர்களும் வேடிக்கையாகப் பேசிக்கொள்வது வாடிக்கை. " This is Karuthiruman's economy " " இது கருத்திருமனின் பொருளா தாரம் " என்று சொல்லுவோம். அதிலே, முக்கியத்துவம் இருக் கிறது, இல்லையென்று சொல்லவில்லை. விவசாயம் செய்பவர் களுக்கு உற்சாகம் அளித்தால்தான் விவசாயம் வளரும் என்பதை நான் முழுக்க முழுக்க ஒத்துக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமோ, அதை அளிக்க வேண்டுமென்பதையும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், கணக்கே வைக்க முடியாது என்று சொல்வது 10 வருஷத்திற்கு முன்னாலே வேண்டுமானால் முடியாமல் இருக்கலாம். இப்போது கொஞ்சம் வளர்ந்திருக்கிறோம். இப்போது இருக்கிற சிரமம்கூட அடுத்து ஏற்படாமல் இருக்கலாம். ஒன்றை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். படித்தவர்கள் வேலைக்குப் போவார்கள், படிக்காதவர்கள் தான் விவசாயம் செய்வார்கள் என்பதை மாற்றவேண்டும். மதிப்பிற் குரிய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் பி.எஸ்.ஸி. படித்த வர்கள். அவர்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, உத்தியோகத்தை நாடிச் செல்லவில்லை. பல முற்போக்கான விவ சாயிகள் ஒவ்வொரு கிராமத்திலும் நாலைந்து பேர்களாவது உண்டா கிக்கொண்டு வருகிறார்கள். 15 வருஷங்களுக்குப் பிறகு கிராமப் புறப் பண்ணைகளுக்குப் போனால் எம்.ஏ. படித்தவர்களும், பி.ஏ. படித்தவர்களும் டிராக்டர்களை ஓட்டிக் கொண்டிருப்பதைப் பார்ப் போம். அப்போதுதான் நம்முடைய நாட்டுக்கு நல்ல காலம் என்று கருதலாம். அப்படிப்பட்ட ஒரு வளர்ச்சி விவசாயத்திற்கு இயற்கையாக ஏற்படுகிறபோது கணக்கு எழுதமுடியாது என்பதை அவ்வளவாக ஒத்துக்கொள்ளுவதற்கில்லை என்றாலும். எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்லாமல் நம்முடைய அவிநாசி தொகுதி உறுப்பினர் அவர்கள் வெகு உருக்கத்தோடு சொன்னார்கள், திரு. மாரிமுத்து அவர்களும் சொன்னார்கள். இவர்கள் எல்லாம் சொன்னதில் என்னுடைய மனத்தை வெகுவாக மாற்றிவிட் டார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த கம்பவுண்டிங் என்பதை வைத்துக் கொண்டு அதிலே எதிர்பார்க்கின்ற பலனையும் பெறுவதற்கு மாற்று என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டேன். அவர் விவசாயிகளைக் கலந்து சொல்வதாகச் சொன்னார்கள். அதற் கான மாற்றாக நான் கருதுவது, 12½ ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடிய அந்த அளவைக் குறைத்துப் போடப்பட்டிருக்கும் 5 பைசாவை 15 பைசாவாக்கலாம் என்று உறுப்பினர்கள் பேசினார்கள், வேண்டுமானால் மூன்று மடங்கு ஆக்குங்கள், நான்கு மடங்கு ஆக்குங்கள் என்று பேசினார்கள், அந்த அளவுக்கு வேண்டாம், அந்த விகிதத்தை இரண்டு மடங்கு உயர்த்தி, 12½ ஏக்கர் என்பதை 5 ஏக்கர் என்று குறைத்து கம்பவுண்டிங்



1967 ஜூன் 27] [திரு. சி. என். அண்ணதுரை]

வைத்துக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக் கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். (ஆரவாரம்)

இதிலிருந்து, நீங்கள் என்னைப்பற்றி மூன்று கருத்துக்களைக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். விவசாயிகளிடத்தில் அக்கறை இருக்கிறது என்பது ஒன்று; அதே நோக்கிலே சர்க்காருடைய வருமானம் குறையக்கூடாது என்பதிலே உள்ள அக்கறை இரண்டாவது. மூன்றாவது உங்களை எவ்வளவு மதிக் கிறேன் என்பதாகும். (ஆரவாரம்) இந்த மூன்று வகையிலே, இதற்கான திருத்தங்களை எல்லாக் கட்சியின் தலைவர்களும் உட்கார்ந்துகூடப் பேசலாம் என்று துவக்கத்திலேயே நினைத்துக் கொண்டிருந்தேன். காலையில்கூட கனம் உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் என்னிடம் பேசினார்கள். " The last straw that broke the Camel's back " கடைசியாக வந்த சுப்பையா முதலியார் அவர்கள் பேச்சுக்கூட, அதிகமாகப் பேச வில்லை, அவர் பார்த்த பார்வையே என்னவோ போல் இருந்தது, 'ஒத்துக்கொள்ளவேண்டும்' என்று இருந்தது.

ஆகவே விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு இந்த அரசு எப்போதும் தயாராயிருக்கிறது என்பதை இப்போது நான் ஏற்றுக்கொண்டிருப்பதில் இருந்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவைபற்றியெல்லாம் நான் குறிப்பிடாமல் விட்டுவிட்டால் குறிப்பிடவில்லையே என்று யாரும் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனெனில் சிலர் பட்ஜெட் பற்றி சொன்னார்கள், என்ன பட்ஜெட் இது, இதில் கைத் தறிபற்றி ஒன்றும் காணோமே, பொற்கொல்லர்கள்பற்றி ஒன்றும் காணோமே என்று. பட்ஜெட்டில் கோடிட்டுக் காட்டுவது தவிர எல்லாவற்றையும் புகுத்துவது என்பது முடியாத காரியம். அதே போல் நானும் அங்கத்தினர்கள் கூறிய எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுவது முடியாத காரியம். ஆனால் அவர்கள் சொன்ன ஒவ்வொன்றையும் அவற்றிற்குத் தரப்படவேண்டிய மதிப்போடு நான் கவனித்திருக்கிறேன் என்பதையும், அவற்றைக் குறித்துவைத்துக்கொண்டிருக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கைக்கு உங்களுடைய முழு ஆதரவையும் தந்து, எங்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, on a point of clarification. Will the Government repeal the Travancore-Cochin Agricultural Income-tax Act, as far as the Kanyakumari district is concerned, in case this concession is granted to the agriculturists in other parts of the State?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை: அங்கத்தினர் அவர்கள் நினைவுபடுத்தியதை, இதுபற்றி எல்லாத் தலைவர்களும் கலந்து பேசுகிறபோதுப் பேசலாம். அவர்கள் விளக்கம் கேட்ட

தற்குத் தொடர்பாக இன்னொரு விளக்கத்தையும் நான் சொல்ல இதை வாய்ப்பாகக் கொள்கிறேன். பல விஷயங்கள் பட்ஜெட்டில் வரவில்லை என்பதால், என் பேச்சில் வரவில்லை என்பதாலும் அவற்றில் எனக்கு அக்கறை இல்லை என்று கருதத் தேவையில்லை. அப்படி நான் பட்ஜெட்டிலே குறிப்பிடாமல், என் பேச்சிலே குறிப்பிடாமல், ஆனால் என் உள்ளத்திலே மிகுந்த மதிப்பான இடத்தை வைத்திருக்கிற பிரச்னை என்.ஜி.ஓ.-க்கள் பிரச்னையாகும். பல நண்பர்கள் இங்கு சொன்னார்கள், என்.ஜி.ஓ-க்களுக்காக வாதாடினார்கள். இவ்வளவு நிரம்ப நண்பர்கள் என்.ஜி.ஓ.-க்களுக்குக் கிடைப்பதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி. என்.ஜி.ஓ.க்கள் எல்லாக் கட்சிகளின் நண்பர்களாக வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் பிரச்னைபற்றி அவர்களுடைய அமைப்பிலே சம்பந்தப்பட்டவர்களிடத்திலே நான் கலந்து பேசியிருக்கிறேன். இப்போதிருக்கிற நிதிநிலை நெருக்கடிகளை அவர்களிடத்தில் எடுத்து விளக்கியிருக்கிறேன். இப்போது உணவு சப்ஸிடி கொடுப்பதால் என்.ஜி.ஓ.-க்கள் குடும்பங்களில்கூட, ஒரு குடும்பத்திற்கு ஏழிலிருந்து பத்து ரூபாய்வரை அவர்களுக்கு புதிய வசதி கிடைத்திருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன். அவர்கள் கேட்டிருப்பது ஸிடி காம்பன்சேட்டரி அலவன்ஸும், சென்னை நகரம் 'ஏ' நகரமாக ஆக்கப்பட்டதால் ஏற்படுகிற அந்த ஸிடி காம்பன்சேட்டரி அலவன்ஸும், இன்னும் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் போன்றவை. அவற்றைப்பற்றியெல்லாம் புள்ளி விவரங்கள் எல்லாம் சேகரிக்கும்படி, அதுபற்றிய முழு விவரத்தை என்னிடம் தரும்படியும் இன்னும் சில மாதங்களில் நிதிநிலைமை நல்லபடியாக வளர வளர அதுபற்றியெல்லாம் கவனிப்பதாகவும், மற்றும் உடனடியாக அவர்கள் கேட்ட அந்தப் பிரச்னை இல்லாவிட்டாலும், அவர்களுக்கு வசதி தரக்கூடிய வேறு சில நன்மைகளை அவர்களுக்குச் செய்யலாம் என்று நான் வாக்களித்திருக்கிறேன். ஆகவே, என்.ஜி.ஓ-க்கள் விஷயத்தில் நாங்கள் அக்கறையற்று இருந்துவிட்டோம் என்று யாரும் கருதமாட்டார்கள். சில பேர்கள் சொல்வார்கள். சொல்கிறவர்களைச் சொல்ல வேண்டாம் என்று நான் தடுக்க விரும்பவில்லை. எதையாவது சொல்லி வலிவு தேடிக் கொண்டு இந்தப் பொறுப்பை என்னிடமிருந்து எடுத்துக் கொண்டால் எனக்கு ரொம்ப நிம்மதி ஏற்படும். எதற்கு வேண்டுமானாலும் வலிவு தேடிக்கொள்ளுங்கள். ஆனால் கைக்கு வலிவு தேடவேண்டுமென்றால் டம்பல்ஸ் எடுத்து வலிவு தேடிக்கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு வலிவு வரவேண்டும், வலிவு வர வேண்டும் என்று தரையைப் போட்டுக் குத்திக் கொண்டிருந்தால் வலி வருமே தவிர வலிவு வராது. ஆகவே வலிவு தேடிக்கொள்ள எந்த முறையைக் கையாண்டாலும் என்.ஜி.ஓ.-க்கள் விஷயத்தில் எங்களுக்கு அக்கறை இல்லை என்ற எண்ணத்தில் நீங்கள் இருக்கத் தேவையில்லை. அவர்கள் விஷயத்திலும் நாங்கள் மிகுந்த அக்கறை காட்டித் தக்க நேரத்தில் தக்கதைச் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 3. அறிவிப்பு

### பேரவை அலுவல் ஆய்வுக்குழு தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய அலுவல்களை முடிக்கும் முன்னால் அறிவிப்பு ஒன்றுள்ளது. நேற்று காலை நடந்த அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானப்படி தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை இந்தப் பேரவை நாளை 28-6-1967 பிற்பகல் 3-30 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். பி.ப. 1-53

### A. Statutory Rules and orders.

† 203. *Notification issued with G.O. Ms. No. 730, Home, dated the 3rd March 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles taxation Act, 1931, in respect of certain vehicles belonging to the Project Manager, United Nations Development Programme, Ground Water Investigation in Madras State with effect from the 30th July 1966. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931].*

† 204. *Notification issued with G.O. Ms No. 13, Revenue, dated the 3rd January 1967, making certain amendments to the Madras Agricultural Income-tax Rules, 1955, published at pages 649–665 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 21st December 1965. [Laid on the Table of the House under Section 61(3) of the Madras Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955).]*

### B. Reports, Notifications and Other Papers.

* 52. *Annexure to the Madras Motor Vehicles Taxation (Amendment) Bill, 1967.* D

V 211, 51 N67

N67.2.8

65007

† Laid on the Table of the House on 26th June 1967.

* Despatched to Members on 24th June 1967.